பஜனை கீர்த்தனை

ஸ்ரீ

ஸ்ரீமதேராமானுஜாயநம:

ஸ்ரீநரஸிம்மபரப்பிர்ம்மணேநம:



# பிரக்லாத சரித்திரம்.

இஃது

திருக்குடந்தை

மகா-ள-ள-ஸ்ரீ சக்ரபாணி ஐயங்காரவர்கள்

திருக்குமாரத்தியாராகிய

**வேம்பு அம்மாளவர்களால்**

திருவாய்மலர்ந்தருளியதை

நெடுமரம் வித்துவான்

மகா-ள-ள-ஸ்ரீ ராமைய்யங்கார்

மகா-ள-ள-ஸ்ரீ சேஷப்பைய்யர்

அவர்களால் பரிசோதிக்கப்பட்டு

கும்பகோணம்.

லக்ஷ்மிவிலாஸ பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

ராக்ஷஸ ௵ தைமீ

இரண்டாம்பதிப்பு காப்பிகள் 1000



அணா



ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீவரவரமுனயேநம:

# பிரக்லாதசரித்திரம்.



## ஆசாரியன் தனியன்.

மண்ணுலகில் வாழுமிந்த மனிதரெல்லாம்
மாதவன்றன் மலரடியை மகிழ்ந்துசேர
எண்ணரிய களிப்புடனே இங்குதித்து
எல்லவர்க்கும் சங்குசக்ராங் கிதமளித்து
பண்ணியதோர் பழவினைகள் பற்றறுத்து தன்
பாதமூலந்தளிலே யவரைச்சேர்க்கும் சிறுபுலியூ
ரண்ணன் றிருவடிக்கே யன்புடனே தாஸியானேன்
அவாளடிமலரில் துஸியானேன். (க)

## இதுவுமது.

எம்பெருமானுருரைத்த இனியசொல்லமிர்த
பாஷியத்தை க்ரஹித்து
அம்புவியில் ஜெனித்த மனிதர்களையெல்லாம்
அருநரகத்திலழுந்தாதவகை செய்துவைத்து
இன்பமுடன் சிறுபுலியூர்தனிலுதித்து
யெல்லவர்க்கும் ஸன்மார்க்கத் துபதேசித்து
அன்புடனே கண்ணனை ஆராதித்த
அண்ணன் திருவடிமலரை நம்பினேனே. (உ)

## விருத்தம்.

புத்திரகளத்திராதி மித்தையென்று கணித்து
உலகத்து வாழ்வுதனை வெறுத்து
மெத்தவினையத்துடனே பக்தியாய்ப் பணிந்துகேட்ட
பரிக்ஷித்து மஹாராஜனைப் பார்த்து

சித்தந்தனில் மகிழ்ந்து வியாஸபுத்திரரும்
ஸ்ரீஹரி திருவடிதனை தியானித்து
நித்தியானந்த சரித்திரத்தை உரைத்தாதரித்த
சுகப்பிர்ம்ம ரிஷியைப் பணிந்தேனே. (௩)

## வெண்பா.

முக்திக்கு வித்தாம் முதலுருவைத்யானித்த
பக்தன் ப்ரக்லாதன் சரித்திரத்தை—பகருதற்கு
இம்மானிலத்திலுயர் குருகூரில் வந்துதித்த
நம்மாழ்வார் திருவடியே காப்பு. (௪)

## பெருமாள் கலித்துறை.

மாரன்மயக்கிடும் வருவெஞ்செலேயில்சிக்கி மதிகலங்கும் இப்
பாரிலுள்ளோரே உயிர்பாவனுமாகும் வகையுரைப்பேன்
வாரணமாதி மூலமென்றழைத்திட வந்து காத்த
காரணவஸ்துவை யல்லால்கதிவேறில்லை கண்டுசொல்வீர் (௫)

## உடையவர் கலித்துறை.

பாமரனுய் பிரகிருதியிலுழலு மெனக்காகவந்து
நேயமுள்ள ஆஸூரிகேசவப்பெருமாள் வயிற்றிலுதித்து
ராமனைப் பயின்ற கரிமுகிலைநேரே காண்பிவைத்த
ராமானுஜன் திருவடியே கெதியென்றிரு நன்நெஞ்சமே (௬)

## திருமந்திரபிரவாகம்.

| | |
|---|---|
| அடியவர்கள் நெஞ்சிலுதிக்கின்ற | மந்திரம் |
| அஷ்டாக்ஷரமெனு | மந்திரம் |
| அறுவகைச் சமயங்களறிவரிய | மந்திரம் |
| அயன் தினம் துதிக்கும் | மந்திரம் |
| வடிவுடைய லெக்ஷிமி வஸிக்கின்ற | மந்திரம் |
| வைகுந்தத்தில் வாழும் | மந்திரம் |
| வஞ்சகர்க ளஞ்சுபேர் வாராமல் காக்கும் | மந்திரம் |
| வானேற வழிகாட்டும் | மந்திரம் |
| முடியுடையவானோர் முதல்த்தனி | மந்திரம் |
| மூவுருவில் முதலாம் | மந்திரம் |
| முக்குணமன்றி வேதாந்தத்தில்வாழு | மந்திரம் |
| மூலமுதற்பொருளாம் | மந்திரம் |

செடியாய் வல்வினைகள் தீர்க்கின்ற மந்திரம்
ஜெகத்துக்காதார மந்திரம்
க்ஷேமமுடையநாரதர் துதிக்கின்ற மந்திரம்
ஸ்ரீசாரங்கதரனென்னு மந்திரம் (எ)

## கீர்த்தனம்.

இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

### பல்லவி.

நம்பிகெட்ட பேரில்லை ஸ்ரீமந்
நாராயணனுவென்ற சொல்லை நம்பி

### அனுபல்லவி

எம்பெமருானுட யிணையடி தனில்மிக
அன்புடனே அனு தினமும் பஜித்தோர் நம்பி

### சரணங்கள்.

சித்தந்தனிலேயவர் முக்தி பெறநினைத்து
வியர்த்தவாழ்வு வெறுத்து அரிபதம் துதித்து
மனமதைப் பதைத்து பேரின்பத்தில் குதித்து
உத்தமபுருஷர்க ளத்தனைபேர்களும்
ஞானமது சலித்துமெத்தவே பிர்ம்மாதிமுதலாயுள்ள
இந்திரசந்திரசம்பு குபேர யின்னமனேக
வசிட்டபராசர வ்யாஸகௌதம
அகஸ்தியபார்க்வனாரத ஸனகாதிஉபமன்னு
மார்க்கண்ட புண்டரீக ஜெனமேஜெய முதலாய்
அரிச்சந்திர இக்ஷ்வாகு நளனுடைசந்திரகாச
முசுகுந்தநந்தனும் அம்பரீஷன்பிராதா
லெட்சுமணபரதசத்து ருக்ன ருக்மாங்கத
அங்கததர்மாங்கத திருவபிர்க்லாத
அஜாமிளகெருட செஜேந்திர விதுரருடனே
பீஷ்ம தர்ம அர்ஜ்ஜுனபீம நகுல சகதேவ
அக்ரூரரணஜித்து ஜெடாயுமுதலாய்
உக்ரசேனவஸு தேவருடக்கூட
ஜானகி ஸர்வாணி ஸரஸ்வதி பாகீரதி
மயித்ராரேயகமலா அகல்யா அருந்ததி
அனுஸூயை த்ருஜடை பாஞ்சாலி சபரி
ஸத்தியாவளி ரா[illegible]ருக்மணி

ரிஷிபத்னிகோபி குப்ஜைமுதலாய்
நிச்சல பக்தியாய் ஸ்ரீசாரங்கராஜனை நம்பி (௮)

## விஷ்வக்சேனர் கீர்த்தனம்.

இரா-துஜாவந்தி சாபுதாளம்.

### பல்லவி

உத்தம விஷ்வக்சேனர்
பொத்தாமரைப் பாதத்தை
ஸாத்திய மாகவே
சித்தமுருகிப் பணிந்தேன்

### அனுபல்லவி.

நித்தியமும் பிர்ம்மருத்தி ரேந்திராதியர்கள்
பத்தியுடன்பணியும் சுத்தஸ்வபாவரான உத்தம

### சரணங்கள்.

தர்மபுததிரர்செய்த ராஜஸூயயாகத்தில்
துர்ம்மதி சிசுபாலன் ஸ்வாமிபாதத்தில் சேர
நிர்மலசித்த தர்மர் ஸந்தேகித்துக்கேழ்க்க
பிர்ம்மபுத்திரர் சொன்ன மர்மத்தெடுத் துரைக்க உத்தம
முத்தமிழுந்தெரியா சுத்தபேதை நானய்யா
பக்தன் பிரக்லாதன்கதை நத்தியாரம்பஞ்செய்ய
சித்தசெனையகிழ்ந்து பெத்தசாரங்கதரர்க்கு
அத்தியந்தம் அபிமத வஸ்துவாகியிருக்கும் உத்தம (௯)

## ஸரஸ்வதி விருத்தம்.

வாணீசதுர்முக வராணிதிவ்யாம்பரதரீணி கருணநயனீ-நீல
வேணிஸர்வாபரணம் பூணிதிவ்யபுஸ்தக பாணிசரதிந்துவதனீ
தூணிலுதித்தவரை பேணியுரைப்பதர்க்கு வானீயென்றவுதனில்-நீ
மாணிக்கமேயென்னி தானிக்கவேகவியை கோணிப்போகாமல்செய்நீ

## கீர்த்தனம் கண்ணிகள்.

இரா-சகாண.

பத்மாஸனராணி உத்தமபுஸ்தகபாணி
ரத்னபூஷணி மெத்தமிருதுநீலவேணி

சொர்ப்பண கபோலே விர்ப்புருவசீலே
அர்ப்புதமின்னலே சர்ப்பசயனன்மருமகளே
சாரங்கராஜன் பக்தரின் கதையை
பூரணமாகச்செய்து வைப்பாய்நீயே (அ)

ஆசாரியன் கீர்த்தனம்.

இரா-யெதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

பல்லவி

அண்ணன் திருவடிமலரை ஆச்ரயத்தபேர்களுக்கு
விண்ணவர்க்கரிதாம் பதம் விரவில்வரும் சொன்னேன்

அநுபல்லவி.

மண்ணிலுள்ளோரைக் கரையேத்த எண்ணரியபுகழ்படைத்த
கண்ணனே இந்தவதாரம் பண்ணினுனென்று அன்புடன் அண்

சரணம்.

செந்தாமரை மலரடியும் சிரங்தகணே முழங்தாளும்
அந்தமுள்ளதுடையும் யுடைதும் அரைநாளும் திருவரையும்
சிந்தைகவரும் வயரும் உந்தியுடன் திருமார்பும்
சந்திரனைப்பழிக்கும் வலம்புரிபோல் கழுத்தழகுமுள்ள அண்

அன்னையைப்போலாதரித்து ஆழிசங்கமளிக்குங்கையும்
கண்ணுடிபோல் கபோலமும் கருணைத்ததும்பும் கண்ணும்
உன்னிதரகஸ்யார்தத் துளைக்கும் திருவாயழகும்
நன்னுகதாழ்ந்திலங்குழைக் காதுந்திருமூக்குமுள்ள அண்

வில்லைபழிக்கும் புருவமும் விஸ்தாரமான நெத்தியும்
கல்லதுவாதெசோர்த்வ புண்டரத்துனுடையழகும்
சொல்லரிய முகத்தழகும் ஸுகந்த சிகுரபெந்தமும்
யெல்லையத்த ஸுகத்தைதரும் சுத்தஸத்வகுணமுடைய அண்

சீதளமான ஹிரதயமும் ஸ்ரீ பெரும்பூதூரில்வாழும்
நாதனுக்கும் கைங்கரியம் நாடிச்செய்யும் சீலையும்
வீதானுதன்போல் தயையும் ஸ்ரீ சாரங்கதரருடனே
மாதுகோளவல்லியை மகிழ்ந்துஸேவித்திருக்குமெங்கள் அண் (கக)

## உடையவர் கீர்த்தனம்.

இராகம்-உசானி-ரூபதாளம்

### பல்லவி.

அன்னவயல் பூதூரார்
பொன்னுங்கமல பாதத்தை
நன்றுயொன் சிரசால்ப்பணி
சொன்னேன் மனஸே

### அனுபல்லவி.

உன்னுடைய ஜெனனமரணமென்னும் வியாதிபோக்தருணம்
இன்னமுதான ஸஞ்சீவியன்னையைப்போல் கார்ப்பார்கூவி அன்ன

### சரணம்.

ஆதிகேசவனருளால் ஸாதுபூபிராட்டிமீதில்
பூதபுரவாலுதித்த போதஸ்வரூபன்
வாதியராம் கெஜத்தைகண்டால் க்ரோதித்துகொல்லும்கண்டிரவம்
நீதான்செதியென்றடைந்தோர்க் கேதுங்குறையில்லாமல்காத்து

அற் புதமாம்
சொற் பொருளை
கர்ப்பி விக்கும்
தர்ப்பர ணும் அன்ன

காசினியிலுள்ளோரீடேர பாஷ்யத்தையெடுத்துரைத்துசாரங்
கேசனைக்காண்பிவைத்த பிரகாசனும் சேஷன்
ஈசனயனிந்திராதியர் பூஜித்தடிபணியும் மன்னன்
பேசர்க்கரிய மகிமைமாசத்த முகபிரஸன்னன்

நிஜ பக்தர்களை
சித்தி யமும்
சித்த மிரங்கி
தயை செய் அன்ன (க௨)

## ஆழ்வார் கீர்த்தனம்.

இரா-ஸவுருஷ்டகம்-ஆதிதாளம்.

### பல்லவி.

ஆழ்வாரே உமக்கடிமை யானதொண்டர்கள்
வாழ்வது பரமபத மதுவே

### அனுபல்லவி.

தாழ்வில்லா மலேபதிசுக மிகத்தழைத்திடும் ...
வாழ்புகழ் சாரணன் இருக்கையில்வசித்திடும் அ

## சரணம்.

பாதமலரைச்சேர்ந்த ஸாதுஜனங்களுட கேதமதனை விலக்கிடுவீரே
ஆதியந்தமத்த ஸ்ரீநாதனுடையமகிமை பிரீதியுடனே உரைத்திடுவீரே
காதகராகிய மதவாதியர்களை வாதில்வென்று வாய்தகர்த்திடுவீரே
யேதுந்தெரியா மூடப்பேதையாகியயெனக்காதரவாய் வந்தருள் சுரந்திடு
[வீரே] ஆழ்

மின்னிடை குமுதவல்லியைமனம்புரிய தன்னிகரில்லா ஆடல்மாவேரி
சென்று அவள் பிதாயிடத்தில் யெந்தனுக்குமுட கன்னியைத்தாரு
[மென்ற அருள்மாரி
நன்னுஸ்ரீவைஷ்ணவராய் வந்தால்தாரேனென்ன நரயூர்நம்பியை தொழு
[தீர் மனந்தேரி
அன்னவர் ஸமாச்ரயணுஞ்செய்திட உகந்து ஆலிநகர்வந்து மணஞ்
[செய்தீரானந்தமீரி ஆழ்

தேடிவெகுதனத்தை யபகரித்து தேவிக்காக ததியாராதனஞ்செய்தீர்
ஆடும்புளகொடி யரங்கேசன் மணஞ்செய்துவர அவரையும் வழிபறி
[செய்தீர்
ஓடிதனத்தைப்பார்த்தெடுக்க கூடாமல்வந்து நீ மந்தரவாதி சொல்
[லென்றுரை செய்தீர்
நாடிதிருவரசடி நதியில்ஸ்நானஞ்செய்து வந்துதிருமந்திரம் பெத்து
[வாடினேனென்றருள்செய்தீர்

தேவியுடன்கெருடன் மேலிருக்குஞ்சாரங்கேசருக்கு அதிகபிரியதாஸா
ஆவியே அமுதேயென்று மகிழ்ந்துறைத்தீர் குமுதவல்லிபிராணேசா
ஸேவியேனெம்மையல்லால் வேல்வாழ்தரித்த கலியா அதிக பிரகாசா
நாவிதனுவிதரவசனஞ்சொல்லாமல் நாரணன் குணத்துரைக்கருள்
[செய்வீரத்தி உல்லாஸா ஆழ் (௫)

## நாச்சியார் கீர்த்தனம்.

இரா-தோடி-சாப்புதாளம்.

### பல்லவி.

கமலவாஸினி கருணைமிகச்செய்வாய் நீ
கமலவாஸினி

### அனுபல்லவி.

சமதமகுண பரிசுத்தை நீ
ஹேமமுனி தபஸாதே நீ கமல

## சரணம்.

ஆராவமுதனுடை ராணி
அரவிந்ததள லோசனி
கோரபவசம் ஹரனி
கோரினபலபிர தாயனி கமல

மந்தஹாஸ ஸௌந்தரி
இந்திரையெனும் லோகேஸ்வரி
கந்தமுகந்தர்க்கு பிரியபாரி
கந்தர்ப்பனைப்பெத்த சர்வாலங்காரி கமல

வஞ்சகமற்ற சசிமுகி
மஞ்சுபாஷினியான அம்சுகி
அஞ்சலிசெய்தோர்க்கு வரதாயகி
செஞ்சிலம்பணிந்த தயாநாயகி கமல

பாசவலையை தீர்த் தருளும்வல்லி
மாசற்றமகிமை மிதுலைவல்லி சாரங்க
கேசதுரைமகிழ்த் தணையும்வல்லி
சாச்வதமான கோமளவல்லி கமல (கசு)

## பெருமாள் கீர்த்தனம்.

இரா-கமலாமனோகரி-ஆதிதாளம்.

## பல்லவி.

நாராயணா பரிபூரணா
நாராயணா

## சரணம்.

மாரஜனகபிரபோ மஞ்சுபாஷா
நீரஜாலனி மகிழ்ந்தணையும் நிர்த்தோஷா
காரண கனகமணி பூஷா
தாஸஜெகுமார நித்ய சந்தோஷா நாராயணா
உத்தமமான பிரகலாத சரித்திரமாக
வெத்தமகிழ்ந்து சொல் லாரம்பித்தேன் ஸாஹாஸமாக
இத்தைநிறைவேற்றிவைப்பீர் எளிதாக
பக்தவத்சல சாரங்கேச கிருபையாக நாரா (கரு)

## ஆராவமுதன் கீர்த்தனம்.

இராக-ஆரபி-சூரணிகே

சேஷாத்ரிவாசா ஸிர்ந்தோஷாகிலேசா
ஸுபாஷாமரேசா கோப வேஷா
பண்ணாக்கடைத்த அண்ணா நீருண்டமுகில்
வண்ணாகமலக் கண்ணா
உந்திமேல்நான்முகனை மைந்தனும் படைத்த
எந்தாய் வந்தனம் முகுந்தா
சிந்தைக்குறைதீர்த் துகந்தடிமைகொள்ளும்
கோவிந்தானந்தாத சுடரே
ஆயானுன்மறைதேடும் தூயாவெண்ணெயுண்ட
வாயா அன்பர் ஸகாயா
பாலாலரவில்துயில் மூலாகனகமய
சேலா கோபிகாலோலா
நீலார்கண்டத்தானும் நானுமுகம் படைத்தானும்
சீலமுடன் பணியுந் தாளா
நேமாஸகஸ்திரநாமா உயர்ந்த பரந்
தாமாமனோபிராமா
இத்தாரணிதன்னில் வைத்தேயெனை யின்னம்
யெத்தாய்மறையாதே யத்தா
சிங்காபவார்னவ பங்காசெகன்மோக
னுங்காகெருடத்துரங்கா
மங்காதகீர்த்தியக ளங்காந்தர்பஹிரங்கா
உத்துங்காதிருலரங்கா
சங்காழிதரித்தகை கெங்காஜெனகபத
யெங்காதல்தீர்சு பாங்கா
ஸ்வாஸத்தடக்கியோகாப் பியாஸத்திருந்துனை
யுபாஸிக்கிறியேன் நேசா
மாதைத்திருமார்பிலே தாங்கும்ஞாதாவுன்
பாதமலரேகெதி ஸ்வாமி

சித்தமதுதிளைத்துடனே யுக்தமாய்பக்திசெய்ய
சக்தியற்றபேதை னானய்யா
காமாந்தமகாரம்விட்டு ஸோமவதனா உன்றன்
நாமஞ்சொல்லும் நேமமறியேன்
பொற்றாமரைப்பதத்தை பற்றியிருக்கக்கிருபை
வைத்தருள் ஸர்வோத்தமா
தீராமகிமைய பரராகுணஸாகரா
நேரேவா சாரங்கதரா (௧௬)

## அவையடக்கம்

கீர்த்தனம்-இரா-புன்னாகவராளி-ஆதிதாளம்

### பல்லவி.

என்னமாய்கரை கண்டுரைப்பேன்—பேதையானநான்
என்னமால்கரை கண்டுரைப்பேன் என்ன

### அனுபல்லவி:

உன்னிதகல்யாணகுண உத்தமமாவிசித்திரம்
பன்னகசயனளாஸதா பக்திபண்ணினேன்சரித்திரம் என்ன

### சரணம்

காதில்லாதோன்கதை கேட்டு கருத்தில்
வைத்துகளித்தா னென்பதுபோலே
காதல்கொண்டுபேடியும் மாதராசையினாலே
ஆதரித்துமிக அணைந்தானென்பதுபோலே என்ன

கெருடன்பறக்க கொசுவும் சறப்பதுபோல்
தருமனதையுடயை னான் .
ஸருவோத்தமன்கதையை ஸாகஸமாயாரம்பித்தேன்
நிர்விக்னமாகவே நிறைவேறுமோ தெரியேன் என்ன

சிட்டுக்குருவியானது ஸாகரத்துநீரை
முட்டயிறைப்பே னென்றாற்போல்
பட்டப்பகல்தேவனை பழித்துமின்மினிப்பூச்சி
சட்டமாயென்சோதிக்கி கட்டமாட்டாயென்றாப்போல் என்ன

ஆசைமிகுத்து ஊமையும் பிரஸங்கஶாஸ்திரம்
வாசிப்பேனென் றுரைத்தாற்போல்
ராஜராஜனானசாரங்கேசன் நேசமாய்வந்து
தாஸரைக்காத்துநின்ற சாச்வதசரித்திரத்தை என்ன (௧௭)

கீர்த்தனம்-பந்துவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

ஏன் கலங்குராய் மனமே நீ
ஏன் கலங்குராய் மனமே — ஏன்

அனுபல்லவி.

தேன்றுளபமாலை யணிந்த
கோன்உன்னுள் வஸித்திருக்க — ஏன்

சரணம்.

பங்கஜாஸனருக்கும் நாதன்
திங்கள் ரவிகளுக்கும் நாதன்
மங்கையைமாரில்தரித்த நாதன்
சங்கைதீர்க்க யிங்கிவ் விர்க்க — ஏன்

அண்டங்களையுண்டுமிழ்ந்த நாதன்
அண்டர்க்கமுதளித்த நாதன்
அண்டினோர்வினை அகற்றும் நாதன்
அண்டையில் நின்றிருக்க வீணு — ஏன்

உத்தமபிரஹஸ்பதிக்கும் நாதன்
நித்தியஸூரிகளுக்கு நாதன்
சுத்தஸ்வரூபரான நாதன்
சித்தத்தில்குடி கொண்டிருக்க — ஏன்

இஷ்டபாண்டவர்களுக்கும் நாதன்
துஷ்டநிக்ரகம் செய்யும் நாதன்
அஷ்டலக்ஷ்மிக்கும் நாதன்-ஸந்
துஷ்டியோடுன் கிட்டையிருக்க — ஏன்

அம்பஸூக்கணைசெய்த நாதன்
கம்பத்திலவதரித்த நாதன்
ரொம்பசாந்தசித்த நாதன்
நம்பினோரைக்காக்க விறக்க — ஏன்

காரணபூதரான நாதன்
ஈரந்தவதராஞ்செய்த நாதன்
நேரே ராவணனை வதைத்த
தீரருன்பாரத்தை வகித்தார் — ஏன்

சநகன்முதலோர்களுக்கும் நாதன்
வாசவாதிகளுக்கும் நாதன்
ஜாசாஜிதாசன சாரங்க
ராஜருன்னுள் வலித்திருக்க என் (௧௮)

விருத்தம்.

தீர்த்யாத்திரைக்குவந்த விதுரரும் தீவரமாக
ஆர்த்தியைத்தீர்க்கு மனந்தனடிமலரை தியானஞ்செய்து
பார்த்துமயித்ரேயர்பாதம் பணிந்து கரங்குவித்துநின்று
கீர்த்திமிகுந்த கேசவன் கதையைச் சொல்லுவீரென்றாரே.

விருத்தம்.

மாதவசிரேஷ்டரான மயித்ரேயமுனியே அந்த
ஆதிவராகரும் பூமியையுத்தாரணஞ் செய்யும்போது
மாதவனுலிரண்யாக்ஷன் ஸம்ஹரிக்கப்பட்டானென்றீர் எந்த
ஏதுவினால் யுத்தமுண்டாச்சுதவன் முனஜென்மத்தையும் அடி
யேனுக்கு சொல்லுவீரென்வினையை வெல்லுவீரே. (௨௰)

விருத்தம்.

உத்தானபாத ருடபுத்திரராம் த்ருவமகாராஜன்
உத்தமகார தருரையால் மிருத்தியுடசிரசிலடிவைகத்துக்கொண்
டே நித்தியஸ்ரீ அரிபதமடைந்தார், அதுபோல்
மெத்தவுமுயர்ந்ததான சரித்திரத்தை பிரஸ்னம் பண்ணுகின்றீர்
சத்தியலோகநாதன் தேவர்களுக்குரைத்த ரகஸ்யத்தை கேட்ட
மட்டும் சொல்வேனென்றெடுத்து சொல்லுவாரே. (௨௧)

விருத்தம்.

மாசிலா கிமைபெற்ற மறையுணர்ந்திருச்குபங்க
ஜாஸனர்ஸுதனைதிதியும் பணிந்துஸுகந்தருவீரென்ன
காச்சயபர்மனநடுங்கி கடுகடுத்து கண்சிவந்து
தேசிலா அசுரராக ஜெனிப்பாரென்றுரைத்திட்டார் அவளு
டனே ரமித்திட்டாரே. (௨௨)

விருத்தம்.

இந்தவிதமுரைத்தபர்த்தாவோ டடிமலரில்பணிந்து
சிந்தையில்நடுநடுங்கி திதிதேவி துதிக்கும்போது
முந்தியேபிறந்த இரண்ணிய கசிபுவுக்கு பாகவதசீலரான
மைந்தன் ஜெனித்துநம குலமீடேற்றுவானென்று பகர்ந்திட்டா
ரவளுடனே உகர்ந்திட்டாரே. (௨௩)

கீர்த்தனம்-இம் பூரிகல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

உண்டானுள் திதிகெற்ப முண்டானுள்
கண்டகரை உண்டானுள் உண்டா

அனுபல்லவி.

எண்டிசையி லுள்ளோர்கள்
கண்டுபயங் கொள்ளவே
அண்டர்முனிவர் நடுங்கவே
சித்தமெத்த மகிழ்வுடனே உண்டா

சரணங்கள்.

மலைகளுடனேமரங் கொடியெறிந்துபோகவும்
உலைவாய்மெழுகதுபோ லநேகஉயிர்சாகவும்
அலையுள்ளயெழுகடல் நீருகளும் வற்றிப்போகவும்
நிலையிசகியேநவகிரகங்கள் தேஜஸமறைவாகவும் உண்டா

பூவகளரும்புகளெல் லாமிகக்கருகவும்
கோவிலிருக்குந் தெய்வத்துக்குங் கண்ணீர்பெருகவும்
பாவியானராக்ஷஸரர்களுக்கு கானந்தம் வருகவும்
மூவுலகத்தோர்கள்மனம்நடுங்கசாரங்கேசன்த்வாரபாலனை உண்டா

---

விருத்தம்.

அந்தமாந் தேவரெல்லாம் மனதுவாடி
அனைவருஞ் சத்தியலோகத் தில்வந்து ஹரி
உந்திமலரிற் பிறந்தயனைப்பணிந்து
உத்தமனே யெங்களுக்குவந்த விபத்தேதென்ன
எந்தனுடமானஸ புத்திரராம் ஸனகாதிகள்
வைகுண்டம் போகும்போது
நிந்தைமிகதவுஷ்டியத்தோடு ஜயவிஜயாள்
தடைசொல்ல சபித்திட்டார் மிகவுங்கோபித்திட்டாரே.

கீர்த்தனம்-கல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

பரமபதவர்ணனை யெடுத்துச்சொல்ல
பழிமேயென்னு வதனை

### அனுபல்லவி.

அருமையுடன் திரு மருவியணேந்திடும்
பருவக்கருமுகில் உருவர்வசித்திடும் பரம

### சரணம்.

உத்தமவஜ்ரங்களா லிழைத்திருக்கும்படிகள் அதில்
மெத்தவிசித்திரமாக கட்டிருக்குங்கொடிகள்
சுத்ததங்கம்பச்சையால் செய்திருக்கும் மரஞ்செடிகள்
அஸ்தமான் உதயமேரு மந்தாரத்துக்குந் துடிகள்
நித்தியஸூரியர்களுத்து ஸாமகானஞ்செய்ய
யத்தியிலனந்தன்மேலிருப்ப தென்னசொல்வேனய்யா பரம
முத்துரெத்னமயமான மண்டபத்திலழகும் அதை
சுத்திநிறுத்தியிருக்கும் பவழக்காலழகும்
கத்திபிடியிடியாள்யெட்டு தேவியர்களழகும் அவாள்
மத்தியில் சந்திரானனராய் வஙிக்குமழகும்
ஆசையுடனஷ்டா தெச வாத்தியங்கள் கோஷித்திடும்
மாசற்றகுணமகிமை சாரங் கேசன் வஙித்திடும் பரம

### விருத்தம்.

இப்படி சோபிதமாயிருக்கும் பரமபதத்தில்
சற்பசத்தருவாய்நின்ற கருணுநிதியைக்காண
அற்புதவடிவுடனே அகமகிழ்ந்து நால்வராக
ஒப்பிலாமகிமைபெற்ற ஸனகாதிகள் வருகுவாரே.

கீர்த்தனம்-இ-ம் பந்துவராளி சாபுதாளம்.

### பல்லவி.

ஸனகாதியோகியர்கள்
ஸனகாதியோகியர்கள் ஸன

### அனுபல்லவி.

மனம்ஸ்ரீ ஹரிமேல்நாடி மகிழ்வுடனே கொண்டாடி
திணகரன் கோடிகூடி வரிவதுபோல் தேடி ஸன

### சரணம்.

நாராயணுவென்று நாமத்துரைத்துக்கொண்டு
ஸாரமாகிய விண்டு யெங்கேயென்று ஸன
அக்கியானங்களற்று அயனுக்கவதரித்து
ஸூக்கியானத்தில் ருசித்து சித்தம்பூரித்து ஸன

பாலரூபத்துடனே பரிந்துமகிழ்வுடனே
கோலாகலத்துடனே சீலத்துடனே ஸன
உலகவுயிர்க்குமுந்தி உதித்தவாளதிசாந்தி
நலமிகுத்திடும் வேதாந்தி பரமேகாந்தி ஸன
ஆரணத்தைப்பேசி அதிககெம்பீரஉல்லாஸி
சாரங்கேசர்மேல் விச்வாஸி ஸ்வயம்பிரகாசி ஸன

விருத்தம்.

வாணிமன்னவன் பயின்ற மக்களாம் நாலுபேரும்
தீனசரண்ணியன்பாதம் தெரிசனஞ்செய்யவென்று
ஞானிகள்வஸிக்கும் பரமபதத்திவ் வரஜயவிஜயர்கள்தடுக்க
ஹீனபுத்தியர்களே நீங்களசுரராவீர்களென்று தள்ளுவார் கோப
த்துடனே சொல்லுவாரே. (உக)

கீர்த்தனம் இ-ம் பந்துவராளி ஆதிதாளம்.

பல்லவி.

பேயனேநீயனே மாயனைக்காண
வந்தோர்க்குத் தடையுண்டோடா பேய

அனுபல்லவி.

ஹேயருணங்களற்று வாயால் மிகவர்ணித்து
காயத்தைவெறுத்து நேயமாய்துதித்துவந்தால் பேய

சரணம்.

ஸத்துவகுணத்துடன் வஸித்திடுமுலகத்தில்
மெத்தகெர்விஷ்டர்கள் தரித்திடநீதியில்லை பேய
கண்டகராகவே பூ மண்டலத்தில் ஜெனித்து
எண்டிசையும் நடுக்கங் கொண்டிட வஸியுங்கள் பேய
பேதபுத்தியைவிட்டு மாதவரின்பாதத்தில்
பிரீதியையுடையோர்க்கு யேதுந்தடையுண்டோடா பேய
சாச்வத பதந்தரும் லோகேசனுகிய சாரங்
கேசதுரை தாஸர்களை லேசாய்நினைப்பாருண்டோ பேய (கூ)

விருத்தம்.

இந்தவிதம் ஜனகாதியோஹிகள் சபிக்கும்போது
சிந்தைமிக நடுநடுங்கி ஜயவிஜயாளிரண்டுபேரும்
மந்தமதியாலுரைத்த வசனம் க்ஷமித்திடுவீரென்று
வந்தனஞ்செய்து பின்னுஞ் சொல்லுவாரவாசடிமலரைபுல்லுவாரே.

கீர்த்தனம் இ-ம் நாதநாமக்கிரியை ரூபகதாளம்.

## கண்ணிகள்.

சரணம் சரணமய்யா பிர்ம்மபுத்திரா—இந்ததருணத்தில்
கிருபைசெய்வீர் பிர்ம்மபுத்திரா சரண
அக்கியானத்தால்மோசம் போனும் பிர்ம்மபுத்திரா-ஜனன
கக்குஸத்துக்காளானேம் பிர்ம்மபுத்திரா
லேசாயுங்களைவினைத்துயவன் கண்டோமய்யாநர சரண
கேசதுரைவவிக்கும் பதத்தை விண்டோமய்யா (கூ௨)

## விருத்தம்.

துவாரபாலர்களிந்தவிதம் நயந்துரைக்கும்போது
நீரஜாஸனர் ஸுதர்கள் கோபத்தைத்தணிக்கவென்று
மாரஜெனகபிரபுவும் மகாலெக்ஷ்மீயுடனேகூடி ஒய்
யாரமாய்கவரிவீச வருகுவார் ஸனகாதிகளுக்குஸேவை தருகுவாரே.

கீர்த்தனம்-இ-ம் காம்போதி-ஆதிதாளம்.

## பல்லவி.

மாதவர் வந்தார் ஆதிவேதமுடிவில்னின்ற
நாதபிர்ம்மமாகிய மாதவர் வந்தார் மாதவர்

## அனுபல்லவி.

நீதான்கெதி யென்றபக்தாள்
கேதவினையைத் தீர்க்கும்
பூததய வுடனெப்பொழுது
மிருந்து கார்க்கும் மாதவர்

## சரணம்.

தாமரையிதழ்போலிருக்கும் விலாஸமான நேத்திரமும்
காமன் மோகிக்கும்படியா யிருக்கும்சியாமளகாத்திரமும்
கோமளமிருதுசரணுவென்று தேவர்செய்யுந்தோத்தியமும்
பீமபராக்கிரமமான இடையில்கடி சூத்திரமும்
சந்திரன்போலேகுடை அந்தமாய்ப் பிடித்திட
மந்தஹாஸத்துடனே நந்தமுகுந்தஹரி மாதவர்

உத்தமவண்டுபோல்சூழ்ந் திருக்கும் அளகத்தழகும் திரு
நெத்தியிலேவிகவிகவென் றிருக்கும்திலகத்தழகும்
பத்திபத்தியாய்பதித்திருக்கும் முத்ததுபோல் தந்தத்தழகும்
வித்யலக்ஷ்மிநிழல்பார்க்குந் தெர்ப்பணம்போல் கபோலத்தழகும்
வில்லுப்போல்புருவமும் எள்ளுப்பூபோல்நாஷியும்
சொல்லரிய அதரம் நல்லபவழம்போலும் மாதவர்

ஆரம்பதக்கமகரக்கண்டி யுடன்திருமார்பழகும் பரி
பூரணகிருபையுடனுதரிக்கும் ஆயிரம்பேரழகும்
ஸூரியனைப்புழித்திருக்கும் கிரீடகுண்டலத்தழகும் தீவ்ய
சாரங்கசங்குசக்ரங்கெதை கட்கம் பஞ்சாயுதத்தழகும்
கங்கணந்தரித்தகையு மெங்கும்பிரகாசமாய்செய்யும்
ஸ்ரீங்காரமாகியமெய்யும் சங்கமிருந்தங்கத்துடனே மாதவர்

---

## விருத்தம்.

செந்திருமயக்கும்படியாகவே உருவங்கொண்டு
வந்ததோர் அரியைக்கண்டு வந்தனஞ்செய்துகொண்டு
அந்தமாந் திருத்துளப வாஸனை ஆக்ருணித்து-பிர்மா
னந்தத்தையடைந்துமவாள் கதிக்கின்றார் அன்புடனே ஸதுதிக்கின்றாரே.

கீர்த்தனம்-இ-ம் ஆரபி. சூரணிகே

கமலாக்ஷிரமணா கருணாகரநயனா
சமதமகுணாகரா சௌந்தரியவதனா
பக்தியுடையோர்நெஞ்சில் நித்யமாகவிருந்தாலும்
புத்திஹீனர்களுக்கு புலப்படீர்மேலும்
மங்கைமனவாளா யெங்களெதிராக
ஸுந்தரவடிவுடனே ஸேவைதந்தீர்பரிவாக
தேவரீருடையநாபி கமலத்தில்
உற்பத்தியானார் ஸரஸ்வதினாதன்
பிர்ம்மாவினாலும்மிட நிர்ம்மலசரித்திரம்
உபதேசஞ்செய்திட உள்ளமகிழ்ந்தோம்
பங்கயக்கண்ணாவுன் த்வாரபாலானோ
எங்களால்சபிக்க பட்டபடியாலே
எங்களுக்குமிகவும் நரகங்களிலே
ஜென்மங்களெடுக்கும் படியாயிருக்குமன்றோ

விஷ்பலமாய்வண்டுமுள் ளாலடிபட்டாலும்
புஷ்பவாசனையில்மனம் ரமிப்பதைப்போலும்
உத்தமத்திருத் துழாயும்மிட திருவடிசம்மந்தத்தலே
மெத்தவுமேன்மையாய் விளங்குவதைப்போலே
சிலாக்கியமாக்திருவடிப ஜனத்தில்சாரங்கேசா-யெங்கள்
வாக்குளிற்கும்படி அருள்செயயுல்லாசா (௫௬)

---

## விருத்தம்.

அஞ்சியுரைத்த ஸனகாதியோகிகள் ஸ்தோத்திரங்கேட்டு
கஞ்சவிசாலநேத்திரன் கருணையுடனுகந்துக்கொண்டு
சஞ்சலமற்ற உங்களைத்தடைசெய்த படியாலிவர்கள்
கொஞ்சபுத்தியராய் புவியில்ஜெனிக்கும்படி யாச்சுதென்று சாற்றுவார்
மனக்கவலை யாற்றுவாரே. (௫௭)

கண்ணி-காம்போதி-ஆதிதாளம்.

வாருங்கோள் யோகியர்களே பாருங்கோளிவாள்குணத்தை
தீருங்கோள் மனஸ்தாபத்தை கோருங்கோள்சுபம்
நேமவிரதசீலமற்ற பாமரனுகியபொல்லா
காமக்குரோதர் வஸிக்கத்தகாதிந்துலகத்தில்
என்னைவிரும்பிவந்த உங்களைத்தடுத்தபடியால்
பண்ணினதெண்டனை நமக்கும்ஸம்மதந்தான்
வித்தியர்களைவிடவேறே தெய்வங்களில்லையென்று
சத்தியமாகவே யெண்ணியிருப்பதுண்டு
தூதன்செய்தபிழையை ராஜன்செய்ததாகவேயெண்ணி
ஆதரித்தவாள்மேலன் பாயருள்செய்யவேணும்
என்னுடையபாகுவானாலும் உங்களுக்கபராதஞ்செய்தால்
சின்னபின்னமாகச் சேதித்துப்போடுவேனன்
உங்களுடையபாததூளை சிரஸாகவகித்து
சங்கையற்றமகிமை யடைந்திருக்கிறேன்
ஆசாபாசமற்றசாரங்கேசதுரைநானும்
மாசற்றலெக்ஷிமியென்னை விடாமல்நிற்குராள் (௫௮)

## விருத்தம்.

சக்கர அஸ்தருரைத்த சௌம்மியவசனத்தைக்கேட்டு
மிக்கமனதிரங்கிஜய விஜயருக்கருள்செய்வாரே. (௫௯)

## விருத்தம்.

எண்ணில்லாபல பராக்கிரமத்துடனிருக்குமுங்களை
வண்ணமிகுந்தயலர்மகள் மகிழ்ந்தனைக்கின்ற
கண்ணனேகறுவறுத்திட அவதாரஞ்செய்வர்
புண்ணியமானுலகத்துக் கேகுவீர்பழயபடி ஆகுவீரே (சாய)

## கண்ணிகள்.

இ-ம் புன்னுகவருளி-சாபுதாளம்.

பிராரப்தகர்ம வசக்தர்போலகப்புட்டோம் தேவதேவா-உம்மை
ஆராய்ந்துபார்க்க அறியாமல் கெட்டோம் மகானுபாவா

தத்துவப்பொருளென்று உத்துணராமற்போனோம் தேவதேவா-எங்கள்
புத்திஹீனத்தாலர்த்தத்துக்கேதுவானோம் மகானுபாவா

அகமென்னும் வியாக்கிரம் துரத்தமிகமெலிந்தோம் தேவதேவா ஸ்ரீ
மகாலக்ஷ்மிபதியுமிட மகிமைகாணுமல்நொந்தோ மகானுபாவா

ஸ்ரீபதியேவும்மை ஸேவித்தகமகிழ்ந்தோம் தேவதேவாஇப்போ
தாபத்திரயமானந்த கூபத்திலே வீழுந்தோ மகானுபாவா

உந்தன்கதாமிர்த சிந்துவில்முழுகச்செய்யும் தேவதேவா அர
விந்தபாதத்தையெங்கள் சிந்தையில் வைத்தருளும் மகானுபாவா

சத்துவகுண முடையோர்களை தடைசெய்தோம் தேவதேவா
உத்தமசார்ங்கந்தரித்த பிரபுவேசாரு மகானுபாவா (சுக)

---

## விருத்தம்.

அஞ்சாமல் மூனுஜென்ம மவனிதனில் ஜெனித்துயின்னம்
கொஞ்சகாலத்தில்வந்து சேருவீர்களென்றுரைத்த
கஞ்சாஸனர் ஸுதர்களிடத்தி லுத்திரவுபெற்று
பஞ்சாயுதபாணிசொந்தநகரடைந்தார் பாரிஷதாள் திதிகொர்ப்பமதை
யடைந்தாரே. (சஉ)

இ-ம் நுஜாவந்தி-ஆதிதாலம்.

## பல்லவி.

தூஜசம்வஸ்த்ரம் சுமந்தாள்திதி சொர்ப்பத்தை
பாவகளை மெற்றுமகிழ்ந்தாள் தூஜ

### அனுபல்லவி.

சிருஷ்ளதேவர்க்கு துன்பம்
செய்திடவென்று வினைத்து
பாருலகருழு தாளவேணு
மென்றன்பு பதித்த நாறு

### சரணங்கள்.

நாய்களும் நரிகளும் அழ—வானிலிருந்து
தீயகொறக் கொள்ளிகள்விழ
பேய்களும்பெருங் கழுகுகளுமங்கேவந்துசூழ
ஓயாமல்ரத்தமாரிவருஷிக்க வேதவிதிதாழ நாறு

உத்தமமேரு மலைபோலே—கிரீடமும்
ரெத்தனத்தால்தோள்வளை மேகலை
மெத்தகடினவாசுகையைச் சுத்திவைத்தாப்போலரநூல்மாலை
வித்தியானந்தசாரங்கேசன் பக்தரைப்பிரிவுளலே நாறு

---

### விருத்தம்.

பூசுரசிரேஷ்டராகி புகழுடனிருக்கின்ற
காச்யபரிரண்டுபேர்க்கும் இரண்ணியகசுபு இரண்யாக்ஷனென்றும்
நேசமாய்காமஞ்சாற்றி நிர்மலமாயிருக்கும்போது-லோ
கேசனேடாக்ஞையுமீறி நடக்கின்றான்வேதவிதி தடுக்கின்றானே (சச)

### விருத்தம்.

முந்தியேபுறந்திருக்கும் இரண்ணியகசுபுவந்தான்
இந்திராதியரையடக்கி அரசுசெய்திருக்கும்போது
மந்தபுத்தியுள்ள அவன்தம்பி இரண்ணியாக்ஷனப்போ
விந்தியமந்திரமேருவைப்போயிடித்திட்டாளுதேவர்களை சண்டபிடித்திட்
டானே. (சரு)

### கண்ணிகள்.

இ-ம் கல்யாணி ஆதிதாளம்.

அங்கதசங்கணம் கவசகிரீடகுண்டலங் தோள்வளைகளணிந்தான்
சிங்கம்குகையில்நின்று கிளம்பிவருவதுபோல்தேவர்களோடுத்தம் பண்ணத்
[துணிந்தான்

வேகத்துடனலைனுரை முத்துரெத்னங்களை வகிக்கும் நீ வெளியில்வா [வென்றுன்
லாகர ராஜன்யுத்தங்குடுக்க என்னாலாகாதென்று நடுநடுக்கங்கொண்டான்
இந்திரன் யெமன் குபேரன் லோகபாலர்களைபோய் பலவந்தமாயிழுத்தான்
எந்தனாலாகாதென்று தேவர்களுரைத்திடவே உதாசினத்துப்பழித்தான்
பாதாளவாசிகளிடத்தில் போயுவர்பலமறிந்து வருவோமென்றுமதித்தான் [குதித்தான்
மேதினியையெகத்து பல்லாலெடுத்துக்கொண்டிருக்கும் வராகரைகண்டு
கத்திமுசண்டிபிண்டி பாலந்தோமரங்கெதை சக்தியினுவவரை அடித்தான்
மெத்தகிவேகத்துடனே கையால் ஸ்வாமி குத்திடவே துடிதுடித்தான்
இந்தஅடி ஒருவரிடத்திலும் பட்டதில்லையென்றயிர் மிகவும் பதைத்தான் [தான்
விந்தையுாகசாரங்கன்செய்தயுத்தம்தாளாமல் கரத்தைபோலவேகதரிசெத்

## விருத்தம்.

பாதகனாயிரண்ணியாக்ஷன் போனபுன்பு
சதுர்முகாதி தேவரெல்லாந் துதித்திறைஞ்ச

ஆதிவராகமான மூர்த்திதானும்
அதிகம்பீரத்துட னிருக்கும்போது

மேதினியும் பயந்தெளிந்து மனமகிழ்ந்துனதன்
பாதமலரிலடிக்கடி யணிந்து

ஆதிபரம்பொருளே அனந்தாவென்று
கூறுவார் மனஸ்தாபத்தை தீருவாரே. (௩௭)

## பாசுரம்.

தீதருதிங்கள் பொங்குசுட ரும்பருலகேழினேடுமுடனே
மாதிரமண்சுமந்து வடகுன்றுநின்ற மாலையாறு மேழுகடலும்
பாதமர்சூழ்குளம் பின்கமண்டலத்தினொரு பாலொடுங்கவளர்சேர்
ஆதிமுனேனமாகி யரணாயமூர்த்தியுது நம்மையாளுமரசே. (௩௮)

கீர்த்தனம் இ-ம் மாளவகௌளே-ஏகதாளம்

## பல்லவி.

மன்னாகமலக் கண்ணாயென்னை
நன்னாய் ஸ்தாபிதஞ் செய்தீர் மன்னா

## அனுபல்லவி.

குன்றுபோலிந்திரணியாக்ஷன் கொண்டுபோய் ஹிம்ஸிக்குமுன்னே
பார்த்து அவனைமுடித்துக்குறை தீர்த்தனைத்திரே யென்னை ம

## சரணம்.

அச்ரமியிவ னுயிரைவதைத்து யெஞ்ஞவராக மூர்த்தியாய்
ஸத்குணமுடையோரைக்காக்க மைக்கடலுருவானதேவதேவ மன்
உந்திமலரிலயனைப்படைத்து ஹம்ஸவடிவமாய்வந்து
விந்தையாயுலகத்தை சிர்ஷ்டிசெய்யென்று வேதத்துரைத்தயாவிந்தோ
ஆசாபாசமத்துந்தனை பூஜித்ததாஸர்கட் கதிநேசா
மாசற்றவர்கள் ஹிருதயத்தில் வசித்திருக்கும் சாரங்கேசா ம (சக)

## விருத்தம்.

அன்புடனே அயிமன்னுமைந்தன் சுகபிர்மரிஷியைப் பணிந்து
தன்புதல்வனை ஹிம்ஸித்தவயண மென்னவென்று ஸந்தேகித்து கேழ்க்க
துன்பமுற்று ஜயவிஜயாள் பூமியில்வந்துதித்ததைக் குறித்து
இன்பமுடன் பிரக்லாத சரித்திரஞ் சொல்லுவாரே.

## பத்யம்.

புத்ருல் சேர்ச்சின நேரகுன்ன ஜனகுல்போஷித்து ரெல்லப்புடுன்
மித்ரத்வம் புனபுத்தி ஜெப்பிதுரிதோன் மேஷம்பு வாரிந்துரே
சத்ருத்தவம்புதலப் பரிட்டியெடனு ஸவுஜன்யரத்னகரும்
புத்ருன்லோக ப்வித்ரு தண்டிரிமிகுலன் பாதிப்பமெனட்லோர்ச்சேனே.

## விருத்தம்.

செருவித்திருப்த சேதிபதி சிசுபாலன் தானும்
ஸருவலோக சரண்யன் தாளினை அடையக்கண்டு
தருமதேவதை மைந்தனும் விஸ்மித ஹிருதயருக
மருமமெல்லாமறிந்த நாரதமுனியேசொல்லுமென்று ஸேவிப்பாரரிகதை
யைப் பாவிப்பாரே. (௩௨)

## கண்ணிகள்.

இ-ம் எதுகுலகாம்போதி ஆதிதாளம்.

கோசகுணதீதரான வாஸுதேவர் தாஸர்கன்தயை
நேசமாயுரையும் நாரதஸ்வாமி
இன்னவயதிலேயேஸ்ரீ மன்னன்கிருபை பெற்ற அந்த
உன்னிதத்தைச் சொல்லும் நாரதஸ்வாமி

புத்தியற்றிருந்தாலும் தான்பெற்ற புத்திரர்களைத்தந்தை
சித்தங்கடித்துரைப்பதுண்டோ ஸ்வாமி

தந்தைகுரு பெந்துக்களும் தொந்திரவுசெய்யும்போது
சந்தோஷித்திருந்ததைச் சொல்லும் ஸ்வாமி

அந்தரங்கத்தோடழைத்த மைந்தனரிகில் நரஹரி
வந்துகாத்ததுரையுமென்றன் ஸ்வாமி

மாதவன்வதைக்கும்போது ஸாதுமனம்பொருந்திருந்த
தேதுகாரணம் நாரதஸ்வாமி

சாஸ்திரநீதிதெறிந்து யிவர் ஸ்தோத்திரஞ்செய்து சாரங்கேசனை
ஆத்திரமாயழைத்தென்ன நாரதஸ்வாமி (௫)

விருத்தம்.

குருகுலக்கொழுந்தாய்விளங்கும் குந்திசுதன் வணங்கிக்கேழ்க்க
ஸருவசாஸ்திரநிபுண ஸாதுமுனிமனமுவக்க
சுறுவிலுருக்கொண்டிருக்கும் கால்த்தில்கண்ணனையறிந்து
இருவினைகடந்தபிர்க்லாத ரினியகதை கேளென்பாரே. (௩௪)

கீர்த்தனம் இ-ம் சாவேரி சாபுதாளம்.

பல்லவி.

குந்திஸுதனே அர விந்தநாபன்கதை
சிந்தைமகிழ்ந்து நீ கேளாய் குந்தி

அனுபல்லவி:

பந்தவினையற்று சிந்தையில்தியானித்து சிலர்
அந்தரங்கத்துடன்மு குந்தன்பதமடைந்தார் குந்தி

சரணம்

மெத்தகாமத்தால்சிலர் பக்தியினாலேசிலர்
சித்தத்தில்வைராக்கியத் துடனேசிலர்
உத்தமனேபயத்தால்சிலர் அத்யந்தம்சினேகத்தால்சிலர்
நித்தியானந்தரைத்தியானித் துத்தம்கெதிசேர்ந்தார் குந்தி

ஈஷணத்திரியமற்று ஆசித்துசாரங்கேசன்மேல்
நேசம்வைத்தபேருக்குகி லேசவினைகளுண்டோ-பங்க
ஜாஸனன்ஸுதன்சாபத்தால் பாருஷதாளான்பேர்
காச்யபருக்குஜனித்து ராவணசிசுபாலனானான் குந்தி

### விருத்தம்.

தருமன்ந்தனேயந்த தானவன்தம்பிமடிந்த
மருமத்தைத்தெரிந்துகொண்டு மக்த்தானகிலேசத்தோடும்
புருவம்நெற்றியினிலேற புகையக்கண் பற்கடித்து
உருமையுள்ளமந்திரிகளைபார்த்து உலகத்தைஹிம்ஸிப்பீரென்ருன்.

### சுலோகம்.

பிராதுர்யேவம் வினிஹதே ஹரிணக்ரோட மூர்த்திஞு
ஹிரண்யகசுபுராஜன்னு பர்யதப்யத் ருவஷாசுகா (௫௭)
ஆஹசேதம்ருஷா கூர்னன்ஸந்துஷ்ட தெசனச்சத்கர்
கோபோஜ் வலாப்பியாம் சக்ஷுர்ம்பியாம் நிரீக்ஷணம் தூம்ரமம்பரம் (௫௮)
கராளதம்ஷ்டரோ ரக்ரத்ர்ஷ்டியர் துஷ்ப்பேர்க்ஷிய
பிருகுடமு காருலமுத்யம் யஸதவிதான வானிதமப்பவீது (௫௯)
சதபாஹோஹயக் கிர்வநமுசே பாகயில்வலா
விப்ரசித்தேம மவசஹாபுலோ மன்ஸகுஞதயாகா (௬௰)
ஸ்ருணுதானந்த ரம்ஸரவேகிரை யதாமாசுமாசிரம்
புரக்ருமவ் ருஜோத்யான க்ஷேத்ருருமாச்ரமாகருன்னு (௬௧)
கேடகர்வடகோஷாம் சததுகூபட்டணனிசா.

---

### விருத்தம்.

தம்பிஞனுனேப்பிரிந்து தரணியிலென்னயிருப்பு
உம்பரெல்லாருமென்னை உதாவின்ஞ் செய்வாரப்பா
தெம்மது குலேந்தபின்பு தேகம்வைத்திருப்பேஞேநான்
உன்பின்னேவருவேனென்று உருகுவான் மருகுவானே. (௬௨)

### கண்ணிகள்.

இ·ம் பந்துவருளி ஏகதாளம்.

தம்பிஞனுந்தனேவிட்டு தரணிக்கிருப்பேனோடா·உன்
பிள்ளைபெண்டு தாயாரழ நானதைக் கேழ்ப்பேனோடா
இந்திரயேமவருணதியரை லேசாக ஜெயிப்பாயடா
மந்திரமேருவைப்பந்துபோ லெடுத்துக்கொண்டாடுவாயடா
அஷ்டதிக்கெஜங்களைமிக அலட்சியஞ் செய்வாடா
விஷடையிலிருப்போரைக்கண்டால் விர்தூளிசெய்வாயடா
சந்திரசூரியர்களுடைய கெதிமார அடிப்பாயடா
இந்தஸப்தமேகங்களைப் பிழிந்துநீர்குடிப்பாயடா..

ஆஸனத்திலென்னைவைத்து பூசைகள் செய்வாயடா
போஜனம் சயனத்தில்கூட பிரிந்திருந்ததில்லையடா
பேய்போலென்னைப்புலம்பவைத்து பிரிந்துபோகலாமோடா
தாய்மனத் துயரத்தை தணிக்கவென்றலாமோடா
பேதகமெண்ணாத வென்றன் பிரீதியை மறந்தாயோடா
ஆதிவராகசாரங்கன்கையா லடிபட்டு இறந்தாயோடா (௬௬)

## விருத்தம்.

இந்தவிதம் புலம்பித்தெளிந் தெழுந்திருந்து இரண்யகசியு
ஸந்ததம்தாய்தம்பி ஸம்ஸாரம்பிள்ளைகளைப் பார்த்து
அந்தவீரனுக்குநீங்க ளழுவதுஞாயமன்றென்று
சிந்தையைத் தெளியச்சொல்லி தேற்றுவானாற்றுவானே (௬௭)

---

## கீர்த்தனம்.

இரா-தன்னியாசி ஆதிதாளம்.

### பல்லவி.

அம்மாநீ ழுவதுஞாயமில்லை தத்வத்தை
அறிந்ததை சொல்லுறேன் கேளு

### அனுபல்லவி.

இம்மாநிலமுள்ளமட்டும் விருந்தழுதாலும்
இறந்தவன் வரப்போற இல்லை அம்மா

### சரணம்

பிருமத்தினாலும் பூர்வகர்மத்தினாலும் ஒருயிடத்திலே கூட்டுவிக்கப்படுகி [றான்
மருமமாய்த்திரும்பவும்தங்கள் தங்கள்கருமத்தினாலேபிரிக்கவும்படுகிறான் அ
பிராணிகளுக்கு ஸகவாஸமானது அனித்தியமாகயிருக்கிறது
திராணியுள்ளவீரன் சத்துரு கையினாலடிபட்டிறந்தாலும்ஸ...து அ
நித்தியனாயும் ஆத்மனாச மில்லாமலும் ஸர்வபரிபூரணனாயும்
சுத்தனாயும் ஸர்வக்ஞனாயும் தேகாதிகளைகாட்டிலும்வேறாகவிருக்கான் அ
தன்னுடைய மாயையினாலே யாத்மாஸத்வாதி குணமயங்களான
நன்றாய்தேகத்தைஸ்ருஷ்ட்டித்துக்கொண்டுலிங்கதேகத்தைதரிக்கிறான்
அந்தஆத்மாவுக்கு தேகத்திலே நான்தேவன் மனுஷ்யன் பிராமணன்
ஸந்ததம்க்ஷத்ரியனென்கிற அபிமானம் யாதுண்டோ இதுவேயக்ஞானம்

வீணாய்விஸனப்படுவதில் பலனில்லைபிரேத பெந்துக்களும்யெமனுக்கும்
தர்னுண்டானஸம்வாதரூபமான இதிஹாஸத்தைசொல்லுகிறேன்கேளு அ

## விருத்தம்.

உத்தமக்கியாதிபெற்ற உவீகர தேசந்தன்னில்
சுத்தஸ்வாபராஜன் ஸுயக்ஞயனென்றொருவனிருந்தான்
சத்துருக்களுடனே கூடசண்டைசெய்தவனிறந்தான்
பத்தினிபெந்துக்கள் கேட்டுபரதவித்துப் புலம்புவாரே (௯௬)

## கண்ணிகள்.

இரா-குறிஞ்சி-ஆதிதாளம்.

உத்தமபர்த்தாவே நீயும் நித்தியனான தெய்வத்தாலே
பத்தினிகளைமறந்து நித்திரையோ யுத்தபூமியிலே
கண்ணுக்குத்தெரியாததிசையை யென்னமாயடையப்பட்டாய்
சொன்னசொல் மறந்தெங்களை நன்றாகத்தெருவில்விட்டாய்
உன்னைவிட்டுநாங்களெல்லாம்யென்னமாய்த்தரிக்கப்போறோம்
உன்னுடைய பாதசிச்ரூஷை பண்ணுகைக்கி கூடவாரோம்
வாயைத்திறந்து மின்போலே இதவசனங்கள் கூறாய்
நேயமாய்மனமகிழ்ந்து சற்றேகடைக்கண்ணால் பாராய்
ராஜராஜனேஉந்தனை நஷ்டமாயிழந்துவிட்டோம்
வாஸுதேவ சாரங்கேசனால் வஞ்சனைசெய்திடப்பட்டோம் ௯௭)

## விருத்தம்.

பதியுடலைமடியில்வைத்து பரதவித்துப்புலம்பும்போது
கதிரவன்மேற்குதிசையை கடுகியேயடைந்துவிட்டான்
இதுவென்ன ஆச்சர்யமென்று யெமனங்கேபாலனாய்வந்து
மதுரவசனத்தால் மனந்தேறிடச்சொல்லுரானே (௯௮)

## கும்மி.

லோகத்துனுடைய ஜெனனமரண கெதியையறிந்துமிருக்கிறயிவாள்
மோகத்துக்குயென்னசொல்ல போகுறோமாச்சரிய மாகயிருக்கிறது
மனிதனெந்த அவ்யக்த்தத்திலிருந்து வந்தானோ அந்தஅவ்யக்தத்தயே
இனிதாயடைந்துயிருக்க அவனைக்குறித்துவியர்த்த மாகத்துக்கிக்கிறார்
நாமோமிகவும்தன்யர்களாயிருந்தும் யாதோருபகவான் கெர்ப்பத்திலே
தாமேரெக்ஷிக்க படுகிறோமோ அந்தபகவானே யெங்கும்ரெக்ஷிக்கிறார்
மாதாபிதா பிராதாபெந்துக்களாலே யெப்போதும் ஸம்ரெக்ஷிக்கப்பட்டா
லும்

மாதவன்கடாக்ஷமில்லாதவன் விர்த்தியாகமாட்டான் நசித்துப்போகிறான்
இந்தபிரபஞ்சத்தை சிருஷ்டித்தும் ரெக்ஷித்தும் ஸம்ஹரிக்கிறார் ஸம்ஹாரத்திலும்
அந்தபிரபுவுக்கு ரெக்ஷிப்பதிலும் கிரீடாஸாதனமாகச் சொல்லுவார்கள்
விந்தையாய் ஜெலப்பரமாணுக்களாலே உண்டானநீரில்குமிழிகளும்
இந்தபிரதி விப்பிரமாணுக்களாலே உண்டான கெடபடாதிகளும்
எப்போதும்தேஜஸூப் பரமாணுக்களாலிருக்கும் பலபூஷணாதிகளும்
தப்பாமல் திரும்பநசிப்பதுபோல் பிரதிவியப்புதேஜஸூக்களாலே
உண்டான இந்தச்சரீரமாவிர்ப்பவித்து நசிக்கிறதாத்மாவோவென்றால்
ஒன்றிலும்சேரான் நசிக்கிறதில்லை யெப்படியானாலாகாசமானது
ஸர்வத்தையும் வியாபித்துக்கொண்டிருந்தாலும் ஒன்றிலும் ஸங்கப்படாததுபோல்
நிர்விகாரஞானபுருஷன் தேகாதிகளைக்காட்டிலும் வேறாயிருக்கான்
வாருங்கள்மூடர்களே உங்களுடைய பர்த்தாவான இத்தேசாதிபதி
பேரும்சுயெக்ஞயனிவடத்தில் படுத்திருக்கிறானு புலம்புகிறீர்
உங்கள்ரோதனத்தை கேழ்க்கிறவன் பிரியவசனங்களை சொல்கிறவன்
இங்கேயந்தபுருஷன் ஒருக்காலும் கண்ணில்காணப்படபோறதில்லை
தேகமனித்யமாத்மா நித்யமென்று அறிந்திருக்கிற ஞானியர்கள்
சோகப்படார்களிப்படிப்பட்ட ஞானம் திடமாயில்லாததினாலே
துக்கப்படுகிறபேர்களுடைய ஸ்வபாவமாகவேயிருக்கிறது
மிக்ககாட்டில் வேடன்பக்ஷிகளுக்கெல்லாம் மிருத்யுவாக ஒருவனிருந்தான்
ஆணும்பெண்ணுமாக கூடிக்கொண்டு ஆனந்தித்திருக்கிறபக்ஷிகளில்
தானேபெண்பக்ஷி மாம்ஸாபேக்ஷையினாலே வலையிலேபோய்சிக்கிக்கொண்டது
தன்னுடையபாரி போய்விட்டதைக்கண்டு தவித்துமனதுகிலேசத்துடன்
உன்னைவிட்டுப்பிரிந்திந்த சிசுக்களை என்னமாய்ரெக்ஷிக்கப்போகிறேநான்
நானும்மரணத்தடைகிறேனென்று புலம்பிக்கொண்டிருக்கும்வேளையிலே
கானவேடன்மறைந்திருந்து ஒருபாணத்தினாலதை ஸம்ஹரித்தான்
ஸந்ததம்சாரங்கேசனுக்ஞையாலுங்களை ஸம்ஹரிக்கப்போகிறான் நாளையென்று
இந்தவிதம்பாலனுண எமனங்கே யியம்பியே யந்தர்த்தானமானான். (௬௬)

---

## விருத்தம்.

சிந்தைதெளிந்தெல்லோரும சீக்கிரமாயெழுந்திருந்து
ஸந்தம்ருஜனுக்கு சாமகிரிகளைகள் செய்தார்யென்
றிந்தவிதம் ஹிரண்யகசிபு யின்பமாயுரைக்கக்கேட்டு
அந்ததிதி மனஸ்தாபத்தை ஆறினள் கோறினளே. (எ௰)

## விருத்தம்.

அன்புடனே பூமிஸதுதித்த வாக்கியங்கேட்டு
அசுரர்குலவைரிமன மகிழ்ந்திருந்தார்
தம்பிமடிந்ததை அறிந்தஹிரண்யகசிபு
ஆயரடையும் தாயுடையமனதைத்தேற்றி
தெம்பதுகுறைந்து வதப்பட்டான்நரன்போய்
அயனைக்குறித்து தவமிருந்துவரம் வாங்கிவருவேனென்று
வெம்பியே கண்சிவந்து மந்தராசலத்தை
நாடினன்தவநிலையில் கூடினனே. (எக)

## விருத்தம்.

வானவர்கோனிந்திரனந்த தருணமதை அறிந்துகொண்டு
மானினியான நீலாவதியைப்போய் கிரஹிக்கும்போது
தானவேந்திரனில்லாமையால் இந்ததாழ்வு வந்ததென்றுநினைத்து
தீனசரண்ணியன்பாதம் தொழுகின்றாளழுதழுதுவிழுகின்றாளே. ()

---

இரா-நீலாம்புரி-ஆதிதாளம்.

இதுவென்ன அன்யாயம்
மதுஸூதன பிரபோ ஓ
மதுஸூதன பிரபோ
பதிவிரதாபங்கம் வரலாமோ
என்தலையிலே பிரும்மா
இந்தவிதிக் காளாக யென்னை
இந்தவிதிக் காளாக
யெழுதியிருந்தானே லெக்ஷ்மீசா
இந்தக்கொடு வினையை
எந்தவிதம் ஸகிப்பேன் நான்
எந்தவிதம் ஸகிப்பேன்
கோவிந்தா முகுந்தா வாஸுதேவா
ஸர்ப சயனா
க்ஷீரசாகருத் மஜைமன்னா

| | |
|---|---|
| க்ஷீரசாகருத் | மஜைமன்று |
| கர்ப்பிணியான | யென்னைதேவா |
| துர்பலமுள்ள | யிந்திரன் |
| தூக்கிக்கொண்டு | போவது யென்னை |
| தூக்கிக்கொண்டு | போவது |
| சர்ப்பகத்தருவோ | ஞாயமா |
| கேசவா | ஜெகதீசா |
| கெம்பீரா மிருது | பாஷா ஓ |
| கெம்பீரா மிருது | பாஷா |
| கிலேசந்தாளலே | சாரங்கேசா (எஉ) |

---

## விருத்தம்.

உத்தமியான நீலாவதிதேவி புலம்பும்போது பிர்ம்ம
புத்திரரும் நாரதரும் தேவராஜனெதிரேவந்து பகவத்
பக்தனைஉதிரத்தில் வைத்திருக்குமிவளை கிரகித்துப்போவது
யுக்தமில்லைஇதற்குவழி சொல்லென்பார்தேர்விடாதே வில்லென்பாரே

---

## கீர்த்தனம்.

இரா-மத்ந்தியமாவதி-ஆதிதாளம்.

### பல்லவி.

வந்தார் நாரதமஹாமுனி இந்திரனுக்கெதிரே
வந்தார் நாரதமாமுனி

### அநுபல்லவி.

அந்தக்கயாதுவின் ஸுந்தரஉதரத்தில்
ஸந்ததம் ஹரிபக்தர் யிருந்ததையறிந்து வந்தா

### சரணங்கள்.

நாராயணனுமது ஸுதனு கோவிந்தா நரபோஷணு
பேருயிரம்படைத்த ஸச்சிதாநந்தா போகசயனு
காருர்நீலவண்ணனே முகுந்தா கமலநயனு
தீராவினைகளை தீர்த்துரெக்ஷிப்பாயென்று
பாருயணஞ்செய்து வீணைகைகொண்டு வந்தா

வாஸுதேவனே ஹ்ரிஷிகேசா வைகுண்டவாஸா
நாசரகிதாபிர [illegible]சா ஜெகதீசா
மாசத்த லக்ஷிமி மகிழும்பிராணேசா சாரங்கருஜா
வாலவனயன் தொழுதேத்தும் பிரபுவேயென்று
ஆசையோடடிக்கடி தியானித்துக்கொண்டு வந்தா (எச)

---

## விருத்தம்.

நாரதபகவான்தன்னை நன்றாகநமஸ்கரித்து
நேரேயஞ்சலித்துக்கொண்டு நெஞ்சுருகி கண்ணீருதிர்த்து
பூரணபிர்ம்மத்தைக்கண்ட புண்ணியனேயென்று ஸ்துதித்து
ஸாரமிருதுவசனந்தாலிந்திரன் ஸந்தோஷித்துரைசெய்வானே (எரு)

---

## கீர்த்தனம்.

இரா-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

### பல்லவி.

அய்யாநாரதமுனியே யென்மீதில்
கிருபைசெய்யவேணும் மகாமுனியே

### அனுபல்லவி.

அய்யாஇந்தசிசுவை கொய்யவேணும்பின்பிவனை
மெய்யாகொண்டுபோய் வுடுவேன் உய்யவகைபாராய் யென் அய்யா

### சரணங்கள்.

மூர்க்கனுக்கு ஜனித்ததுர் மார்கமிதை வைத்தால்
பார்க்குள்மனிதர்தேவரெல் லோர்க்குக்கெடுதியாகும் அய்யா
வாசுதேவனுமரிஷி கேசனாகியசாரங்
கேசனதிய இவனை கி லேசப்படுத்துவதில்லை அய் (எசு)

---

## விருத்தம்.

கறுவைவஞ்சத்துவிட்டு கவலைகளற்றபின்பு
அரிவையை விடுவேனென்று அகமகிழ்ந்திந்திரன்கூற
சர்வவிதத்தாலு முட்டாளனைப்போலேகண்டதில்லை-யென்று
மருமமெல்லாமறிந்த மகரிஷியும் மொழிகின்றார் அமிர்தவருஷம்பொழி
கின்றாரே. (எஎ)

## கீர்த்தனம்.

இரா-சாவேரி-ஆதிதாளம்.

### பல்லவி.

நீலாவதிகெற்பத்தை-நீ லேசாய் நினைத்தாய் — இந்திரா
நீலாவதிகெற்பத்தை-நீ லேசாய் நினைத்தாய் நீலாவதி

### அநுபல்லவி.

மேலாம் பத விளையத்தரும்
மாலாம்ஸ்ரீ அரிபக்தனை நீலாவதி

### சரணங்கள்.

மாதவரனந்தசல் யாணகுணத் துரைப்பன்
பூததயவுடனேயெப் போதுமிருப்பன்
வேதியர்களேதெய்மென் றெண்ணிஸ்துதிப்பன்
காதக இரண்ணியனைப்போலே யிரான்குணமாயிருப்பன் நீலா
இந்தசிசுவைநீ சொன் றுலதுசாகுமா—பின்
னிந்திரபதவிக்கி நீ போகலாகுமா-போனுலுணக்
கந்தமாம் திரிலோகாதி பத்யம் வருகுமா
னந்தமுகுந்தருக்குந்தன்மேலே கிருபைவருகுமா நீலா
காச்யபிரஜாபதி போலவேயிருப்பன்
தோஷதுர்க்குணங்களுக்கு கூசிகடப்பன்
நேசமாய்ஹரிதாஸர்களையே ஸேவிப்பன்
வாஸுதேவரானசாரங் கேசதுரையாய் பாவிப்பன் நீலா (எஅ)

---

### விருத்தம்.

இந்திரா இவளையிப்போ பென்னுடாசிரமத்தில்விட்டு
வந்தஜோடில்லாமல் பொன்னுலகம்போய் சேர்வாயென்ன
சிந்தையில்மகிழ்ந்துவந்தனஞ் செய்துரிஷிபாதத்தை
சொந்தமாம் நகரடைந்தான் பின்பு நாரதமுனியுமெண்ணினர் நீலாவதி
க்கி பக்திஞானோபதேசம் பண்ணினரே. (எக)

---

### விருத்தம்.

மந்தராசலத்திலிரண்ணியகசிபு செய்யுந்தபசினலே
அந்தமாம் லோகமெல்லாம் அனலெழும்பியதினலே
இந்திராதிதேவரெல்லாம் வாணிமன்னனிடத்தில் சென்று
வந்தனஞ் செய்தெல்லோரும் முறைப்பட்டார் அயனறிந்து வரம்கொடுக்
கப்புறப்பட்டாரே. (அ0)

## கீர்த்தனம்.

இரா-சங்கராபரணம்-ஆதிதாளம்.

### பல்லவி.

தேவருடன் கூடி — திசைமுகன்
இரண்ணியனைத் தேடி
வாரம்மந்தராசலம் நாடி தேவ

### அநுபல்லவி.

கோவைக்கனியிதழ் வாணியோடம்ஸத்திலேறி
பூவைவண்ணன்ஸோதர் வருகுறுய்யாரம் பாரீர் தேவ

### சரணங்கள்.

கெந்தர்வராஜர்கள் வீணுகாணங்கள் பாட
அந்தமாம் ரம்பையூர் வசியர்களாட
விந்தையுடனேதேவதைகள் சாமரம் போட
மந்தமாருதம்வீசமகா உல்லாசத்தோடேகூட தேவ
அத்திமத்தள தாளவாத்யங்கள் கோஷிக்க
முத்துரத்னுபரணங்கள் பிரகாசிக்க
எத்தையிவன் வரம் கேழ்ப்பானேவென்று நினைக்க
நித்தியானந்தசாரங்கேச துரையை ஸ்துதிக்க தேவ (௧௯)

### ஸ்லோகம்.

உத்திஷ்ட்டோத்திஷ்ட்டபத்ரந்தே
தபவிந்தோஸிகாச்யபா
வரதோகமனுப்பிருப்தாம்
பிரயதாமீப்சிதோவரகா (௨௦)

### விருத்தம்.

வாரும்புள்ளாயிரண்ணியககபோ வரனுனக்கு தருகவந்தேன்
பாரினிலுன்னைப்போல்தவம் ஒருவரும்செய்ததில்லை.
பூரணமாய் மனதில்நீ நினைத்தவரனை கேளென்னவே
நீரஜாஸனரைப்பணிந்து பூஜிப்பான் வரன்முழுதும் யாஜிப்பானே (௨௧)

## கீர்த்தனம்.

இரா-தோடி-ரூபதாளம்.

### பல்லவி.

வேதன்பத்ம மலரிலுதித்தவேதன்

## அனுபல்லவி.

வேதன்வாணி நாதன் அருள்
நீதன்தேவர்பணிபாதன் வேதன்

## சரணங்கள்.

மேலானகுண சீலன் ஸாக
போலன்ஜனபரி பாலன் வேதன்
கருணாகர நிர்விகார
ஸர்வவரன் அருணந்திர வேதன்
சதுரானன கெதிநீரன்று
அதிஸாகுண மாதுரவகன வேதன்
ஈசன்சாரங் கேசப்ரிய
நேசன்ஸத்திய லோகவாசன் வேதன் (அசு)

---

## ஸ்லோகம்.

யதிதாஸ்யஸ்ய பிமதான்வரான்மே வரதோத்தமா
பூதேப்யஸ்த்வத் விஸ்ருஷ்டேப்யோம் ருத்யுர்மாபூன் மமப்ரபோ (அரு)
நாந்தர்பஹிர் தி வானக்தமந்யஸ்மாதயி சாயுதை:
நபூமௌநாம்பரேம் ருத்யுர்நகரைர்நம் ருகைரபி (அசு)
வ்யஸுபிர் வாஸுமத்பிர்வாஸுராஸுரமஹொரகை:
அப்ரதித்வம் த்வதாம் யுத்தெஹைகபத்யம் சதேஹினம்
ஸர்வேஷாம்லோக பாலனும் மஹிமாநம்யதாத்மன:
தபோயோகப்ர பாவானும் யன்னரிஷ்யதி கர்ஹசிது (அஎ)

## இரணியன்வரம் கேழ்ப்பது.

பத்யம் இரா-ஆனந்தபைரவி

வாணிமண்ணுபூமி ஆகாசம்ராத்ரி பகல்உள்வெளி
அக்னிஅஸ்திரசஸ்திரஜலத்திலும்
வானவர்கள் மனிதர்சகல மிருகங்களாலும்
திக்குக்களிலுயிர் உள்ளதுயிர்போனதாலும்
தானவர்கள் யக்ஷருக்ஷஸகுஹ்ய பன்னகாள்
உம்முடைசிருஷ்டிக்குள் பட்டதாலும்
பிராணபயமில்லாமல் எந்தனுக்குவரமதனை
தக்கருளவேணும் மகாநுபாவா

தேவதேவபிதா மகனே கமலாஸனு
தேவதேவனேசகல ஜெந்துயிரபோஷணு
தேவதேவனே ஸர்வகுண பரிபூரணு
தேவதேவனே யெனைக் காத்தருளும் ஹம்ஸவாகனு (அஅ)

---

விருத்தம்.

இந்தவிதம் இரண்யன்கேட்ட வரமதைக்கொடுத்துவிட்டு
யெந்தவிதத்தாலும்தந்தை வதம்செய்வரென்று நினைத்து
அந்தரமாய்ஸத்யலோகம் அயனவர்போய் நடந்தபின்பு
மந்தஹாசமுகத்துடனேவருகின்றான் அசுரர்களுக்குசேவைதருகின்றானே

இரண்யன் வரம்வாங்கிவந்தது.

கீர்த்தனம் இரா-சுருட்டி-சாபுதாளம்.

பல்லவி.

சதுர்முகனிடத்தில் வரம்பெற்று
குதூஹலத்துடன் களித்து
சதுர்முகனிடத்தில் சதுர்

அனுபல்லவி.

யெதுவும்நிகருக யெண்ணுமலே
மதுஸூதனனே மைண்டு பண்ணுமலே சதுர்

சரணங்கள்.

வாஸவன்யெயன் குபேரன்வருணனை
வாய்கொண்டமட்டும் யேசி
தேஜஸோடிருக்கும் யென்னைத்தவிரசார்வ
கேசதுரைவேறில்லை யென்று பேசி சதுர் (கூ௰)

---

ஸ்லோகம்.

பாவகம் சமயிஷ்யாமி தாரயிஷ்யாமி மேதினி
ஸாகரம்க்ஷோபயிஷ்யாமி சூர்ணயிஷ்யாமி பர்வதானு (கூக)

விருத்தம்.

பதிவிரதைகளைகெடுத்து பட்டணம் ராஷ்டரம்
புரக்ராமம் நெருப்புவைத்து
அதிதி அப்யாகதா லந்தணர்கள்தம்மை
அங்கங்கேகண்டவுடன் சிரமைசேதித்து

அதிர உலகெலாமதிர்த்தா லரியவன் வருவன்
அவனையென்கைசூலத்தால் கழுத்தில் குத்தி
உதிரம்வருவதைக் கையிலேந்தி தம்பிக்கி
உத்தாருமைசெய்துஸுகம்பெத்திடுவேனே (கூஉ)

## விருத்தம்.

ஸூரியன்போலேதோத்தி துலங்குவன் ஆகாசத்தில்
வீரியம்மிகசெலுத்தி விண்ணவரை நடுங்கச்செய்வன்
நேரில்வா விலக்கண்ணுடி போலென்றுமதியைகோபிப்பன்
ஆரிப்படி புவனமரண்டாரென்று யிவனுக்கீடுசொல்வேன் (கூ௩)

## விருத்தம்.

வரமதைபெத்துவந்த மகுத்துவத்தினுலே இரண்யன்
திரணமதாகயெண்ணி தேவரைஹிம்சிக்கும்போது
சர்வலோகசரண்யன் பாதம்பணிந்தவாள் ஸ்துதிக்கசேட்டு
பரமபதனுதன்வாக்குச் சொல்லுகின்றார் பயப்படாதீர்களென்றுரே (கூ௪)

## ஸ்லோகம்.

மாபைவ்ஷ்ட்டவீபுதச்ரேஷ்ட ஸ்ஸர்வேஷாம் பத்ரமஸ்துவ:
ம்த்தெர்சனம்விபூதாநாம் ஸர்வேச்ரேயோபபத்தயே (கூ௫)
க்ஞாதம்மேதஸ்ய தெளராத்மியம் தைதேயாபசதஸ்யயது
தஸ்யசாந்தியம்கரிஷ்யாமி காலஸ்தரவத்ப்ர தீக்ஷயதாம் (கூ௬)
யெதாவேதேஷு தேவேஷுகோஷு விப்ரேஷு ஸாதுஷு
தர்மேமயிசவித்வேஷ ஸ்வா ஆசுவினச்யதி (கூ௭)
விர்வைராயப்ர சாந்தாயஸ்வஸுதாய மகாத்மனே
பிரக்லாதாய யதாத்ருஃயேத்தனிஷ்யேபிவரோர்ஜிதம் (கூ௮)

## பகவான்தேவதைகளுக்குச்சொல்லுவது.

கீர்த்தனம் இரா-புன்னுகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

அஞ்சவேண்டாம் தேவர்களே
கொஞ்சங்கூட மனதஞ்சவேண்டாம்

அனுபல்லவி.

கொஞ்சபுத்தியுடைய வஞ்சக இரண்யனை
பஞ்சாய்பறக்கடிப்பேன் கிஞ்சிற்றேனும்நீசவ் அஞ்ச

சரணம்

மெத்தவித்தையுரையும் கோக்களையும் ஹிம்ஸித்து
சுத்தமத்தவேத சாஸ்திரத்தை நிந்தித்து
நித்தியஜெயதப ஹோமத்தையும் கெடுத்து
சித்தநிர்மலரான ஸத்துக்களை பழித்து
குத்துக்கொலைக்கஞ்சாத இரண்யனுக்கு முதல்
புத்திரருகஜெனித்ததி சிலராக
சித்திடைமாதரை பெத்ததாய் ஸகோதரமென்றும்
ஒத்தில்லாமகிமையோடிப்படி யிருக்கின்ற
பெற்றபுத்திரனைவருத்தும் போதவனுக்காய்
நித்தியானந்த சாரங்கேச துரையான நான்
அத்தருணத்தில் வதைத்திடுவேன் சற்றும் அஞ்ச (௩௩)

---

விருத்தம்.

ஸ்வாமியுரைத்த வாக்யம்கேட்டு ஸந்தோஷமாய் தேவரெல்லாம்
தரமஸகுண இரண்யன்சொல்க் குள்ளடங்கினர் அவனிட்டவேலை செய்ய
த்தடங்கினரே (௩)

சூரணிகே

இ-ம் ஆரபி ஆதிதாளம்.

வருணனும்வாசலில் நீர்தெளிக்க வாயுவுங்குளிர்ந்தவீச
பருவமதை அறிந்திந்திரன்பணிவிடையென்னென்றுகேட்க்க
தருமருஜனும தான்வந்து தாளிணைபணிந்து நிற்க்க
திருமுகம்பார்க்க சந்திரன் தெர்ப்பனமபோவிருக்க
மருமமதை அறிந்து சூரியன் மந்தகெதியாயநடக்க
ஸருவதேவதைகளும் பயந்து தலைவாசல்தன்னில்நிற்க
கருவிடமுள்ளனந்தன் கலங்கியேஉடல் நெளிக்க
திரிபுவனதி பத்யம்செய்து களித்திருந்தான் ருஜமன்னன் (௩௪)

விருத்தம்.

இந்திரன் அமரைவிட்டான் ஈசன்கைலாஸம்விட்டான்
பைந்துழாமாலையானும் பாற்கடல்தன்னைவிட்டான்
உந்தியலுதித்தோன் ஸிருஷடிசெய்கின்ற தொழிலைவிட்டான்
அந்தமாம் காச்யபதனயன் அரசாகுதிசெய்யும்போது

### விருத்தம்.

தம்பிமடிந்ததைக்கேட்டு தானவேந்திரன் பொருமல்
அம்பிஞேட்படானைப்பார்த்து அரியிருக்குமிடமுறைத்து
வெம்பியேதேவர்விப்ரர்கோக்களைசொன்றரசுவெட்டிகுளங்கள்தூர்த்து
கெம்பீரமாய்கோவிலிடித்துயெக்ஞயாசாதிகளைகெடுப்பீரென்றகூறிஞன்
மனஸ்தாபத்தையாறிஞனே (௩௪)

### விருத்தம்.

இந்தவிதம் ஆக்ஞாபித்து சிந்தைமகிழ்ந்திருக்கும்போது
முகுந்தருட பக்தனைலீலாவதிமைந்தனைப் பெத்தாளே

### பிரக்லாதரவதாரம்.

கீர்த்தனம் இராகம்-செஞ்சுருட்டி-சாபுதாளம்

### பல்லவி.

பரமபாகவத சிகாமணியாகிய
பிரக்லாதரிருந்ததை சேளும்

### அநுபல்லவி.

தரணிதனில் ஜெனித்திடுவதின் முன்னமே
ஸூரரெக்ஷகனை ஹிருதயத்தில் தியானித்து பரம

### சரணங்கள்.

ச்ரோத்ரத்திஞலே ஸ்ரீமாதவன் கீர்த்தனைகளையேஸதா கேட்பர்
நேத்திரத்திஞலே திவ்யமங்கள மூர்த்திதனையே ஸேவிப்பர் ப
உத்தமதிருவடியி லர்ச்சித்திருக்கும் திருத்துளபமாக்ருணிப்பர்
நித்தியானந்த பிரபுவினுடைய குணங்களையேஸதா வர்ணிப்பர் ப
ஹஸதத்திஞல்ரிஷிகேச னடியில்மலராவர்ச்சிப்பர்
மஸ்தகத்திஞல்மதுஸூதனனை வணங்குவர்மற்றவிஷயம்வர்ஜிப்பர் ப
ஆதரவுடனே அனந்தனுடைய ஆலயத்தைப்பிரதக்ஷணம்பண்ணுவர்
பூததயவுடனேயிருந்து ஸதாஸாது ஸங்கதிபண்ணவேணு மென்றெண்ணு
வர் ப
மாசற்றசாரங்கேசதுரை கைங்கிரியத்தி லாசைகொண்டுதிரிவர்
தோஷதூர்க்குணமற்றஹரிதாஸர்களுடையமகிமாயதிசயத்தறிவர் ப (௩௫)

---

### விருத்தம்.

திருமகிவ்ந்தனை் தடிபணிந்து ஸுகமடைந்து
ஸதாஸ்துதித்தவளிருக்குகின்ற

அரவின்மேல்படுத்துகந்த அருள்வாரிதியான
அகிலாண்ட நாதன்றன்னை
இரவுபகல் ஹிருதயத்தில் தியானித்திருக்கும்
பிரக்லாதருட பக்திதன்னை
ஸுரபதி வாணிபதி பிரகஸ்பதி திக்பதி அகிபதி
வர்ணிக்க தரமா. (ராக)

---

### விருத்தம்.

கொண்டல்நிறமேனியன்மேல் மனம்நிறுத்தி பிரக்லாதர்
உண்பதும் உறங்குவதும் மறந்திருக்கும்போது
எண்டிசையும் அலங்கரித்து மைந்தனுக்ககூராப்யாஸ
மென்றெல்லோர்க்கு மறிவித்திருக்க
கண்டகஹிரண்யகசிபுயேவலினால்குரு
வுடனேகூட
சண்டமார்க்களிரண்டு பேரும்
வந்திட்டார் ராஜனுக்குஸேவை தந்திட்டாரே.

---

### பத்யம்.

அந்தபரகிரயனுன்ன வடபெலுகண்டஸ்மத் ப்ரதாபக்ரியா
கந்தம்பிச்சகலேது மீரகுருவுல்காருண்ய சித்துல்மனோ
பந்துல்மான்புலு மாகும்பெந்தலுமமும் பாடிஞ்சியீபாலகுன்
கிரந்தம்புல்சதிவிஞ்சி நீதிகுசலுங்காஜேஸி ரக்ஷிம்பரே. (ராக)

### இரண்யன் குருவுக்கு சொல்வது.

கீர்த்தனம் இ-ம் பந்துவாரளி சாபுதாளம்.

#### பல்லவி.

குருபுத்திரர்களே யெந்தன் குழந்தைக்கு
திரிவிதமாகிய சாஸ்திரங்களைப் போதிப்பீர் குரு

#### அநுபல்லவி.

பருவமாகியமோக்ஷம் ஒன்றுநீங்குதலாக
சருவமும் நம்மஅஸுர நீதியைமேலாக குரு

#### சரணம்.

உத்தமகுலதீப ரத்னமாகிய ஸத்
புத்திரனுக்குவித்தை யுபதேசித்து

வைத்துவந்தாலப்போ மெத்த ஆனந்தமாக
வித்தியரேவுங்கள்பாதம் பத்திப்பணிவேன்ஸத்யம் குரு (ாகூ)

## விருத்தம்.

இரண்யாயநமஹாவென்று யெழுதென்று சண்டாமார்க்காள்
உதியாய்ச் சொல்லக்கேட்டு உத்தமபிரக்லாதனரும்
பரமகுருவாகிய பரந்தாமா ரிஷிகேசா நாராயணாவென்றும்
சரண்யனுடநாமத்தை ஸந்தோஷமாய்சொல்லுவா ரிதரவிஷயத்தை
தள்ளுவாரே. (ாம)

## நாமாவளி.

ஆதிமத்தியாப்தரஹிதா அனாதரக்ஷகா
ஆசரிதபலப்பிரதானா அபாரகருணாம்புதே
அப்பரமேயா அபரிச்சின்னவைபவா
அவாக்மனோகோசரா ஆபன்னிவாரணா
அமலமங்களதேகா அரவிந்தபாதா
அருணாம்பரதரா அமராரிவிரஸனா
அச்சுதாநந்தா அரவின்மேல்சயனா
ஆதரித்தின்னே அடிமைகொண்டென்னை.

## பாசுரம்.

வாடினேன்வாடி வருந்தினேன்மனத்தாற் பெருந்துயரிடும்பையிற் பிறந்து
கூடினேன்கூடி இளையவர்தம்மோடவர் தருங் கல்வியேகருதி
ஓடினேனோடி யுய்வதோர்பொருளாலுணர்வெனும் பெரும்பதந்தெருந்து
நாடினேன்நாடிநான் கண்டுகொண்டேன் நாராயணாவென்னும்நாமம்.

---

## பிரக்லாதர் தியானிப்பது.

## கண்ணிகள்.

இ-ம் பலஹம்ஸா சாபுதாளம்.

சிரஸேநீவணங்காய் செந்திருமகிழ்ந்தணைகின்ற
உரசோாழிப்படையான் பாதத்தை சிரஸேநீவணங்காய்
கண்ணேகண்டுகொள்வாய் கரியினிடரைத்துடைத்த
தண்ணந்துழாய்முடியான் திருமேனியை கண்ணேகண்டுகொள்வாய்
மூக்கே ஆக்ருணிப்பாய் மூவுலகுண்டுமிழ்ந்தளந்த
காக்கையைக்காந்த காகுஸ்தன் திருவடிதுழாய்மூக்கேஆக்ருணிப்பாய்
காதேநீகேழ்ப்பாய் கடலடைத்திலங்கைசெத்த
வேதாவைப்பெற்ற நாதன் சரிதையைத் காதேநீகேழ்ப்பாய்

வாயே நீதுதிப்பாய் திவ்ய வைகுண்டவாஸரான்
ஆயன் திருக்கல் யாணகுணங்களை வாயே நீதுதிப்பாய்
நெஞ்சே நீநினைப்பாய் நீலவலைபோல் சயனித்த
பஞ்சாயுதபாணி யானபரமனை நெஞ்சே நீநினைப்பாய்
புத்தியேயுற்றுணராய் பூர்வ ஜென்மவினை தீர்
தத்துவப்பொருளான தாயோத்ரனேயென் புத்தியேயுற்றுணராய்
கையே பணிவிடைசெய் கருத்தில் வஞ்சனையில்லாமல்
குய்கஹர்சாபந்துடைத்தகோபாலனுக்குகையேபணிவிடைசெய்
பாதமே நீவலம்வா பக்திஸ்ரத்தையுடனுகவே
ஸ்ரீதரக்ாலயத்தை அனுதினமும் பாதமே நீவலம்வா
சாச்வதசார்ங்கேசனை ஸர்வடெந்துவுமென்றெண்ணிக்கொள்
வாஸவன்யன் ஈசன் தேவர்பணியும் சாச்வதசாரங்கேசனை (ராம)

## குருவுக்கு பிரதிசோல்வது.

கீர்த்தனம் இ-ம புன்னுவராளி சாபுதாளம்.

### பல்லவி.

நேராகவே சொல்லாமல் குரு
இரண்யாய நமஹாவென்ன நேராகவே

### அநுபல்லவி.

ஸாரந்தெரிந்தபிரக்லாதரிதை தள்ளி
நாராயணனுடைய நாமத்தை பண்ணநண்ண நே

### சரணங்கள்.

மூனுவிதஸாஸ்திரத்தை சண்டாமார்க்கள்
தானே உபதேசிக்க ஸ்
தாணுவாகவேமனஞ் சலியாமலே பிரக்லாதர்
தீனசரண்யன் திருவடியே பஜிக்க நே
இஜ்ஜெகவாழ்வனத்தேன் சண்டாமார்க்காள்
நிச்றசெயமென்று சொல்ல
மச்சாவதாரயென் அச்சுதரேயல்லால்
துச்சஸுகமிதுவென்ற ச்சமல்லாமல்தள்ள
ராஜன் நீதியனைத்தே குரு
விச்வாஸத்தோ டுபதேசிக்க
நேசமாகவே சாரங்கேசர்க்கு . நிஜ
தாஸனென்றவர்ஸதா ஸந்தோஷிக்க நே (ராம)

### விருத்தம்.

குருவிடபுத்திரர்களே யென்னிரு கண்ணுக்குவமையான
அருமைமைந்தனையிங்கே அழைத்துக்கொண்டுவருகுவீரே. (ராமசா)

---

### சகலருக்கு பிரக்லாதர் வருவது.

கீர்த்தனம்-இ-ம்-தோடி-சாப்புதகலம்

பல்லவி.

பாலன் வருகிறார் பிர்க்லாத
சீலன் வருகிறார் பாலன்

அநுபல்லவி

பாலன் வருகிறார் குரு ஸாதரோடிணங்கி
மாலின் மகிமை கினைந்தடிவணங்கி பாலன்

சரணம்.

விக்துலமைதபதியை மிகக்கொண்டாடி
சிந்தைமகிழ்வுட னுகவே கின்றாடி
சந்திரபிம்ப முகஉதுடனே கூடி
தந்தை அரசுசெய்யும் கொலுவைநாடி பாலன்
தாயும்தந்தையும் ஸகலரும் பொய்யென்று
மாயாவிகாரஸம்ஸார மிதுவென்று
ஆயிரநாமசாரங்கேசரை மெய்யென்று
ஒபாமலானந்தா சிறுவைவிட்டுக்கொண்டு பாலன் (ராகு)

---

### விருத்தம்.

வந்ததோர் ஸுதனை இரண்யகசுபு மடிமீதிலெடுத்து வைத்து
அந்தமாமம் முகத்தைப்பார்த்து முத்தமிட்டுச்சிமுகந்துகொண்டு
எந்தன்குலதீபமே யென்தவப்பயனே யெனதாவியேயென்று
மந்தஹாஸமுகத்துடனே சொல்லுவான்மிகத்தழுவிக்கொள்ளுவானே ()

### இரண்யன் பிரக்லாதனைப் பார்த்தானந்திப்பது

கீர்த்தனம் இ-ம் காம்போதி ஆதிதாளம்

பல்லவி.

வாராய்ஸுதனே நீ கற்றவித்தையிலொன்று
ஸாரம்சஞ் சொல்லாய் யுந்த நேராய் வாராய்

## அனுபல்லவி.

பாராய்திரு லோகாதிபதியாகிய யென்னை
கூறுயென் செவிக்கின்ப மாகவென்கண்ணே வாராய்

## சரணம்.

நிர்ம்மலசித்தஞன ஸுகுமாரா
பிர்ம்மகுலத்தில்வந் துதித்தகெம்பீரா
மர்ம்மமரிந்தத்தை சொல்வாய்குணகரா
கல்மஷமற்றசாரங்கதரர் தாஸனுகாமல்தீரா வா (௱௰௭)

## பத்யம்.

சதிவிஞ்சிரிகுருருவுணி சதிவிதிதர்ம்மார்தத
மூகரஸாஸ்திரம்புலநே சதிவின விகலவுபெக்
குலு சதுவுலலோமர்மம் மெல்லசதிவிதிதண்டரீ

---

## விருத்தம்.

குருவெனக் குபதேசித்த
தருமார்த்த காமமென்னும்
ஸருவவித சாஸ்திரத்தின்
மருமத்தை அறிந்தேனண்ணா. (௱௰௮)

## ஸ்லோகம்.

தத்ஸாதுமன்யே ஸுரவர்யதேஹிஞம்
ஸதாஸமுத்விக்ன தியாமஸத்க்ரஹாத்
ஹிதவாத்மபாதம் க்ரஹமந்தகூபம்
வனங்கதோயெத்ரி மாச்ரயேதா (௱௰௯)

## பத்யம்.

அந்தேந்துதயமுல் மஹாபதிரசங்கா ராவமுல்மூக
ஸத்கிரந்தாக்யா பனமுல்நபும்ஸக வதூகாண்க்ஷல்
க்ரதங்கணுவளி பந்துத்வம்புலு பஸ்மஹவ்யமுலு
லுப்த்திருவ்யமுல்க்ரோ டஸத்கந்தம்புல்ஹரி பக்தி
வர்ஜிதுலரிக்த வியர்த்தஸம்சாரமுல் (௱௨௰)

## பத்யம்.

கமலாக்ஷுணர்ஞ்சிஞ்சு கரமுலுகரமுலு ஸ்ரீநாதுவர்ணிஞ்சு
ஜிஹ்வஜிஹ்வ ஸுராக்ஷகு நிஜசு கூட்கலுகூட்கலு

சேவசாயிகிம்ரொக்கு சிரமுசிரமு விஷ்ணுநாகர்
ணிஞ்சு வீனுலுவீனுலு மதுவைரிதகிலின மனமுமனமு
பசவந்துவல்கொனிபத முலுபகமுலுபு நுஷோத்தமுனிமீதபுத்திபுத்தி

## திருபதம்.

தேறதேவுனி சித்திஞ்சு தினமுதினமு
சக்கரஹஸ்துசி ப்ரகடிஞ்சு சதுவுசதுவு
கும்பிநீதவுஜெப்பெடி குருடுகுருடு
தண்டிரிஹரிஜேரு மனியெடி தண்டரிதண்டிரி. (௱உஉ)

---

இராசம்-ஆனந்தபைரவி ஆதிதாளம்.

## பிரக்லாதர் முதல் கேழ்விக்கு சொல்வது.

## பத்யம்.

செந்திருபதியை பூஜித்திடுவதே அஸ்தம்
சந்திரவதனனே ஸ்துதிப்பதுவேவாக்கு
இந்திரஜகாயனைப் பார்ப்பதுவே நேத்திரம்
முகுந்தனைப் பணிந்திடுவதுவே சிரஸு
விஷ்ணுகதாச்ரவணம் கேட்டானந்திப்பதே ஸ்தோத்திரம்
அஸுராரிபுவை தியானிப்பதுவேமனது
கோவிந்தாலயம் வலம்வருவதேபாதம்
ஹரிமீதிலே மனதை வைப்பதுவே புத்தி. (௱[illegible]ரு)

## திருபதம்.

இராஜராஜனை சிந்திப்பதுவே ஸாதினம்
சதுர்முகன் பிதாவை வச்சரிப்பதுவேவித்தை
பூமியில் ஹிதவுபதேசம் செய்பவரேகுரு
புருஷோத்தமனைச்சேர உரைப்பவரே தந்தைதந்தை. (௱உச)

## பாசுரம்.

ஒத்தாருமிக்காரையிலையாய் மாமாயா
ஒத்தா யெப்பொருட்கு முயிருயென்னைப் பெற்ற
அத்தாயாய்த் தந்தையர்யரியர்த னவரிவித்த
அத்தாநீ செய்தனவடியே னறியேனே

---

## விருத்தம்.

மன்னனும் இரண்யகசபுமைந்தன் சொல்லுவதைக்கேட்டு
கன்னனுடைதாஸாளால் புத்திபேதிக்கப்பட்ட டென்றுசிரித்து
இன்னமும்உங்கள் கிரகத்துக்கழைத்துபோகுவீரென்றனுப்ப
உன்னிதமிருதுவாக்கியத்தால் சண்டாமர்க்காள் சேழ்க்கின்றுரே.

---

இம்-ஸ்ரீ ராகம்-சாபுதாளம்.

### பல்லவி

சின்னபருவமுள்ள கண்மணியே எங்கள்
சேழ்விக்கெதிர்சொல்லு எங்கள்

### அனுபல்லவி.

உன்னுடன் கூடப்படிப்பவருக்கில்லாத துர்ப்புத்தி
அன்னியராலே போதிக்கப்பட்டதோ ஹரியை பத்தி சின்ன

### சரணம்.

காச்யபஸுதன்சொல் தள்ளாதே
மகராஜன் கோபமிகப் பொல்லாதே
மோசம்போய் யெங்களை பகைத்துக்கொள்ளாதே
சாரங்கேசதுரையுடைய நாமத்தைசொல்லாதே சின்ன

---

இம்-ஸௌருஷ்டகம்-சாபுதாளம்.

### பல்லவி.

கண்டுகொண்டேன் ஓம்நமோ
நாராணயனென்னும் பேரை

### அனுபல்லவி.

உண்டுகொண்டேன் அவனுடைய சீர்
வள்ளல்வாரியா மமுதே கண்டு

### பாசுரம்.

ஆவியே யமுதேயெனநினைந்துருகி யவரவர்பணைமுலைதுணையாப்
பாவியேனுணராதெத்தனை பகலும்பழுதுபோயொழிந்தின நாள்கள்.

தூவிசேரன்னந் துணையொடும்புணரும்சூழ்புனர்குடந்தையேதொழுதென்
நாவினாலுய்ய நான்கண்டுகொண்டேன் நாராயணவென்னும் நாமம்

---

## பல்லவி.

தந்தைபேரை விட்டு யிதை
யெந்தமதியாய்சொன்னாய் பிரக்லாதா

## அநுபல்லவி.

உந்தலைக்கும் யென்தலைக்கும்
வந்திடுமே மோசம் அடஅட தந்தை

## பாசுரம்.

சேமமேவேண்டித் தீவினைபெரிக்கித் தெருவைமாருருவமேமருவி
ஊமனார்கண்ட கனவிலும்பழுதா யொழிந்தனகழிந்தவந்நாள்கள்
க மனார்தாதை நம்முடையடிகள் தம்மடைந்தார் மனத்திருப்பார்
நாமநானுய்ய நான்கண்டுகொண்டேன் நாராயணவென்னும்நாமம்

## சரணம்.

### பிர

தாயுமாய் தந்தையுமான
மாயன் திருநாமஞ் சொல்லா ல்
தீயஸுரன் பேரைச் சொன்னால்
பாயம்வருமய்யா குருவே கண்டு

## பாசுரம்.

வென்னியேவேண்டி வீழ்பொருட்கிரங்கிவேற் கணார்கல்வியே கருதி
நின்னவாவில்லா நெஞ்சினையுடையேனென் செய்கேனெடுவிசும்பணவும்
பன்னியாயன்று பாரகங்கீண்ட பாழியாநாழியானருளே
நன்னுநானுய்ய நான்கண்டுகொண்டேன் நாராயணவென்னும் நாமம்

## சரணம்.

### குரு

அஷ்டதிக்கு பாலகரும்
அடிவணங்குமு ரிவன்க்கு
துஷ்டத்தனமா ன புத்தி
போதித்தசாரடா உனக்கு தந்தை

கள்வனேனுனேன்படிறு செய்திருப்பேன் சண்டவாதிரி தந்தேனேலும்
தெள்ளியேனுனேன்செல்கதிக்கமைந்தேன் சிக்கெனதிருவருள்பெற்றேன்
உள்ளெலாமுரிகிக் குரல்தழுத்தொழிந்தேனுடம்பெலாங்கண்ணநீர்சோர
நள்ளிருள்ளவும் பகலும்நானழைப்பேன் நாராயணுவென்னுநாமம்,

சரணம்.

பிர

பெந்தன் ஸ்வாமி நாமந்தன்னை
சிந்தைமகிழ்ந்து சொல்லாவிட்டால்
வந்திடுமே காலபாசம்
சமுத்திலே மாட்டகுருவே கண்டு

பாசுரம்.

எம்பிரானெந்தை யென்னுடைச்சுற்றமெனக் கரசென்னுடைவாழ்நாள்
அம்பினலரக்கர் வெருக்கொளநெருக்கி யவருயிர்செகுத்த வெம்மண்ணல்
வம்புலாஞ்சோலை மாமதிட்டஞ்சை மாமணிக்கோயிலேவணங்கி
நம்பிகாளுய்ய நான்கண்டுகொண்டேன் நாராயணுவென்னும்நாமம்

சரணம்.

குரு

குருவுக்குமிஞ்சின சிஷ்யன்
நீயடாபயலே யந்த
திருமணுளன் நாமத்தை
வய்யாதே மனதிலே அடஅட தந்தை

பாசுரம்.

குலந்தருஞ்செல்வந் தந்திடுமடியார் படுதுயராயின வெல்லாம்
நிலந்தருஞ்செய்யும் நீள்விசும்பருளும் அருளோடு பெருநிலமளிக்கும்
வலந்தரும் மற்றுந்தந்திடும் பெற்றதாயினுமாயின செய்யும்
நலந்தருஞ்சொல்லை நான்கண்டுகொண்டேன் நாராயணுவென்னும்நாமம்.

சரணம்.

பிர

உத்தமசாரங்கேச னுமம்
சித்தத்தில் பதிந்த பின்னே
மத்தொரு வர்வந்து மோசம்
[illegible] கண்டு

### பாசுரம்.

தாயேதந்தையென்றுந் தாரமே கிளைமக்களென்றும்
நோயேபட்டொழிந்தேனுன்னைக் காண்பதோராசையினால்
வேயேபூம பொழில்சூழ் விரையார் திருவெங்கடவா
நாயேன்வந்தடைந்தேன் நல்கியாளென்னைக் கொண்டருளே

---

### விருத்தம்

அன்னைகெர்ப்பமுதலாதரித்தாண்ட ஸ்ரீமன்னவனை தவிரவேறே
என்னுடையபுத்திபேதிப்பவரொருவரில்லை இரண்யநாமத்தாலென்பலன்
நன்றாகவேயென்மனதானது சக்கரபாணியுடைய பாதந்தன்னில்
சென்றுதய்யாவென்று சொல்லவேதயித்யகுரு சிறுவான் பிரக்லாதரைப்
பார்த்துகூறுவானே

இம்-செஞ்சோடி-சாபுதாளம்.

### பல்லவி.

கோபத்துடனேகுரு ஒருவார்த்தை
சொல்வாரப் போது

### சரணம்.

பூபதியான இரண்யனை
கெடுக்கவந்தானிவன்குலத் துரோகி பிரம்பை
கொண்டுவாடா வென்றேகி
துணி வாகி கோப

அஸுராளான சந்தன வனத்தில்
குடக்கரிவேலையைப் போலே இவன்
வந்துபிறந்தது ன்றலே
கெட்டுதென் வேலையென்று கோப

### ஸ்லோகம்.

தைதேயசந்தனவனே ஜாதோயம் கண்டகத்ரும:
யன்மூலோன் மூலபரசோ விஷ்ணோர் நாளாயிதோர்பக;

### சரணம்.

கர்ம்பில்லாகோடாலியாகிய விஷ்ணுக்கு
காம்பாகவே இவன் வந்தான் நமக்கு
திம்புக்கிடமெத்த வுந்தான்
இது வீண்ந்தான்யென்று கோப
தர்ம்யார்த்த காமங்களை விரித்து

சொல்லடா சாஸ்திர ங்களை என்று
சொல்லிவைத்தார் நீதிகளை
கேளாதது மூலே கோப
ஆசைவைத்து சாரங்கோன் திருவடி
பூஜிக்கிருனிவ னென்று வெகு
லேசாகவே எண்ணம் கொண்டு
இதுவென்ன வென்று கோப

இம் கமாஸ்-ஆதிதாளம்.

பல்லவி.

யென்னபிசகுசொன்னேனென்று ரொம்பவடித்துபிடித்து
யென்னையெடுத்துசேழ்க்குரீ ரைய்யா

அனுபல்லவி.

பன்னகசயன ஸ்ரீ மன்னன் திருநாமத்தை
உன்னிஉருதியாகச்சொன்னதல்லால் வேரே யென்ன

சரணம்.

மோசாந்தசாரத்தில் ப்ரவேசித்தால் ஸுகமில்லைகாணும்
தேகமனித்ய மாத்மாநித்யமென் றரியவேணும்
ஸகாரத்மஜைநா தன்மேக வர்ணனை
யேகவஸ்துவென்று தாகிதுரைத்த லல்லால் யென்ன
சின்னமனிதருடைய சேர்த்தியை விட்டிடவேணும்
முன்னேபழவினை முதலரியும் மருந்துகாணும்
உன்னையுமென்னையுமிரண்ய மஹாராஜன்
தன்னையுங்கரையேற பண்ணினதல்லால் வேரே யென்ன
பேராயிரங்கொண்ட நாராயணப் பிரபுதன்னை
பாராயணஞ்செய்யாதோர் தீராநரகடைவார் சொன்னேன்
யேரார்கோலம்படைத்த சாரங்க தாரியை
பாராதவர்விழிகோர நரகக்குழி யென்ன

விருத்தம்.

ஸுந்தரலீலாவதியாலே ஸுதனுக்கு நீராட்டஞ்செய்து
கெந்தபுஷ்பாபரண வஸ்திரத்தாலலங்கரித்து

அந்தமாம் அமுதமூட்டி அஸுரகுருவுடனனுப்ப
இந்திரன் போலிருக்கும் பிரபுவைகண்டிட்டார் அவரடிவணங்கி நின்
றிட்டாரே

## பத்யம்.

சிக்ஷிஞ்சிதிமன்ய மூல சப்தக்ஷம்புலுவிடிசிந்தி பாரகுடய்யென்
ரக்ஷாவம்சாதிக்வராவீக்ஷிம்பு மூர்குமாரு வித்யாபலமுன்

---

## வசனம்.

அவிபலிகினசக்ரகுமாரகு வசன புலாகர்ணிஞ்சி
தானவேந்த்ருடுதனகு தண்டப்ராணமம்பு
ஜேலிவிலுசன்னகொடு குசனுவன்சி பாஹுதண்ட
ம்புலுஸாசிநிச்சன் னடங்சுராந்தி கிசிபெத்ததடவு
காடாலிச்சனம்புஜேலி தனதொடலபீதனிடுசோனி
சுஞ்சுதவ்விசுபுமபுபுணிகி செக்லிமுத்துசோனி
கிரப்புமூர்ச்கொனி ப்ரேமாதிரேகஸஞ்சலித
பாஷப்பிந்துலங்சோஹம்புல னதனி வத்ராவிந்த
ம்புதடபுசுமந்தமதரு லாபம்புலனியே

---

## விருத்தம்.

வந்துபணிந்த ஸுதனை வாழ்த்தி மடிதனில்வைத்து
சிந்தையில்மகிழ்ந்து மாரோடணைத்து மிருதுவசனம் சொல்லுவானே

இம்-அஸாவேரி ஆதிதாளம்,

### பல்லவி,

அப்பனே ஒப்பில்லா வடிவுள்ள பிரக்லாதா நீ
இப்போபடித்ததில் ஸாராம்சம்செப்பொன்று நன்றாய்

### அநுபல்லவி,

அப்பனே அரும்பொருளே கர்ப்பகமே கண்மணியே
உப்பாதமாகி விளங்கும்ஸுப்ர தீபனே-யென் அப்பு

### சரணம்,

அம்புஜதளநயனாகிய சாரங்கதாரி
எம்பதேபொய் நீகேளென் சொல்லே
கெம்பீரமாயரசுசெய்யும் யென்னைத் தவிர
சேழ்விமுரை உலகத்திலொருவரும் யில்லே-யென் அப்ப

### பத்யம்.

சஞ்சாக்ஷனகுகாவி காயம்புகாயமே
பவனகும்பித சர்மமபஸ்திரிகாக
வைகுண்டுபொகடனி வக்த்ரம்பு வக்த்ரமே
டமடமத்வவி தோடிக்ககாக
ஹரிபூஜனமுலேவி ஹஸ்தம்புஹஸ்தமே
தருசாகனிர்ம்மித தர்விகாக
கமலேக்ஷ ஜூடவிகன்னுலு கன்னுலே
தனுகுட்யஜால ரந்த்ரமுலுகாக

---

### திருபதம்.

சக்ரிசிந்தலேனி புஜன்மம் புஜன்மமே
தரளஸலிலபுத் புதம்புகாக
விஷ்ணுபக்தியிலே விவிபுதுண்டு விபுதுண்டே
பரதயுகளுதோடி பசுவுகாக

---

### கண்ணிகள்.

இம்-கரகரப்பிரியை ஆதிதாளம்.

### பிரக்லாதர்சொல்வது.

ஆராவமுதாகிய நாரணனைத்தவிர
வேரேதெய்வங்களுண்டோ விளம்புமென் பிதாவே

### இரண்யன் சொல்வது.

விளம்புமென்றுசொன்னாயே உளந்துணிவாக யென்முன்
அளந்துபாத்தால்சாணில்லை ஆண்மைபென்ன ஸூதனே

பிர

ஆண்மையென்ன யென்றீரேதேன் துளப மார்பனே
காண்கின்றபேருக்கு மனங்கலங்குமோ பிதாவே

ஹிர

கலங்குமேயென்ருயே கலமில்லாத மீனாகி
ஜலந்தனிலலேந்ததை அரியாயோ ஸூதனே

பிர

அறிவேன்காண் அவருட் அபாரமான மகிமை
தெரியாமலே நீருந்திகைக்குறீர் பிதாவே

பாசும்

நீணாசஞ்சுற்றிநெடுவரை நாட்டாழ்கடலைப்
பேணான்கடைந்த முதங்கொண்டு கந்தபெருமானைப்
பூணாரமார்பனைப்புள்ளூரும் பொன்மலையை
காணாதார்கண்ணென்றுங் கண்ணல்லகண்டாமே ௱௬௨

ஹிர

திகைக்வில்லை கூர்மமாய்மலையை முதுகில்தாங்கி
நகைக்கும்படி உருவம்யெடுத்தவன் ஸுதனே

பிர

யெடுத்தாலென்ன அமரர்க்கிடைசெய்யும் ஸுரருயிர்
குடிக்கப்பிரபுவாகிய நாரணன் பிதாவே

ஹிர

நாரணனாலல் வெள்ளைப்பன்னியாய் தம்பியைக் கொன்று
நீரார்கடலிலேபோய் ஒளிப்பானே ஸுதனே

பிர

ஒளிக்கவில்லை உங்கள் வாழ்நால்முடிந்தபின் வர
சளிப்பாய் சயனித்திருக்கிறார் மருணாநிதி பிதாவே

ஹிர

கருணாநிதியென்றாயே தூர்நடத்தை யுள்ளோனே
ஸர்வஜெகத்தென்னுயிர்ப்பால் ரெக்ஷித்தேனே ஸுதனே

பிர

ரெக்ஷிக்கநீர்சர்த்தாவோ குக்ஷியிலண்டங்களை
லெக்ஷிமிபதிசாரங்கர் வைத்துரெக்ஷித்தார் பிதாவே

பாசுரம்.

நீள்வான் குறளுருவாய் நின்றிரந்து மாவலிமண்
டாளாலள விட்டதக்கனைக்கு மிக்கானைத்
தோளாதமாமணியைத் தொண்டர்க் கினியானைக்
கேளாச்செவிகள் செவியல்ல கேட்டாமே
அவன் பெருமைபேசாதார் பேச்சென்றும்
பேச்சல்லகேட்டாமே யென்கிறபடியே
யார்வந்தால் பாடாதார் பாட்டென்றும்
பாட்டல்ல காட்டாமே
சங்கேந்தும் கையானைக் கை
தொழாக்கைகல்ல கண்டாமே

கினையாதார் நெஞ்சென்று நெஞ்சல்ல கண்டாமே
அறிபடர்தாரென்றுமறியாதார் கண்டாமே (௱௩௩)

---

## ஸ்லோகம்.

ச்ரவணம் கீர்த்தனம் விஷ்ணோ ஸ்மரணம் பாதஸேவநம்
அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம்ஸக்யம் ஆத்மநிவேதநம்
இய்பும்ஸார் பிதாவிஷ்ணௌ பக்திச்சேன்னவலக்ஷணா
க்ரியாதே பகவத்யத்தா தன்மந்யே நீதமுத்தமம் (௱௩௪)

## விருத்தம்.

எந்தன்பிதாவே ஹரிநாமச்ரவணம்
கீர்த்தனம் ஸ்ரமணம் அர்ச்சனம்
வந்தனம் கைங்கரியம் செயதகர்மத்துக்கு
பகவதர்ப்பணம் ஆத்மஸமர்ப்பணம்
சிந்தையிருகி அவரிடத்தில் விச்வாஸம் தாஸ்யம் நவபக்தி
செய்கிட்ட புருஷன்
சந்தேகமில்லாமல் உய்வனென்றுரைத்த பிரக்லாதனை
சீறுவான் குருபுத்ரரைப்பார்த்து கூறுவானே (௱௩௫)

---

இம்-பியாக்கடை சாபுதாளம்.

## பல்லவி.

என்ன துர்போதனை செய்தாய் குருவே என்ஸுதன்க்கு நீ
என்ன துர்போதனை செய்தாய் குருவே

## அநுபல்லவி.

என்னெயனுதரவு பண்ணவோ நீ யடுத்தாய்
சின்னபாலனுடைய புத்திதன்னை கெடுத்தாய் என்

## ஸ்லோகம்.

ப்ரம்மபேந்தோஹிமேதத்தே விபக்ஷம்ச்ரேயதாஸதா
அஸாரம்க்ராஹிதோபாலோமாம்நாதிர்த்ய துர்மதே

## சரணம்.

கேசவரான சாரங்கேசருடைய மஹிமை
லேசம்பயமத்துபதேசஞ் செய்து வைத்தாயே
நேசமுள்ளவரைப்போலே வேஷமராடிக்கொண்டு
தோஷதுர்க்குணத்துடன் மோசஞ்செய்ய வந்தீர்கள் என்ன

விருத்தம்.

இந்திரசத்ருவேகாங்கள் சொன்னதைச் சொல்லவில்லை உன்
மைந்தன்பிரக்லகதன் தானேஸ்வபாவமாய்ச் சொல்லுகின்றான்
வந்தகோபத்தைடக்கி மன்னித்துக் காருமென்ன
மந்திரவான் கையிலேந்திக்கொண்டு பாஷிப்பான் புத்திரனைப்பார்த்து
துவேஷிப்பானே (ராசகு)

---

இம் அடாணு-சாபுதாளம்.

பல்லவி.

டாபியே குலத்தைகெடுத்தாய் பாபியே

அனுபல்லவி.

எனக்குலத்தைகெடுப்பாயென் றெண்ணாமல் போனேனே பாபி

சரணம்.

சோபிதமாய் வளருகிறாய் வெகு
லாபக்கிடைக்குமென்றெண்ணி யிருந்தேனே பா

ஸ்லோகம்.

இதஎகஸவேதவரார்க ருபேண ஹந்துமர்ஹஸிமமாஜு ஜம்

சரணம்.

வம்புசெய்து வெள்ளைப்பன்னி யுருவாக வென்
தம்பியைக்கொன்றோனே கொண்டாடி னின்றாயே பா

பத்யம்.

குரோடம்பை பினதண்டரிஜம்பென னிதர
க்ரோதிஞ்சி சித்தம்புலோ வீடஞ்சேயடு
பண்டுபங்கிஹரிகின் வித்வேஷிகின்பக் தனை
யோடம்டெக்கடப்ராண வாயுவிது வீடொ
ப்பிஞ்சுன்னுடு காதோடன் வைரமுபட்டெ
கிட்டிஜெனகத்ரோஹின் கனுங்கொண்டிரே

சரணம்.

நேசமாய் யென்பேர்சொல்லடா வென்றால் சாரங்
கேசனொருவருக்கிரு னென்றாயே பாபி (ராசன)

---

## விருத்தம்.

புத்ரவாத்ஸல்லியத்தை மறந்திரண்யனுரைக்கும்போது
ஸத்கூடத்தையுடைய பிரஃலாதரெதிர்சொல்லுவாரே

---

## பாசுரம்.

ஓஓ உலசனதியல்பேயீன்றோளிருக்க மண்ணீராடிப்படைத்திடந்
துண்டுமிழ்ந்தளந்துதோரந்துலகளிக்கும்முதற்பெரும்கடவுணிற்பப்
புடைப்பாலத்தானறி தெய்வம்பேணுதல்தனாது புல்லறிவாண்மை
பொருந்தக்காட்டிக் கொல்வனமுதலா வல்லனமுயலு மினைய
செய்கையின்பதுண்டளித் தொன்மாமாயப் பிறவியுணிக்காப்பன்
மாமாயத்தழுந்து மானளிரங்தே (௩௪௧)

---

## விருத்தம்.

பக்தியால்தேகம் பரவசமாய்நின்ற ஸுதனைப்பார்த்து
குத்திவதைத்திடுவேனென்று கோபித்து ஹிரண்யன்கூற
ஸத்துவருணமில்லாமையால் ராஜாவே உன்மனதே
சத்துருவல்லால் வேரேசத்துருவில்லையென்றுரைசெய்வாரே (௩௫)

## கண்ணிகள்.

இம் சரசரப்பிரியை-ஆதிதாளம்

### பிரஃலாதர் சொல்வது

அழியாமலிருக்கும் அஷ்டாக்ஷரத்தைவிட வேருண்டோ
யிழிவாகும் உம்முடபேருரைப்பதினுலென்ன பலனுண்டோ

### ஹிரண்யன் சொல்வது.

எண்டோவென்றுநீதிண்டுமுண்டுரைக்கிறுய் நின்று பயமில்லாமல்
யின்று உன்னுயிரை உண்டிடுவேனடா சண்டுகொள் தடையில்லமல்

### பிர

தடையில்லையென்றீர் கேடுவருமுன் மதிகெடுமென்பது போலே
உடையவன்பேரை நானுரைத்தாலுமக்கேனிந்த கோபமென் மேலே

### ஹிர

கோபமென்னவென்றுயேதம்பியைக்கொன்றவனைசொல்லவேண்டா மோ
பாபிஹரிஹரி யென்றுஸ்துதிக்கிறுயே யிந்த துடுக்காமோ

---

## பத்யம்.

ஸாரலங்தோவுடையோ ஸாருதிபதுலன் ஸ்ரொக்கிஞ்சுடோவிந்துலன்
பரிவே திஞ்சுடயோமுனிப்ர வருலன்பா திஞ்சுடேயக்ஷகின்னரகந்தர்வ
விஹங்கநாகவதுலன்ஞசப்புநோந்திஞ்சிடோ ஹரியஞ்சன்
கிரியஞ்சுநேலசேடமோ ஹாந்துடவைபுத்ரசா.

பிர

ஆமோவென்றீர் அணுரேணுபரிபூரணன் சந்தேக மில்லே
நாமிரண்டுபேரும் பஜிப்பபோமிதைவிட ஸுகம் வேரில்லே

ஹிர

இல்லேயென்ருய் யெல்லா உலகங்களுக்குமதிபதி ஞனே
எல்லாதேவர்களும் பயந்துயெனக்குயேவல் செய்கிருர் ஸாதனே

பிர

ஸாதனென்றிருக்கிரே வொழிய இதின் ஸூக்ஷ்மமரிய வில்லே
மதிமோசம்போய் மரைந்திடாதீர் திருயந்திரமென்னுஞ் சொல்லே

ஹிர

மறப்பேனு நான்அவனேயும் உன்னேயும் மாரைப்பிளந் திடாமல்
இறப்பே உன்தலேயிலெழுதியிருக்க கேழ்ப்பாயோயென்சொல் தடையில் லாமல்

பிர

தடையில்லாமல்கேழ்ப்பேனேயா நீரும் ஸ்வாமி சாரங்கேசன் பாதத்தை
இடைவிடாமலிருவரும்பஜித்தால்யெய்தலாம்வைகுண்டபதத்தை (ராகை)

---

இ-ம் தன்யாசி-ஆதிதாளம்.

பல்லவி.

ஸம்ஸாரஸாகரத்தில் முழுகினேர்
ஹரிசரணஸேவை கண்டரியார்

அனுபல்லவி.

ஹிம்ஸைக்கிடயான பத்னிபுத்ர ரெமன்சாணும்
ஹம்ஸரூபிமலர் திருவடிக்காள்பட வேணும் ஸம்

### சரணங்கள்.

ஸாதுக்கள்பாததூளியை சிரஸில் தரித்தால் ஜனனமரணரோகம்தீரும்
பூதசயவுடனே யெப்போதுமிருந்தால் ஒருவருய்சத்ருவில்லையாரும்
எதுந்தெரியாய்புறவிஅர்தசன்வேரந்தகனுக்கு வழிகாட்டுவானே போரும்
மாதவரான சாரங்கேசரொருவரிச்கிரு றென்றெண்ணினலதிஸாகபீரும்

---

### வீருத்தம்.

இந்தவிதமுறைத்து மௌனமாகவே யிருக்குகின்ற
மைந்தனை மடியில்னின்றுக் பூமியில்தள்ளிவிட்டு
எந்தனுடைய ஆச்ஞையைதப்பாமலஸுரர்களே யிவனைநீங்கள்
எந்தவிதத்தாலுங்கொன்று போடுங்களென்று இறைந்திட்டான் பூமியில்
கையை அறைந்திட்டானே (௫௩)

---

### ஸ்லோகம்.

ரெணசேஷம் அச்னிசேஷம் சத்ருசேஷம் ததைவசா
புனப்புனரா வர்த்தந்தே தஸ்மாத்சேஷான்ன காரயேத் (௫௪)

---

இ-ம் கேதாரிகௌளை ஆதிதாளம்.

### பல்லவி.

தானவேந்த்ரன் ஏவலால் யீனபுத்தியுள்ள ஸுரராள்
பிரக்லாதரை ஹிம்ஸை செய்தார்

### அனுபல்லவி.

தீனசரண்யனுடைய திருவடியை தியானித்து
பானுஉதித்ததுபோலிருந்தாம் மனம்பூரித்து தான

### சரணங்கள்.

பேய்முகமானஸுரராள் ஆயிர மாயிரம்பேர்
ஆயுதத்தாக்குத்தி தியபாசத்தால் கட்ட
ஓய்வில்லாமல் மாரிவருஷிக்க விர்க்கும் மலைபோல்
மாயனை யினைத்து பிரக்லாதர் கலங்காமல் நின்றார் தான

இந்தவிதமுபத்ரவங்கள் செய்தும் அதிக
ஸுந்தரவடிவோடிருந்த ஸுதனைச்கண்டு
முகுந்தனுன சாரங்கன் வந்துகார்ப்பதை பார்ப்போம்
மைந்தனைந்து வயதுள்ளோன் ஆண்மைதன்னை தீர்ப்போம் தான

## ஸ்லோகம்.

பரோப்யபத்யம் ஹிதக்ருத்யதௌஷதம்
ஸ்வதேஹஜோப்யா மயவத்ஸுதோஹித:
சிந்தையாத்ஸ்வ மங்கம்ஹியதாத்ம ஞேகிதம்
சேஷம்ஸுகம் ஜீவதியத்வி ஸர்ஜநாத் (௱௫௬)

---

## இ-ம் முகாரி-ஆதிதாளம்.

## படாள் சோல்வது.

மலையின்மேலேத்தி உருட்ட
உலையாமல் மன மகிழ்ந்து
நிலையாநின்றதுரையாய் மதி
குலையா மைந்தனே

## பிரக்லாதன் பகவானை தியானிப்பது.

## விருத்தம்.

தலையினில் கெங்கைவைத்தோன் தனைப்பெத்தோன் தாதைநீயே
நிலமகள் துயரந்தீர்த்து நின்றகார்வண்ணன் நீயே
அலைகடலிலனந்தன்மீதில் படுத்துகந்த ஆதி நீயே
மலையின்மேலிருந்துருட்டும் வஞ்சனை அறிகுவாயே

---

## பாசுரம்.

பூதமைந்தோடுவேள்வி பைந்துபுலன்களைந்து பொறிகளால்
ஏதமொன்றுமிலாதவண்கையினர்கள் வாழ்ந்திக்கோட்டியூர்
நாதனை நரசிங்கனை நவின்றேத்துவார்களுழக்கிய
பாததூளிபடுதலாலிவ்வுலகம் பாக்கியஞ்செய்ததே

## படாளுக்குப்ரதி சோல்வது.

இலைமீதினில் படுத்த நீலவண்ணன்
நிலையாய் யென்னுள் வஙிக்க
மலையின்மேலேற்றி தள்ளினுலென்னை யென்செய்யும்
புலையராகிய யல்லரே

---

### படாள் சொல்வது.

அஷ்திக்கெஜங்க ளுன்னை
முட்டிமிதித்து கொல்லும் போது
கஷ்டமில்லாதிருந்த விதஞ்சொல் ஸந்
துஷ்டமைந்த னே

### பகவானை தியானிப்பது.

### விருத்தம்.

வானவர்க்கமுதளித்த வாஸுதேவா புருஷஸிம்மமே
தீனசரண்யனே செந்திருமகிழ்தனையும் மார்பா
தானவ ராஜன்யேவலால் தாஷ்டீகத்துடன் நடந்து
ஆனை தான் வருவதனை அரிவையோர் அறிந் திடாயே

### பாசுரம்.

புகழுநல்லொருவனென்கோ பொவில்சீர் பூமியென்கோ
திகழுர் தண்பரவையென்கோ தீயென்கோவாயுவென்கோ
நிகழுமாகாசமென்கோ நீள்சுடரிரண்டு மென்கோ
இகழ்விலிவ்வனைத்து மென்கோ கண்ணனைக் கூவுமாறே (௱௫௯)

### படாளுக்கு சொல்வது.

அடாக்ஷரபொருளாமப்ரபு யெந்தன்
கிட்டயிருந்து ரெக்ஷிக்க
துஷ்டயானையினாலே யெப்படி பயமுண்டாம்
ப்ரஷ்டனாகிய மல்லரே (௱௬௰)

### படாள் சொல்வது.

முப்புறமெரித்தோன் போல் சீறி
இப்புவியதிரக் கடித்த
ஸர்ப்பத்தால் சாகாதவிதஞ் சொல்
இப்போ மைந்தனே

### பகவானை தியானிப்பது.

பரவுமெஞ்ஞானச் சுடரே பரம்பொருளே உன்னைநானும்
இரவுபகல் இடைவிடாமல் யெண்ணியிருப்பது மெய்யானால்
மரலிபோல் வஞ்சனைசெய்கின்ற இவாளேவுகின்ற
அரவினாலென்னபயம் அய்யனே கெருடத்வஜனே (௱௬௧

## பாசுரம்.

கூவுமாறறியமாட்டேன் குன்றங்களனைத்து மென்கோ
மேவுசீர்மாரியென்கோ விளங்குதாரகைகளென்கோ
நாவியர்க்கலைகளென்கோ ஞானநல்லாவியென்கோ
பாவுசீர்க்கண்ணனெம்மான் பங்கயக்கண்ணனையே (௬௨)

## படாளுக்கு சொல்வது.

முப்புறமெரித்தோன் பிதாவைப்பெற்றயென்
அப்பனென்னுள் வசிக்க
அல்ப பல்மூள்ள ஸர்பத்தனு லெனக்
கெப்படிபயமுண்டா கும்

## படாள் சொல்வது

வாயுலர்ந்து நெஞ்சம் பதற
தீயினில் தள்ளிசொல்லும் போது
மாயாமலிருந்த விதஞ் சொல்
வாய்ராஜ மைந்தா

---

## பகவானை தியானிப்பது.

### விருத்தம்.

ஜமக்கடலுருவாய்நின்ற மழைமுகிலே
சக்ரஹஸ்தனே அனேகசரு சரம்படைத்த மாலே
திக்குவேறில்லை உந்தன் சரணமேகதியென் றுரை
அக்கினியென்னசெய்யும் ஹராமுரஹரி ஸ்ரீ ஹரி (௬௩)

---

## பாசுரம்.

பங்கயக்கண்ணனென் கோபவளச் செல்வாயனென்கோ
அங்கதிரடியனென்கோ வஞ்சன வண்ணனென்கோ
செங்கதிர்முடியனென்கோ திருமருமார்பனென்கோ
சங்குசக்கரத்தனென்கோ ஜாதிமாணிக்கத்தை யே (௬௪)

---

## படாளுக்கு சொல்வது.

தாயாய் ஜெகத்தைக்கார்க்கும் லக்ஷிமிபதி
நேயமாய் யென்னுள் வஸிக்க

தீயினாலெப்படி நான்மரணமடை வேன்
பேயுருவாம் மல்லரே

## படாள் சோல்வது.

சதிசெய்யவென்று விடுத்த
க்ருதியினால் சாகாமல் பிழைத்த
தெதனாலுரைப்பாய் யெங்களுக்கு
மதிமுக மைந்தா

---

## பகவானை தியானிப்பது.

பிருதிவீ அப்புதேஜோ வாய்வு ஆகாயத்தால்செய்த சரீரம்
மிருதியடைந்திடுமெல்லாமல் ஆத்மாவுக்கழிவு மில்லை
சுருதிஸ்மிருதிக்கப்படாத தோன்னலே நீயிருக்க
கிருதியென்ன செய்யுமைய்யாகேசவாசரணம் ஸ்வாமி (ராசுரு)

## பாசுரம்.

சாதிமாணிக்கமென்கோ சவிகொள்பொன் முத்தமென்கோ
சாதிநல்வயிரமென்கோ தவிவில்சீர் விளக்கமென் கோ
ஆதியஞ்சோதியென்கோ வாதியம்புருடனென் கோ
ஆதுமில்காலத்தெந்தை யச்சுதனமல னையே (ராசுசு)

## படாளுக்கு சோல்வது.

சுருதிஸ்மிருதி வேதங்களால் கண்டறியாத
நீதியெனக்குள் வலிக்க
கொதிகொள்ள உலகங்களதிக வேகமாய்வரும்
கிருதியென்னசெய்யும் மல்லரே

---

## படாள் சோல்வது.

கரும்பாலையில் யிடுவது போல
இரும்புமுறியசெக்கில்வைத்தரைக்க
ஊறம்போகாமலிருந்த விதஞ்சொல்
அரும்புள்ள மைந்தா

---

## பகவானை தியானிப்பது.

### விருத்தம்.

இக்குவலயத்தை உண்டுமிழ்ந்திட்ட மன்னனென்னை
கைக்கொண்டிருக்கும்போது சுத்திக்கொண்டோடிவந்து
செக்கினில்வைத்தரைத்தாலென்சீவனுக்குண்டோதுன்பம்
மிக்கவுங்கடின சித்தமல்லரே அப்புறம்போவீர் (௱௬௭)

### பாசுரம்.

அச்சுதனமலனென்கோ வடியவர்வினைகொடுக்கும்
நச்சுமாமருதமென்கோ நலங்கடலமுதமென்கோ
அச்சுவைக்கட்டியென்கோ வறுசுவையடிசிலென்கோ
நெச்சுவைத்தேறலென்கோ சனியன்கோ பாலென்கோனே (௱௬௮)

---

## படாளுக்கு சொல்வது.

வறம்புல்லாதவேலை ஸத்தியமென்னும்
வற்ம்புக்குள்ளிருக்கச் செய்த
அரும்பொருளான அனாதியானகண்ணன்
உறமிதையா யெனக்கு

## படாள் சொல்வது.

கத்திகேடயம் சூலத்தால்
குத்தியும் வெட்டி யிம்சிக்க
சித்தங்கலங்காத விதஞ்சொல்
ஸத்திய மைந்தனே

---

## பகவானை தியானிப்பது.

### விருத்தம்.

ஸத்தியஸ்வரூபனே ஸகலஜெகத்காரணனே
வித்தியாகந்தனே நீலமேகச்யாம வண்ணா
முத்தியளிக்குந்துரையே நீயென்னைகார்க்கும்போது
கத்திகேடயங்களான ஆயுதமென்னசெய்யும் (௱௬௯)

### பாசுரம்.

பாலென்கோநான்குவேதம் பயனென்கோ சமயநீதி
னூலென்கோனுடங்கு கேள்வியிசையென்கோ இவற்றுணல்ல

மேலென்கோ வினையின்மிக்கபயனென்கோ கண்ணனென்கோ
மாலென்கோ மாயனென்கோ வானவராதியையே (௱எ௰)

---

## படாளுக்கு சொல்வது.

மெத்ததபாபரனும் பரிசுத்த
நித்தியரென்னுள் வஸிக்க
கத்திகேடயதி ஆயுதங்களாலென்
சித்தமெப்படி கலங்கும்

## படாள் சொல்வது.

திடமுள்ளமலேயைக் கட்டி
கடலிலழுத்தும் போது-உன்
உடலம்பதருவிதஞ் சொல்
அடமுள்ள மைந்தா

## பகவானை தியானிப்பது.

## விருத்தம்.

சடமென்னும் அக்கியானத்தை சத்பக்தாளுக்கு
திடமுடன்மோக்ஷவீடு அளித்திடசித்தமா யிருக்க
வடபத்ரசாயியென்னையிந்தவஞ்சனைநெஞ்சர்தள்ளின
கடலிதுவென்னசெய்யும் கார்வண்ணா கருணைக்கடலே (௱எக)

## பாசுரம்.

வானவராதியென்கோ வானவர்தெய்வமென்கோ
வானவர்போகமென்கோ வானவர்முற்றுமென்கோ
ஊனமில்செல்வமென்கோ ஊனமில்சுவர்க்கமென்கோ
ஊனமின்மோக்ஷமென்கோ வொளிமணிவண்ணனையே (௱எஉ)

ரிபுஜெனப்பிராணஹாரி
திவ்யசா ரங்கதாரி-ப்ரபோ
பக்த மனப ஹாரி
பாஹிமாம் பாலய ஸ்ரீஹரி

---

## பாசுரம்.

வீற்றுருந்தேழுலகுதனிக் கோல்செல்ல வீவில்சீர்
ஆற்றமிக்காளுமம்மானை வெம்மாபிளந்தான்றன்னை
போற்றியேன்றேகைகளாற்றொழுதுசொன்மாலைகள்
ஏற்றனேத்தோக்கினியென்ன குறையெழுமையுமே. (௱எ௩)

இ ம் கல்யாணி ஆதிதாளம்.

பல்லவி.

நாராயணுயென் முன்வாரும்—ஸ்ரீமன்
நாராயணுயென்முன் வாரும் நாராயணு

அனுபல்லவி.

நாராயணுவேத பாராயணு-திவ்ய
வாரிஜதளநயணு வாரும்-திவ்ய
வாரிஜதளநயணு வாரும் நாராயணு

சரணம்.

அலைகடலில் தள்ளி
மலையைவைத் தமுற்றுரார்
லீலமகள்நாதா யென்முன் வாரும் ஸ்வாமி
லீலமகள்நாதாயென்முன் வாரும் (நா)

பாலாலரவில் துயில்
மூலாகனக ம:ப
சேலாயெந்தனருகில் வாரும் ஸ்வாமி
சேலாயெந்தனருகில் வாரும் (நா)

மங்கள லங்காரா
சங்க சக்ரதரா
எங்கோனே யென்னருகில் வாரும் ஸ்வாமி
எங்கோனே யென்னருகில்வாரும் (நா)

ஆசாபாசங்கள் தீர்க்கும்
வாஸுதேவ சாரங்
கேசனேயென்னருகில் வாரும் சாரங்
கேசனேயென்னருகில் வாரும் (நா)

தேவாரம்.

இ-ம் சங்கராபரணம்.

ஸாகரத்தில் படுத்தவனை அநேகமாய்த் துதித்து
மோகமதமற்றவராய் தேகம்மரந்திருக்கும்போது
பாகவதாள் துயரமதை வேகமாய் வந்துதுடைக்கும்
மேகவண்ணனேடிவந்து ஆகாகாவென்றெணெடுத்தத்தார். (௱௭௬)

இ-ம் பியாகு ஏகதாளம்;

ஆர்யா

கண்ணையவர் திறந்துபார்த்து
கருணாநிதிவரேயென்று மனதில்நினைந்து
அன்னைதந்தை பெந்துவைவெறுத்து
உன்னைநினைத்ததுபலித்ததென்றுபூரித்து (ாளஎ)

---

இ-ம் உஸானி ஆதிதாளம்.

பல்லவி.

கொண்டார்பிரக்லாதபிரபு பாதஞ்சிரசில்
கண்டார் பிரக்லாதபிரபு

சரணம்.

தொண்டர்கள்மனதில் வைக்கின்ற அழகுடைய
தண்டைசிலம்பணிந்த புண்டரீகபாதத்தை கண்டார்

பாசுரம்

கடன்ஞாலஞ்செய்தேனும் யானேயென்னும்
கடன்ஞாலமாவேனும் யானேயென்னும்
கடன்ஞாலங்கொண்டேனும் யானேயென்னும்
கடன்ஞாலங்கீண்டேனும் யானேயென்னும்
கடன்ஞாலமுண்டேனும் யானேயென்னும்
கடன்ஞாலத்தீசன் வந்தரேக்கோலோ
கடன்ஞாலத்தீர்க்கிவை யென்சொல்லுகேன்
கடன்ஞாலத்தென்மகன் சற்கின்றவே

---

உத்தமகெருடன் புஜத்தின்மேல்விளங்கின்ற
மெத்தமிருதுவாகிய நித்யானந்தர் துடையை கண்டார்

வேதங்கள்பிரமிக்கும் ஸ்ரீநாதனிடையயில்திவ்ய
நூதனமாய் விளங்கும் பீதாம்பரத்தைக்கண்ணுல் கண்டார்

அறநூல்மாலைகிங்கிணி திருவரையில்துலங்க
கருணவாரிதியான பரமபுருஷனை. கண்டார்

சதுர்முகனைப்படைத்த புதுமலருந்தியுடன்
அதிஸுகமாய் விளங்கும் உதரசேவையைக்கண்ணுல் கண்டார்

அக்ஷயஸம்பத்தளிச்கும் ஸ்ரீலெக்ஷ்மியை
பக்ஷித்துடனேவைத்த வக்ஷஸ்லத்தைநேரே கண்டார்

அங்கதம்தோள்வளையோடு சங்கஞ்சக்கரங்கெதை
ஸ்ரீங்காரமாய்த்தரித்த செங்கரத்தைநேரே கண்டார்

கம்புகண்டத்தில் கௌஸ்துபம்ரொம்ப சோபிக்கதிவ்ய
கெம்பீரமாய்விளங்கும் அம்புஜநயனரை கண்டார்

கெதியென்றடைந்தோருடன் மதுரமாய்வசனிக்கும்
புதியசெம்பவளம்போ லதரகாந்தியுள்ளோரை கண்டார்

குந்தபுஷ்பம்போலொத்த தந்தபந்தியுடனே
ஸுந்தரஸுகுமார மந்தஹாஸமுகத்தை கண்டார்

நன்னுபலர்மகள்பார்க்கும் கண்ணாடியைப்போலொத்த
உன்னிதகபோலமுள்ள பன்னகசயனரை கண்டார்

அர்த்தசந்திரனைப்போலொத்துவிஸ்தாரமாய்விளங்கும்
நெற்றியில்கஸ்தூரி திலகத்தின்ப்ரகாசத்தை கண்டார்

கோடிசூரியன்போல் திவ்வியசிரேஷ்டமாகிய ரெத்ன
கிரீடகுண்டலந்தரித்த தாஷ்டீகபுருஷனை கண்டார்

ஆசாபாசங்களத்த தாஸஜெனர்கள் மனக்
லேசத்தைதீர்க்குப்ஸர்வேச சாரங்கதுரை கண்டார்

---

விருத்தம்.

பரமதயாவிந்து தன்னைப்பணிந்து அவர்பாதபத்மத்தை
சிரமதிலணிந்து சிந்தையுருகி கண்ணீ ருகுத்து
தரமோயென்றல் துதிக்கதத்துவப்பொருளே யிப்போ
துருமதிஇரண்யன்செய்வதுதுரையேநீஅறிதியென்றார் (௱எகூ)

இ-ம் பியாகு - ஆதிதாளம்.

பல்லவி.

கண்டுகொண்டே னுந்தனை
சாருமீ ரெந்தனை
கண்டுகொண்டே னுந்தனை

---

### பாசுரம்.

பாயருமூவுலகும்படைத்த பத்பநாபாவோ
பாமருமூவுலகுமளந்த பற்பபாதாவோ
தாமரைக்கண்ணாவோ தனியேன்றனியாளாவோ
தாமரைக்கண்ணாவோவுன்னை யென்றுகொல்சேர்வதுவே

### அநுபல்லவி.

அண்டயளாவிய ஆனந்தரூபா
அடியார் படுந்துயர் தீர்க்கும் ப்ரதாபா கண்டு

### சரணம்.

தீனையென்னைக் காவா
தேவாதி தேவா
ஆனைவினையைதீர்த்த ஆதிமுதல்வா
அரவிந்தபாவை யாகிய திருவலவா கண்டு

நின்னருள் பிரபஞ்சம்
அன்றியில்லாது கொஞ்சம்
உன்னிவுந்தனை உணர்ந்துகொள்வதென் நெஞ்சம்
உள்ளத்தில் வைத்திடு வாய்பதகஞ்சம் கண்டு

அப்பனே யென்னையா
ஆழிசங்கக் கையா
ஒப்பில்லாமல் விளங்குந் திருமெய்யா
உன்னையடைந்தால்புதாள் சிந்தனைசெய்யா கண்டு

பக்தர்க் கதிசொந்தா
பரமவை குந்தா
அத்தனே ஆதி மூர்த்தியே அனந்தா
அகப்பட்டாய் விடேன்சாரங் கேசமுகுந்தா கண்டு

---

### பாசுரம்.

வாராயருவாய்வருமென்மாயா மாயாமூர்த்தியாய்
ஆராவமுதா யடியேனுவி யகமோதித்திப்பாய்
தீராவினைகடீரவென்னை யாண்டாய்திருக்குடந்தை
ஊராயுனக்காட்பட்டு மடியேனின்னமுழல்வேனோ. (ராஅக)

## விருத்தம்.

இந்தவிதம் ஸ்துதித்துநின்ற பிரக்லாதன்றன்னை
ஹரி அன்புடனேடுத்தணைத்து உச்சிமோர்ந்து
எந்தன்கண்ணே இனிமேலந்த இரண்ணியன்வருத்த
சிந்தைபொருத்திருக்கமாட்டேன்—அவன்
எந்தவிடத்தில் கேட்டாலும் வந்துதயமாவேன்
நீஸந்தோஷமாய் நடவென்ன
மந்தஹாஸத்துடனே அந்தஸபைதன்னிலிவர்
தந்தையெதிர் வந்துநின்றார். (௬௮௨)

## படாளுக்கு சொல்லுவது.

படமுடைய அரவில் படுத்தவர் யென்
னிடமதாயிருக்கும் போது
மடையர்களான மல்லர்களே நீங்கள்தள்ளின
கடலிதுவென்ன செய்யும்

## படாள் சொல்லுவது

பெத்தபிதா உரைத்ததே—நீயே
டுத்தெரிந்தாயானு லுன்னை
எத்தனையோ ஹிம்ஸைசெய்வோம்
பித்தாம் மைந்தனே

## பகவானைத் தியானிப்பது.

## விருத்தம்.

பெத்ததாய்தந்தை ப்ராதாகுருதெய்வம் ஸகலடந்துவும்
ஸத்தியமாசசாரங்கராஜனேதானெனக்கு
இத்தைநீங்களறியாமல் யேன்யென்னை ஹிம்ஸிக்கின்றீர்
மத்தராய் மயங்குகின்ற மதிகெட்ட மல்லர்களே. (௬௮௫)

## பாசுரம்.

ஒளிபணிவண்ணனென்சோ வொருவனென்றேத்தநின்ற
நளிர்மதிச் சடையனென்சோ நான்முகக்கடவுளென்சோ
அளிமகிழ்ந்துலகமெல்லாம் படைத்தவை யேத்தநின்ற
களிமலர் துளவனெம்மான் கண்ணனைமாயனையே. (௬௮௬)

## படாள் சொல்லுவது.

பெத்தபிதா சாரங்கேசர்தவிற —வே
ஒருத்தரில்லை அறிவீர்
மித்தையுரைத்தக்கால் மெத்தக்கோபித்துங்களை
சித்திரவதைகள் செய்வார். (௱அரு)

---

## போது விருத்தம்.

அறவினலஸ்தியாலும் அக்னி ஆபிஜாரத்தாலும்
தரமில்லாதுயர்ந்த மலையிலேற்றி தள்ளியும் கடலில்போட்டும்
பறபறப்புடனனேக ஹிம்ஸைகள் செய்துபார்த்தும்
நிரபராதியான ஸுதனைக் கொல்லப் படவில்லை இரண்யனுக்குதுய
[ரஞ்சொல்லி முடியவில்லை

---

## விருத்தம்.

ஆலகாலவிஷத்தை க்கயரதுவின் கையில்கொடுக்க
பாலன்மேல் ப்ரேமையினால் பரிந்துரைசெய்குவாளே. (௱அசு)

## நீலாவதி சொல்லுவது.

கண்ணிகள் இ-ம்நீலாம்புரி ஆதிதாளம்.

ஐயையோயென்ஸுதனே அருமைத்திருமகனே
மெய்பதருதே யென்ன செய்வேன்
வையகத்திலேபெற்ற மைந்தனுக்கு விஷத்தை
மனந்துணிந்திடுவாரோ ஸுதனே

## பிரக்லாதர் சொல்வது.

அருமைத்திருமகனைக் கருணையுடனே காக்க
தரணிநாதனிருக்கா ரம்மா
வருமையடையவேண்டாம் குருதிபோஷிய அஸுரரை
மருமம் பேதிப்பார்ஸ்வாமி அம்மா

## நீலா.

பத்துமாஸம்சுமந்து பெற்றவயிர்பத்தரதே
முத்தேநானென்னசெய்வேன் ஸுதனே
செத்தபிரகுமனம் தத்தளித்தழைத்தால் —யென்
ரெத்தனமே வருகுவாயோ ஸுதனே

பிர

பெத்தமாதா யிந்திரைக் குத்ததமயன்விஷம்
அத்திசெய்யுமோ அது அம்யா
வித்தியானந்த சாரங்கேசர் பொற்றாமரைப்பதத்தை
பத்தினோர்க்குச் சாவுண்டோ அம்மா

---

நீலாவதி சொல்லுவது.

கண்ணிகள்.

இ-ம் கரகரப்பிரியை.

கர்த்தனே பெற்றபுத்ரனுக்கு விஷத்தைக்கொடுப்பேனோ தேவா
பர்த்தாசொல்லைத்தடுத்தபேர் பதிவிரதையாவாரோ தேவ தேவா
மன்னவனென்பேருரையெண்டாலமதியாமல் தள்ளுறான்தேவ தேவா
பன்னகசயனாவென்றெதிர்நின்று பகர்ந்து சொல்லுகிறான் தேவா
இந்தக்கொடுவினையை பார்க்க விதித்தானோ பிர்ம்மதேவ தேவா
மைந்தனென்றெண்ணிப்பாராமல்மகத்தான ஹிம்ஸைசெய்தார்தேவதேவா
கேசவாஜெகதீசாவென்மீதில் கிருபை இல்லையோதேவ தேவா
நேசமாயென் ஸுதனைக்காரும் சாரங்கேசப்ரபோதேவ தேவா

---

நீலாவதி சொல்லுவது.

இ-ம் தன்யாசி ஆதிதாளம்.

பல்லவி.

கண்ணனே யென்னருமை ஸுதா—உந்தன்
அண்ணாசொல்லைக்கேள் பிரக்லாதா

அனுபல்லவி

மன்னன்கோபம் பொல்லாதே —அவர்
சொன்னதற்கு ப்ரதிசொல்லாதே கண்ணனே

பிரக்லாதர் சொல்லுவது.

இ-ம் கமாஸ் ஆதிதாளம்.

பல்லவி.

யெவரெந்தனுடைய பிதா
விவரித்துரைப்பாயென் மாதாயிதை

## அநுபல்லவி.

குவலய வாழ்வெல்லாம் மெய்யோ—வீண்
கவலைப்படுகிராய் ஐயோ (தெய்வ

நீலா

சொல்லவென்றெழில் பெடுத்தார்—என்கையில்
நல்லவிஷத்தைக் கொடுத்தார் (கண்ணனே

பிர

இரண்யன்பேரை உரைப்பேனோ—லோக
சரண்யன்நாமத்தை மறப்பேனோ (தெய்வ

நீலா

பாலாள் சொல்வதைச் சொல்லடா
நீலவண்ணன் நாமத்துள் கொள்ளடா (கண்ணனே

பிர

அஸுரபாவத்தால் வரும் நிந்தை
நிஜமாய்சாரங்கேசன்பென் தந்தை (தெய்வ

## விருத்தம்.

சாஸ்வதவஸ்துவாகி ஸகலகுணசம்பன்னராய்
மாசற்றுவிளங்குகின்ற மகாலக்ஷ்மியுடனேகூடி
சேஷன்மீதில்படுத்த ஸ்ரீ செருடவாசனிருக்கத்
வேஷத்தாலிவர் கொடுத்தவிஷமென்ன செய்யுந்தாயே அதைஎன்கையில்
(நீதருகுவாயே

## ஸ்லோகம்.

ஹரிர்மித்ரம்விஷம்பத்யம் அதர்மோதர்மதாய்வரஜேத்
அனுகூலேஜெகன்னாதே விபரீதேவிபர்யய :

## விருத்தம்.

சத்துருவே மித்ரனவன் விஷமெநல்லமிர்தமாகும்
மெத்தவுங் கொடுமையான அதாமமே தர்மமாகும்
நித்தியானந்த ரெனக்கனுகூலராயிருக்கும்போது
குத்தத்தைத் தருகின்ற விபரீதமே குணமதாகும். (ராகம)

---

## அகவல்.

இந்திரநீலமணி ஸன்னிபகாத்ரா
மந்தரசெந்தா மணா இதவ்நேத்ரா

மாதவாமதுஸூத தனக்ருபாலிங்தோ
பாதங்கெதியென்ற பக்தஜெனபெந்தோ

கந்தர்ப்பகோடி ஸமகமனீயபூஷா
இந்தர்ப்பஅரனயன்மோகிக்கும்ஸுபாஷா

க்ஷீரார்ணவத்தில் துயின்றகுணசீலா
நாராயணநவ யெவ்வனஸ்ரீலோலா

மந்தஹாஸவதனா ஸுந்தரசுபாகரா
அந்தமாம்முனிதேவ ஜெனபரிவாரா

அஸுரகுலபஞ்சனா அமிதபராக்ரமா
ஸுகரசாப பாணேஸு முகபூர்ணகாமா

ஆயிரம்வாயுடைய அரவில்துயன்றநீ
நேயமாகவேயென்னெஞ்சினிலிருக்கயில்
இந்தவிஷமென்னையென்னசெய்யுமைய்யா
வந்தனம்சங்குசக்கர மேந்துங்கையா
அகிலஜெகமெங்கும் நிறைந்தஸர்வேசா
ஸகலதுரித நிவாரணா சாரங்கராஜா (௱௧௧)

---

விருத்தம்.

கேதத்துடன் க்யாதுகேசவனை ஸ்மரித்துவிஷம்போட
மாதவன் மலரடியை மனதில் தியானித்துக்கொண்டு
ஸாதுபிரக்லாதர் விஷத்தைஸந்தோஷித்தரிந்துவிட்டு
ஜோதியாய் தேகமிகஜொலிக்கவே வீத்திருந்தார். (௱௧௨)

விருத்தம்.

என்னசொன்னாலும் மைந்தன் கேளாதிருப்பதைக்கண்டு
மன்னனோடருகில்ச் சென்று மதுரமாய் மொழிகுவாளே.

நீலாவதி சொல்லுவது.

கண்ணிகள்.

இ-ம் யெதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

மந்தஹாஸ வதனா அஸுரபதே
எந்தன்பிராணேச மன்னா

இந்தசிறுபாலனைக் கொன்னால் உலகத்தோர்
நிந்தனைசெய்துரைப்பார் நன்னா

---

### ஹிரண்யன் சொல்வது.

சத்துருவென்றெண்ணுமலே நீலாவதி
மெத்தபுத்திமோசம் போனேன்
அத்திசெய்திடுவேன் இவனை அஞ்சாமல்
குத்தம்சொல்லாதேயெமீதில்

### நீலாவதி.

இந்திரன்யெமன் குபேராதியரைஜயித்தமன்னு
மைந்தனிவன் உமக்கெதிரொன்ன
ஸுந்தரபாகு பலமுள்ள நீர்மனதிரங்கி
எந்தன்மேல் க்ருபைசெய்யும் ஸ்வாமி

### ஹிர

லேசாபயமத்தென்னிடத்தில் அதிகவெகு
நேசமாய்சாரங்கன் பாதத்தில்
தாஸன்போல் வணங்குகின்ற நம்முடமத
த்வேஷியைக்கொல்லாமல் விடுவேனே (௱கூச)

### விருத்தம்.

அந்தரங்கநாயகியை இந்தவிதமனுப்பிவிட்டு
சிந்தையில்கலக்கமுடனிருந் தாலோசனைசெய்வானே (௱கூரு)

### ஹிரண்யன் சொல்வது.

### கண்ணிகள்.

இராகம்-உசானி

யென்னஹிம்ஸைசெய்தபோதிலும் கோடிசூரியன்போல்
உன்னிதமாய் விளங்குறான் மேலும்
பண்ணினதெண்டனையெல்லாம்வீணாச்சுதேபிரக்லாதனிடதில்
ஒன்றும்பலித்திடாமல்போச்சுதே
மாதவனை அடிக்கடிவணங்குறான் அவனுடையதிரு
பாதத்தை அடுத்தபேறா இணங்குறான்
என்னிடத்தில்வைராக்ய மில்லையே என்னசொன்னாலும்ஸ்ரீ
மன்னவனைமறப்பதில்லையே
பக்தியாம் ஹரிபஜனைசெய்குறான் இவனால்நமக்கு
ஸத்தியமாகவே மிருத்யு வருகிறான்
கேசவாமுகுந்தாவென்கிறான் கிட்டபோனால்
சாரங்கெசாவைகுண்டவாஸாவென்குறான் (௱கூசு)

## விருத்தம்.

சிந்தைமிகத்தபித்து தலைகவிழ்ந் திரண்யனிருக்கும்போது
வந்தெதிர்நின்று சண்டாமார்க்கான் ஒருவசனஞ்சொல்வார்
எந்தைவருகிற பட்டுக்கும் இச்தபிரக்லாதன் தன்னை
பெத்தித்துவையும் பின்புபோதிப் போமென்றுரைத்திட்டான்
ராஜன்மனதைக் கரைத்திட்டானே. (ஈகள)

---

இ-ம் நாதநாமக்ரியயை ஆதிதாளம்.

பல்லவி.

தருமார்த்தகாமங்களை இவனுக்கு சொல்லும்

அனுபல்லவி.

குருவே நீரழைத்துச் செல்லும்

சரணம்.

ஸர்வவிதத்தாலும் நா முாபத்திரவித்ததுவெல்லாம்
சிறுபாலனிவன்மீதில் பலப்படவில்லை தரு
தர்பியைக் கொன்றவன்னமே லன்புடனுகவே
செம்பீரமாயுரைத்து தென்புடனிருக்கிறுன் தரு
பெத்தமாதாபிதாவை உற்றுருறவேன்விட்டு
சித்தியானந்த சாரங்களை பக்திப்பணிகிறுன் தரு

---

## விருத்தம்.

திருவிதசாஸ்திரத்தை குரு உபதேசிக்கும்போது
மருமமெல்லாமறிந்த பிரக்லாதர் மௌனமாயிருந்துவிட்டார்
சிருவர்கள் தங்களுடன் லீலைசெய்திடவழைக்க
திருமணவாளன் நாமத்தைச்சொல்லென்பார் அஸுரபாவத்தைத்தள்ளெ
ன்பாரே.

## பத்யம்.

கண்டிரேமனைவாரு கனுலுக்ரஹஸ்துலே
விபலுகைகொன்ன வொர்ரிதனமுபத்ரசர்த்
துலெயுண்டிபாயருஸம்ஸாரபத்ததினூரக
பட்டுபெடிரி-கலேயோனுந்தெல்லகாப்பாத்ய

வஸ்தலம்புருஷுடண்டு தேகியைப்புட்டுசுண்டு
தன்னெருங்கடுகர்ம தத்துருடைகடபட
முட்டடு பவசுதமுலகுனென

---

## திருபதம்.

தீனசுபமூலேது திவ்யகீர்த்தியுலேது
ஜகதிபுட்டி புட்டி சச்சிசச்சி
பொாலநேலமணகும் புட்டனி சவானி
த்ரோவவெதகி கொனுட தொட்டபுத்தி . (உா)

---

## விருத்தம்.

கேளுங்கோள் யென்னுடைய கேசவன்கீர்த்திகளை
மீளுங்கோள் இந்த சுரபாவம்விட்டு
வாளும் வரிவில்லும் வாங்குசூலங் கைக்கொண்டு ஒரு
காளும் வாரான் இங்கே நமன். (உாக)

---

## ஸ்லோகம்.

தைதேயாயெக்ஷரெக்ஷாம்ஷிஸ்தரீயச்சூத்ராவ்ருஜெளகஸா
ககாம்ருகாபாபஜீவாஸ்ஸந்திஸ்யச்சுததாம்கதா: (உாஉ)

## விருத்தம்.

இந்த உலகில்தந்தைதா யென்றுரைப்பதெல்லாம்
சந்தையில் சேருக்கூட்டம்
சிந்தைமகிழ்ந்து பாபஞ்செய்து தனந்தேடி புதைப்ப
தெல்லாம் திண்டாட்டம்
கந்தர்ப்பனைப்பெற்ற ஸௌந்தரி உனைக்கண்டால்
காமக்ரோதங்களோட்டம்
இந்திரையான கோமளவல்லி நீயிருக்கயெமனுக்
கிங்கில்லையாட்டம். (உாரு)

---

## கண்ணிகள்.

ராகம்-காம்போதி-ஆதிதாளம்.

நாராயணநாமம் பாராயணம்பண்ணுங்கோள் பாலர்களே நாம
ஸாரமானமிருதத்தை பானமபண்ணுங்கோள் சிறுபாலர்களே

தானதருமம் யெக்யம் தபஸு யோகமேதுக்குபாலர்களே நம்மிட
தீனசரண்யன் பாதத்யானமிருந்தால் போரும்பாலர்களே
ஸாரமத்தஸம்ஸார மஸிஷ்பலமாகும்பாலர்களே அதி
கோரமரணமதூதர் வாராத வழியிது பாலர்களே
பெத்தமாதாபிதாபெந்துவென்பதும் பொய்பாலர்களே நாம்
நித்தியானந்த ஸ்ரீஹரியை பஜனைசெய்வோம் பாலர்களே
அரண்யத்திலிருந்தழுதாலார்வேண்டாமென்பார் பாலர்களே அதுபோல
இரண்யகாமத்துரைத்தாலென்னபலன்வரும் பாலர்களே
அஸுரபாவத்தைவிட்டு நின்றுடுவோம்சிருபாலர்களே
நிஜமாய்ஸ்ரீசாரங்கதுரையைகொண்டாடுவோம் பாலர்களே (உ௱௪)

---

ஸ்லோகம்.

கௌமாரஆசரேத்ப்ராக்ஞோதர்மான் பாஹவதாநிஹ
துர்லபம்மானுஷம்ஜன்மததப்யத்ருவமார்த்தம். (௱உ௫)

இ-ம் ஆனந்தபைரவி சாப்தாளம்.

பல்லவி.

மாதவனே மதுஸூதனனென்று சொல்வீர்
காதகனான யெமனையெளிதீர் வெல்வீர்

அனுபல்லவி.

பூததயாபரபுனிதமங்கள மூர்த்தி
கேததனைத்தீர்த்தருள்செய்வர் தயாநிதி மாத

சரணம்.

காமக்ரோதலோபமோஹ மதமத்து
ரேயவிருதசிலர்களிடத்தில்போயொத்து
தாமரையிலைஜலம்போல் பத்துதலத்து
காமனைப்பெத்தோன்மீதில்ப்ரீதிவைத்து மாத
பெந்தமாகியபவவினைகளைத்தீர் க்கும்
இந்தஸுகங்கிடைக்காதுஎல்லோர்க்கும்
அந்தகன்தூதன்வருமலே கார்க்கும்
சொந்தசாரங்கர்பதந்தனிற் சேர்க்கும் மாத

---

ஸ்லோகம்.

விசம்யகர்மாணிகுணாநதல்யான்
வீர்யாணிலீலாததனுபி:க்ருதானி

யெதாதிஹ்ருஷோத் புலகாஸ்ருகேத்கதம்
ப்ரோதத்கண்டஉத்காயதிரௌதிந்ருத்யதி
பும்ஸோவர்ஷசதம் ஹ்யபாயுஸ்தத்தர்தமஜி தாத்மந:
விஷ்பலம்யேதவௌ ராத்ரியாம்சேதேந்தம்பிராபிதஸ்தம:

இ-ம் முகாரி-ஆதிதாளம்.

பல்லவி.

அஸுரகுமாரர்களே நீங்கள்
ஸம்ஸாரம் வீணென் டறிவீர்

அனுபல்லவி.

பசுபிராமணர் பக்ஷியிருக்கும் ஸகலஜீவனும்
திசைமுகன்சங்கருந் தேவரும் ஹரிஸ்வரூபம்

பாசுரம்.

வேதனூற்பிராயம் னூருமனிசர்தாம் புகுவரேனும்
பாதியும் முரங்கிப்போகும் நின்றதிற்பதினையாண்டு
பேதைபாலகனதாகும் பிணிபசி மூப்புத்துன்பம்
ஆதலாவ்பிறவிவேண்டே னரங்கமாநகருளானே

சரணம்.

உத்தமவேதம் னூறென்றெண்ணு மநுஜருக்கு
விதித்த ஆயிஸு நூறென்றெண்ணு இதிலே
நித்திரையிலேபாதி ஆயிஸுகுன்றும் அ
சுத்தபேதைபாலகன் எவ்வனம் பிணியென்னும்
க்ஷுத்பிபாஸைமூப்பில் துன்பமென்னும்
இத்தனை துன்பத்துக்கிடமான தேகம்வேண்டாம் அஸுர

பாசுரம்.

பச்சைமாமலைபோல்மேனி பவளவாய்கமலச்செங்கண்
அச்சுதவமரரேறே யாயர்தங்கொழுந்தே யென்னும்
இச்சுவைதவிர யான்போயிந்தர லோகமாளும்
அச்சுவைபெறினும் வேண்டே னரங்கமாநகருளானே,

சரணம்.

மானிடஜென்மம் வருவ தரிது வந்தும்
ஊனக்குருடில்லாமல் ஜனிப்ப தரிது ஜனித்தும்
மானஹீனமில்லாமலிருப்ப தரிது. இருந்தும் பிர்ம்ம
க்ஞானியானைச் சேருவ தரிது
கானரெஸலோல ஸ்ரீவேணுகோபாலருண
தீனசரண்யன் பாதத்யானஞ்செய்யக்கருது அஸுர

பாசுரம்.

மொத்தவல்வினையுள் ளின்று மூன்றெழுத்துடையபேரால்
கத்திரிபந்துமன்றே பராங்கதிகண்டு கொண்டான்.
இத்தனையடியாரானார்க் கிரங்குநம்மரங்கனாய
பித்தனைபெற்றறுமந்தோ பிறவியுட் பிணங்குமாரே

சரணம்.

பெண்டுபிள்ளையென்னும் வியாக்ரம் கீவ்
சண்டகபெந்துஜனர்களொரு வியாக்ரம்கியானத்தைகொள்ளை
கொண்டுஷடிந்திரியங்களொரு வியாக்ரம்நானென்றும்மமதை
கொண்டிடச்செய்வதொரு வியாக்ரம்
அண்டர்நாயகருன புண்டரீகாக்ஷனை
அண்டிபணிந்துதொண்டு பண்ணுவோம் சீக்ரம் அஸுர

ஸ்லோகம்.

நதானம் நதபோத்யானம் நசௌசம்
நவ்ரதானி சப்ரியதே அமல்யாபக்த்யா
ஹரிரன்யத் விடம்ப நம்

பாசுரம்.

மரஞ்சுவர்மதிலெடுத்து மறுமைக்கேவெறுமைபூண்டு
புரஞ்சுவரோட்டை யாடம்புரளும் போதரிமாட்டீர்
அரஞ்சுவராகின்ற வரங்கனார்க்காட்செய்யாதே
புரஞ்சுவர்கோலஞ்செய்து புட்கவ்வக்கிடக்கின்றீரே

சரணம்.

வந்தனஞ்செய்குவோம் செடிமாலே மனதிரங்கி
செந்தாமரைகரத்து ஞலே ஆதரவோடு
கந்தனைத்திடுவரன் பாலே
பெந்தவினைகள் உங்களுக்கில்லை அதின்மேலே
அந்தரங்கத்துடன் சொந்தசாரங்கேசன் வை
குந்தபதத்தில் வைப்பார் சந்தேகமில்லாமலே அஸுர (உாக)

இ-ம் இந்துஸ்தான்காபி-ஆதிதாளம்.

பல்லவி.

நாக்கே உனக்கு நமஸ்காரம் ஹரி
நாமஞ்சொல்லா விட்டால்
நமஸ்காரஞ் செய்வேன் . . .

### சரணம்.

நாக்கே யிதரவிஷயத்தை பேசாதே
நாராயணநாமம் சொல்ல் கூசாதே
தீக்குணமுள்ளவரை திரும்பி பாராதே
நீரகாகமதில் சேராதே நாக்கே

கண்டபதார்த்தங்களை உண்ணாதே
காயத்தை சதமென்றுநீ யெண்ணாதே
விஷ்ணுவைத்தவிறநீ ஸ்துதி பண்ணாதே
விஞ்சயர்விஷய வாஞ்சைசயை நண்ணாதே நாக்கே

நல்லோர்பெரியோர்களைக் கொண்டாடு
நாதனனந்தகல்யாண குணத்தை பாடு
பொல்லா காமக்ரோதத்தை தள்ளிப்போடு
பொய்சொல்லுவோ ரிருக்குமூரைவிட்டோடு நாக்கே

திருமந்திரப்ரபாத ருசிபாரு
தினமும் பிரர்களுக்குயிதங் கூறு
தருமசிந்தனையுடனே மதி தேரு
தாஸதாஸ தாஸர்களைச் சேரு நாக்கே

ஆயிரநாமத்தை அடிக்கடி சொல்லு
அதிக்ரமித்துயெமனையலக்ஷயமாய் வெல்லு
நேயமாய்சாரங்கேசனைநெஞ்சினில் கொள்ளு
ஸாதுக்கள் பாததீர்த்தம் புஜித்துநீ துள்ளு நாக்கே (உாய)

### ஸ்லோகம்.

முக்தஸ்யபால் யேகைசோரேக்ரீட தோயாந்திவிம்சதிஃ
ஜராயுக்ரஸ்ததே ஹஸ்யயாத்யசல்யஸ்ய விம்சதி:
ததாபுமானம் முக்தஸமஸ்தபெந்தஸ்தி பாவாபாவானுகிருதாசயா க்ருதி:
விர்தெக்தபீஜாரனுசயோமஹீயஸா பக்திப்ரலரஹேணஸமேத்யதோக்ஷஜம்

இ-ம் செஞ்சுருட்டி சாபுதாளம்.

### பல்லவி

நாராயண நாராயண நாராயணா
வென்று சொல்லு

### அநுபல்லவி.

நீர்மேல் குமிழிபோலே தேகம்
நிலையில்லாதென்றெண்ணி தள்ளு நாரா

## சரணங்கள்.

சொப்பனம்போலிப் பிரபஞ்சம்
ஸுகமென்று வினையாதே
இப்போதெமன்கை ஓலைவர்தாலப்புறம்
வாரேனென்றாலும் வில்லாதே நாரா

அன்னை கெர்ப்பமுதலாதரித்தாண்ட ஸ்ரீ
மன்னவனை மறந்தாயே
பண்ணினபாவங்கள் யெண்ணத்துலையுமோ
எண்ணிப்பாரடாநீ பேயே நாரா

சூதுவினைப்பவரோடுற வொழித்து
ஸாதுஜனரிடம் சென்று
ஆதியந்தமத்ய ஜோதிஸ்வ ரூபரின்
பாதமலர்ஸேவை பண்ணு நாரா

இத்தனைபாடுபட்டு தேடிபுதைத்த
சொத்துக்கள்கூட வராது
பத்தினிபுத்திரர் சுற்றத்தாரென்பதும்
அத்தனையும் வெறுஞ்சூது நாரா

பாகவதர்கள் சரணரேணுக்களை
பக்தியாய்சிரவில் கொள்ளு
மேகவண்ணருட கதாமிருதத்தை
பூஜித்துமகிழ்ந்து நீ துள்ளு நாரா

வாயுவக்னிப்ருதிவி ஆகாசம் ஜலத்தாலே
நிர்மித்த கூடு
ஓயாமலே மூப்பிறப்பு பிறப்பு
பிணிவிறைந்த மலக்காடு நாரா

காமக்ரோதலோப மோஹமத
மாத்சரியம் வராமலே பாரு
தாமரையிதழ்நயன ராகிய
சாரங்கர்திருவடி சேரு நாரா (உகரு)

## ஸ்லோகம்.

யேதாக்ரஹ க்ரஸ்த்தநயிவக்வ சித்தஸத்யா
க்ரந்தநித்யாயதிநேதநே ஜெநம்முஹுச்
சுவஸன்வத்திஹரே ஜெகத்பதே
நாராயணேத்யாத்மமதிர்க்கதத்பர (உகசு)

இ-ம் முகாரி- சாதாளம்.

பல்லவி.

நாராயணனே ஸத்யம் பாலர்களே
வேறேகாணுவ தனித்யம்

சரணம்.

சேருருந்திக்கமலத்தில் பிரமனை
சிருஷ்டித்து வைத்தவருார் இந்த
பாருலகத்தை படையென்றவர்க் காதி
பத்யங்கொடுத்தவ ருார் நாரா

சங்கரன்கையில் கபாலத்தொழித்து
ஸௌக்யத்தில் வைத்தவரார்
அங்சம்பழுதுவந்த ஆயிரங்கண்ணனே
ஆதரித்தவ ருார் நாரா

எண்பத்துநாலுலக்ஷம் ஜீவராசிக்கும்
இதைகல்பித்தவ ருார் ஞான
கண்படைத்துபார்க்கு முனிவர்க்குமுன் வந்து
காக்ஷிகொடுத்தவ ருார் நாரா

ஸர்வசேஷியாய் ஆலில்சிறு பாலருய்
சயனித்திருப்பவ ருார் அஸுர
கர்வமடக்க யுகந்தோறும் வந்தவ
தாரமெடுத்தவ ருார் நாரா

ச்லோகம்.

பரித்ராணுய ஸாதூனும்
விஞசாய சதுஷ்க்ருதாம்
தர்ம்மஸம்ஸ்தாபனர்த்தாய
ஸம்பவாமி யுகேயுகே.

சரணம்.

அக்ஷயஸம்பத்தளிக்கும் ஸ்ரீலக்ஷிமியை
வக்ஷஸ்ஸில் வைத்தவ ருார்
பக்ஷபாதமன்றி உயிர்களைகுக்ஷியில் வைத்து
ரக்ஷித்தவ ருார் நாரா
இந்த ஹிரண்யன்பேரைச் சொல்லி இனிமேல்
யென்பேருரைக்கிற தோ
அந்தரங்கமாய் மனங்தோனை தள்ளி
அன்னியனைத்தழுவ தோ நாரா

ஸூரியசந்திராக்கினிக்கும் ஸ்வரூபம்
விளங்கவேசெய்தவ ரூர் இந்தபாரினில்
சாரங்கந்தரித்து பக்தரை
காத்திடவந்தவ ரூர் நாரா (௨௧௫)

---

### ஸ்லோகம்.

தருபூரேணகா மேணமோ ஹேநசபலீயஸா
சேஷம்க்ரஹேஷூ ஸக்தஸ்யப்ரமத்தஸ்யா பயாதிஹி

இ-ம் ஸ்ரீராகம் தாளம் திருபுடை.

### பல்லவி.

வந்திடுவானே யெமன்—தூதருடன்
வந்திடுவானே யெமன் வந்தி

### சரணங்கள்

அந்திபகலாக செந்திருமால் தன்னை
சிந்தனைசெய்யா திருந்தாலுனைத்தேடி வந்தி
மட்டிப்பயலேநீ கிட்டிவாவென்றேங்கி
குட்டி துர்ப்பாஷையாய் திட்டி உதைத்திட வந்தி
மாடியின் ஜன்னலை மூடியதிலொரு
கோடிசிபாயிக ளோடியிருந்தாலுமே வந்தி
மட்டற்றசேனைகள் கிட்டவிருந்தாலும்
கட்டகயர்கொண்டு அட்டஹாஸஞ்செய்து வந்தி
தாஸஜனர்க்கதி நேசரானசாரங்
கேசரைப் போற்றாமல் மோசம்போனாலோடிவந்தி (௨௧௬)

---

### பாசுரம்.

வாயொருபக்கம் வாங்கி வலிப்பவார்ந்த நீர்க்குழிக்கண்கள்மிழற்றத்
தாயொருபக்கந் தந்தையொருபக்கந் தாரமுமொரு பக்கமலற்றத்
தீயொருபக்கஞ்சேர்வதள்ளூன்னஞ் செங்கண்மாலொடுஞ்சிக்கெனச்சுற்ற
மர்யொருபக்கம்நிற்க வல்லார்சட்கரவதண்டத்தி [த்லுய்யலுமாமே

### பாசுரம்.

சோர்விஞர்பொருள்வைத்த துண்டாராகிற்சொல் லுசொல்லென்றுசுற்ற
மிருந்தார்
ஆர்வினவிலும்வாய் திறவாதே யந்தகால மடைவதன்முன்னம்
மார்பதமென்பதோர்கோயிலமைத்துமாதவனென்னும்தெய்வத்தைநாட்டி
ஆர்வமென்பதோர் பூவிடவல்லார்க்கரவதண்டத்தி லுய்யலுமாமே

---

இ-ம் பைரவி அடதாளம்.

### பல்லவி.

இந்தஉலகில் மனமே யென்ன ஸுகமடைந்தாய்
நந்தமுகுந்தர் பாதத்தை நாடாமலேனிருந்தாய்

### அனுபல்லவி.

உந்தனுயிர் போகும்போது
செந்தமான பத்துபுத்ராள்
கோவிந்தர்பத தியானத்தை
சிந்தையில்வ ரொட்டாதடிப்பார் இந்த

### சரணம்.

தேடியேநீ வரும்போது உன் தேவியெதிர்வருவாள் நல்ல
பாடகம்சிலம்புமுதல் பல பணிதிகளணிவாள்
கூடியேகுலாவி ஸுக போகங்களைத் தருவாள்
நாடியெமதூதர்வந்து நலிந்து உன்னை துடர்ந்துவிட்டால்
பாடியே கண்ணீர்வராமல் கோடிமூடியெடுங்களென்பாள் இந்த
கையில்காசி இல்லையிவன் கடன்காரனென்பார் யென்
மெய்யில்பூண்ட ஆபரணம் வித்தமுதேனென்பார் நாளை
செய்யவேண்டியயிவன்கடனுக்கென்னசெய்வேனென்பார்
வையத்தில் வாழுமிந்த மனிதருறவுயிப்படியே
மயங்காதே தயங்காதே மாதவனை மறவாதே இந்த
சொப்பனம்போலிப்பிரபஞ்சம்ஸுகமென்றுநீநினைப்பாய் இதை
அப்புமேல்குமிழியென்று அருவறுத்து வெறுப்பாய் ஸௌ
லப்பகுணமகிமையுள்ள கோமளவல்லியுடன்
ஸர்ப்பத்தின்மேல் சயனஞ்செய்யுஞ் ஸார்வபௌமராஜதுரை
அர்ப்புதசாரங்கர் திருவடிமலரை தியானஞ்செய்வாய் இந்த

---

## வெண்பா.

பாலிற்கிடந்ததும் பண்டரங்கமெய்யதுவும்
ஆலிற்றுயின்றதுவுமாரறிவார்—ஞாலத்
தொருபொருளை வானவர்தம் மெய்ப்பொருளையப்பில்
அரும்பொருளை யானறிந்தவாறு (உஉ,ம)

இ-ம் அட்டாணா ஆதிதாளம்.

## பல்லவி.

எந்தவிதம் புத்தியுரைப்பேன்—அடிக்கடினு
னெந்தவிதம் புத்தியுரைப்பேன்

## அனுபல்லவி.

எந்தவிதம் புத்தியெடுத்துரைத்தாலுங்கேளாமலே
மந்த புத்தியாலேகெட்டு யிந்திரேசரைமரந்தால் எந்த

## சரணங்கள்.

ஊத்தக்குழிக்கி உழைத்து—உலகில் வெகு
வார்த்தைபழிகள் சுமந்து
பேய்த்தலைபோலலைந்து காத்திரங்களும் நொந்து
மூர்த்தியை பஜிக்காமல் தூர்த்தனாய்ப்போனாலுனக்கு எந்த
தோலுடன் நரம்பு சேர்த்து—மேனிமினுக்காய்
ஊனிடை சுவருவைத்து
காலுடன் கையமைத்து நீலவிழிபதித்து
நாலைந்துதலையுடன் காலபாசம்போலேஃன்றால் எந்த
தட்டான்கை யுடமைபூண்டு—இடையில்நல்ல
பட்டுவஸ்திரந் தரித்து
மட்டிமனப் பேயுடைய கொட்டந்தனையடக்கி
அஷ்டாக்ஷரப்பொருளையெட்டி பிடிக்காவிட்டால் எந்த
டாண்டவர்க் கனுக்கிரஹித்த—அகிலஜெகத்
தாண்டவரைப் பஜியாமல்
பூண்டுஆபரணத்தைமுன்னும்பின்திரும்பிபார்த்து
தாண்டித்தாண்டிநடந்து தலைகீழாக விழுந்தால் எந்த
நாராயணரை அறிந்து — அவர்பாதத்தில்
நீராயுருகிப் பணிந்து
காரார்மணிசிறத்தோன் பேராயிரப்படைத்தோன்
சாரங்கேசதுரையை நேரேப்பணியாவிட்டால் எந்த

ஒட்டகம் சவாரிவராகம்
ஆட்டுரோமம் ஒவ்வொன்றுக்கு
ஆம்புப யோகம்
சிட்டாகளாகிலும் தேகந்தன்னில்
ஜெனித்தமயாகம் தீண்டாதுலோகம் எந்த (உஉக)

## பாசுரம்.

ஊனிடைச் சுவர்வைத் தென்புதூண் நாட்டியுரோம
மெய்க்கூரையொன்பதுவாசல் தானுடைக்குரம்பை பிரியும்
போதுன்றன் சரணமே சரணமென்றிருந்தேன்
தேனுடைக்கமலத்திருவினுக்கரசே திரைகொள்மாநெடுங்கடற்கிடைந்தாய்
நானுடை தவத்தாற் றிருவடியடைந்தேன் நைமிசாரணியத்து ளெந்தாய்

---

## விருத்தம்.

காரணப்பொருளாய்நின்ற கண்ணனுட மகிமையெல்லாம்
நீரஜாஸனர்க்கு ஸோதரராய் நிர்ம்மலராயிருக்குகின்ற
நாரதரிடத்தில் நானுபதேசம் பெற்றுக்கொண்டேன்
ஸாரத்தை அறிந்தபின்னில் ஸாரத்தைச சொல்லுவேனே. (உஉ௬)

## விருத்தம்.

அந்தரங்கமுள்ள யெங்களருமை பிரஹ்லாதனனே
இந்தகுருவிடத்தில் நாமெல்லோரும் கூடிப்படித்தோம்
அந்தநாரதரிடத்தி லுபதேசம் பெற்றதெப்போ
விந்தையாம் ரஹஸ்யத்தை யெங்களுக்குரைசெய்வாயே. (உஉ௭)

## ஸ்லோகம்.

நியமாணும் பயோத்விக்ஷும் க்ரந்தந்தீம் குரரீமிவா
யத்ருச்சயாகத ஸ்தத்ரதேவ ரிஷிம்ருஷ்ட வான்பதி

---

## கண்ணிகள்.

இ-ம்-ஸாவேரி

மந்தராசலத்தில்சென்று யென்பிதா தவஞ்செய்யும்போது
இந்திரன்யென் மாதாவைக் கொண்டுசென்றானப்போது
சிந்தையில் தாபத்துடனே யென் தாயவளழும்போது
வந்துநாரதமுனி இந்திரனைப் பார்த்துரைப்பார்
ஸுரபதியே இவள் கெர்ப்பத்தி லிருக்கின்றசிசு
பரமபாகவத சிகாமணி இவனென்றுரைப்போது
சரண்யனுட கிருபைபெற்றோன் தரணியிலுள்ளோர்க்கிவனு
லதிஸுகங்கிடைத்திட போரது என்றுரைப்போது
க்ஷேமமாய் நாரதர்சொல்கேட்டு வாஸவன்யென் தாயைவிட்டு
பிரகாசமாய் பொன்னுலக மடைந்தான் துர்புத்திவிட்டு

ஆசித்தென் மாதாவுக்சென்பொருட்டு பச்நிஞானுபதேசஞ்செய்திட்டு
சாரங்கேசர்கிருபைக் கருகனென்று மனம் மகிழ்ந்திட்டு

---

## விருத்தம்

இரண்யன்வரமட்டுயிந்த சிசு வயிற்றிலிருக்கவென்று
பரமகுருவனுக்கிரஹிக்க பதிவிரதை சிஸ்ருஷை செய்திருந்தாள்
ஹிரணயமாய் நான்வேறு ஞாபகமிலலாமல் கிரஹித்தேன்
பரமபத ஸாதனத்தை யெண்ணுவீர் அரிபஜனை பண்ணுவீரோ. (உஉசு)

## ஸ்லோகம்

பதீச்வரோ பகவதிபக்திஸயாற் தைற்யதாரதி:
குருசிச்ருஷயா பக்தியாசர்வ ஸாற்பணேனசா:
ஸங்கேனஸாது பக்தானுமீச்வரா ராதனேனசா
ச்ரத்தயாதக்ததாயாஞ்சகீற்தனேற் குணகர்மனும்
தத்பாதம்புருஹத்யானசல்லிங்கேக்ஷரற்ஹணுகிபி:
ஹரிஸர்வேஷுபூதேஷு பகவாந் நாஸ்தீஈச்வர:
இதிபூதாவிமனஸாகாமை ஸைதஸாதுமானயேது (உஉஎ)

---

இ-ம் பூரிகல்யாணி சாபுதாளம்

## பல்லவி

நாராயண நாமம் பண்ணு பண்ணு
ஸாரகுணமிருதத்தை உண்ணு உண்ணு

## அனுபல்லவி

வேறைதெய்வ மில்லையென்று யெண்ணு யெண்ணு
வாரிஜமலர்க்கண்ணான் ஒண்ணே ஒண்ணு நாராயண

## சரணம்,

அஷ்டாக்ஷரப்பொருளை சொல்லு சொல்லு
துஷ்டகாமக்ரோதரைக் கொல்லு கொல்லு
கெட்ட ஜெனருறவைத் தள்ளு தள்ளு
விஷ்டையிலேஸ்திரமாய் நில்லு நில்லு (நா)
இந்த உலகத்தாசை தீரு தீரு
சிந்தைமகிழ்திடற்றுப் பாரு பாரு--வை
குந்தபதவிதன்னைக் கோரு கோரு
நந்தமுகுந்தரண்டைச் சேரு சேரு (நா)

ஈஷண த்ரயமத மத்து அத்து
தாஸ ஜெனர்களே உத்து உத்து
அவாளாசீர்வதித்திடப் பெத்து பெத்து
சாரங்கேசர் திருவடியைப் பத்து பத்து நா (உஉஅ)

## விருத்தம்.

அஸுரகுமாரரெல்லாம் ஆனந்தாவேசனதாலே
நிஜபக்தியுள்ளபிரக் லாதன்போலாகிவிட்டார்
திசையெட்டும பகவன் நாமம் சூழ்ந்திருப்பதையறிந்து
விசனத்தோடு சண்டமர்க்காள் வந்திட்டார் இதுவென்ன ஆச்சரியமென்
[றிட்டாரே. (உஉகூ)

## விருத்தம்.

குருவுடைய புத்திரர்களே நீங்கள் ஹரிவுட நாமந்தன்னை
உரையுங்கோளின்னு உக்ர கோபத்தோடிரண்யனுக்கறிவிக்க
வரவழையுங்களேன்று வாள்கையி லேந்திக்கொண்டான்
சிறுவனங்கே வந்திடவுங் கண்டிட்டான் வீராவேசங் கொண்டிட்டானே

இ-ம் கல்யாணி சாபு தாளம்.

## பல்லவி.

ஹரியை பஜனை பண்ணுமே அண்ணுவே-ஸ்ரீ
ஹரியை பஜனை பண்ணுமே

## அனுபல்லவி.

தேரிவரிய பிரமன் சிவனிந்திராதி தேவர்
பிரியத்துடன் தியானித்து ஸதாஸ்துதி செய்திருக்கின்ற அரி

## சரணம்.

த்வேஷ்புத்தியை தெஜித்து—எங்கும்
சாரங்கேசகுருவாய்ப் பாவித்து
கிலேசத்தைக் கொடுக்கும் காம க்ரோதாதியை ஜெயித்து
ஆசைவையாமல்ஸம் ஸாரத்தில் மனம்வெறுத்து அரி (உங௦)

## விருத்தம்.

குலத்தைக் கெடுக்கவந்த த்ரோகியே புருஷாதமனே-பூ
தலத்தினிலுள்ளோர் தேவர்களஞ்சியெனக் கடிமைசெய்வார்
நலத்தையெல்லாமிழந்து யென்னை விரோதிக்கிராயேபாபி-என்த
பலத்தினால்வந்த ஆண்மையதனை நீ சொல்லுவாயே. (உங௧)

### பத்யம்

நாகும் ஜாடகஜோத்ய பய்யெகெதா நாதண்டிரி
ஈபுத்திரா ! நீகுன்லோ பலந்தோசநோ பருலுதர்
நீதுலபடிம் பிஞ்சிரூ யேகாந்த்ம்புன பார்ச்வுல்
பலிகிரோயிதான வஸ்ரோணிகின் வைகுண்டுண்டு
க்ராதாபரூ துண்டதனின் வர்ணிம்பனீ கேடிகின் (௨௯௯)

---

### ஸ்லோகம்.

க்ஷேதுர்வினீத யந்தாத் மன்குல பேதகராதமா
த்வாம் துமச்சாஸ நோத்வ்ருத்தம் நேஷயாமயத்ய மக்ஷயம்
க்ருத்தஸ்யயெஸ்ய கம்பந்தேத்ர யோலோகாஸ்ஸ ஹேச்வரா:
தஸயவே பீதவன் மூடசாஸனம் கிம்பலோ த்யகா:

---

### பல்லவி

இ-ம் காம்பேதி ஆதிதாளம்.

அந்த ஹரியையென் கண்ணின்முன்னே காட்டடா
வீண்வா தேதுக்கடா

### அனுபல்லவி

எந்தனைவிடவேறொரு ஈச்வரனுலகத்துக்கு
இருக்கிறானென்றுரைப்ப தெல்லாம் பொய்யடா
மந்தபுத்தி தன்னைவிட்டு வந்தனஞ்செய் தென்பாதத்தில்
அந்தரங்க பிரீதியோடிருந்தால்பய மில்லையடா அந்த

### சரணம்.

மத்சியகச்சபவராகமாகி வந்தவன் உன்மன
திச்சயை நிறவேற்றுவா னென்றெண்ணாதேடா
அச்சமில்லாமலென் தம்பியை வதைத்தோனைக்கண்டா-விந்
தக்ஷணமே கொன்றென்மனஸ் தாபத்தை தீர்ப்பேனடா அந்த
சின்னவயது முதலா யன்னை பீதா பெந்துகுரு
வசனங்களை தடுத்திருந்தோன் நீயடா
நன்னகவாளினாலே பாரிதோ கழுத்தறுக்கிறேன்
பன்னகசயன னுனக்கா கென்முன் வரட்டுமடா அந்த
ஆசைவைத்தோன்மீதில்மூனு மைந்தர்களைக்காட்டிலதி
நேசவிச்வாஸத்தோ டிருந்தேனடா
தோஷதுர்க்குணத்துடன் நீ லேசபயமற்று-சாரங்
கேசனொருவனிருக்கிரா னென்றெதிர் சொன்னாயடா அந்த (௨௩௪)

பத்யம்

நாதோடழ்ப்ரதி பாஷலாடெ துஜசன் நாதுண்டு
நாசண்டெடீ பூதஸ்ரெணிகி ராஜுவேடொகடு
ஸம்பூர்ணப்ரபாவுண்டு மத்ப்ராதம் ஜம்பினமுன்னுநே
வெதிகிதிம்பலமாருநாராயணுண்டே தத்விஸ்வமூலோனலேமெரிடெந்து
(ண்டுரு துர்மதி

விருத்தம்.

பொல்லாத இரண்யன்செல்லக் கேட்டந்த பிரக்லாதனரும்
நல்லசமலாஸனன் முதலெல்லாம் ஸ்ரீஹரிமயமென்றும்
வல்லாண்மையுள்ள உமக்குமெனக்கும் மற்றசீவராசிகளுக்கும் -- அவ
ரல்லாமல் ஒருவரில்லை வீண்பிரமையென்ன அதை அறிந்திடுவீர் அண்ணு

---

ஸ்லோகம்.

நகேவலம்மே பவதச்சராஜன் ஸவைபலம்
பலினாம்சாபரேஷாம் பரேபரேமீஸதிர
ஜங்கமாயேபிருமமாதயோ யேநவசம்ப்ரணீதா: (௪௩௬)

பத்யம்.

பலயதுலகு தர்ப்பதுலகு பலமெவ்வடுநீகுசாகு
பிரம்மாதுலகுன் பலமெவ்வடுப்ராணுலகு
பலமெவ்வண்டட்டி விபுடுபலமுஸுரேந்தரா (௨௩௭)

ஸ்லோகம்

போர்கேரோகபயம் ஸுகேக்ஷயபயம்
வித்தேஷுராஞ்ஞோபயம் வித்யாவாதபயம்
தபேந்திரியபயம ரூபத்பயம் யோஷிதாம்
ஹரஷேசோசபயம் ரெணேரிபுபயம்
காயேக்ருதாந்தாபயம்மித்யம் ஸர்வமஞோர்த்தகம்
க்ஷிதிதலேவிஷ்ணோத்பதம் னிர்பயம் (௨௩௮)

---

பத்யம்.

கடலம்போதிசலடு காலிங்கலடா காசம்பனன்
கும்பினன் கலடக்னிந்திசலப்ப கள்ளஙிசலங்
சத்யோதசந்தரார்க்குலன் கலடோக்காரமுனன்
திருமூர்த்துலந்த்ரு லிங்க்வ்யக்த் துலந்தந்தட
கலடீசுண்டுகெலடுதெண்டிரிவேதகக்காநேலநீநாயெடன் (௨௩௯)

### பத்யம்.

இந்துகலடந்து லேடகி ஸந்தேகமுவலது
சக்ரிஸர்வோபக துண்டெடங்தெந்துவெத
கிருசின னந்தே கலடு தானவாக்ரணிவிண்டே (௨௪௭)

---

### ஸ்லோகம்.

யஸ்த்வயாமந்த பாச்யுத்தோ மதந்யோ ஜெகதீஸ்வரஹ:
க்வாஸௌயதிஹ ஸர்வத்ர கஸ்மாது ஸ்தம்பேன த்ரச்யதே
ஸோஹம்விகத்த மானஸ்யஸிர:காயாத் தராமிதே
கோபாயேஹரி ஸ்துலாத்ய யஸ்தேசரணமீப்ஸித:

### விருத்தம்.

சிங்காஸனத்தைவிட்டிறங்கி வாள்கையிலேந்திக்கொண்டு
யெங்கும் நிறைந்திருக்கான் ஹரியென்னுயே பிரக்லாதா
இங்கிந்த தூணில்காட்டுவா யென்றிறைந்துகேழ்க்க
பங்கஜநாபனை அதில்வரும்படி கோறுவார் ஸ்துதித்துபணிந்துகூறுவாரே.

---

### ஸ்லோகம்.

எவம்துருக்தைர் முஹூர்த்தயன்ருஷா
ஸூதம்மகாபாகவதம் மகாஸூர:
கட்கம்ப்ரக்ருஹயோத்பதி தோவராஸநாது
ஸ்தம்பம்ஸ்ததா டோருபலஸ்வமுஷ்டிநா (௨௪௯)

### பாசுரம்.

நீராய்நிலனுய்த் தீயாய்க் காலாய் நெடுவானுய்ச்
சீரார்சுடர்க ளிரண்டாய்ச் சிவனுயயனுய்க்
கூராராழிவெண்சங்கேந்திக் கொடியேன்பால்
வாராயொருநாள் மண்ணும்விண்ணும் மகிழவே (௨௫௦)

---

இ-ம் கரகரப்பிரியை ஆதிதாளம்

### பல்லவி.

கனகவஸனு கமலநயனு ஓ கனகவஸனு

### அனுபல்லவி.

ஸனகாதிமகாமுனி ஸ்துதசரணு கனக

### சரணம்.

மந்தர தரணு இந்துவதனு
பெந்த விமோசனு விந்துசயனு கனக

தான வமர்த்தனு தரணியுத்தாரனு
தீனஜெனபரிபாலனு ஸுகுணு கனக
பானுகோடி தேஜா டக்ஷிராஜத்வஜா
தூணில்வருவீர்விஜமா சாரங்கராஜா கனக

இ-ம் பூர்வகல்யாணி சாபுதாளம்

பல்லவி.

செம்பொற் பாதத்தைநம்பி பணிந்தேன் மெய்யா—எந்தன்மீதி
லன்புடனிந்த ஸ்தம்பத்தில் வாருமையா

அனுபல்லவி.

அம்புஜக்ஷா யெம்பெருமானே வாரும்
கெம்பீரரூபா துன்பத்தை தீரும். செம்

சரணம்.

உந்திமலரிலயனைப் படைத்தமன்னு—ப்ரளயஜலத்தில்
ஸுந்தரவடிவா யாலில் படுத்தீரன்னு
சிந்தித்தோர் மனக்ரந்தியை
சேதித்தருள்செய்யும் முகப்ரஸன்னு
பெந்தபவவினை மோசனு
எந்தனைக் காத்தருளும் கண்ணு செம்
உத்தமதிருமகள் மருவும்நேசா--பக்தர்மனதில்
நித்திய வாஸமா யிருக்கின்ற சாரங்கேசா
பெற்றதாய்தந்தை உற்றாருறவும்
அத்தனையும் நீரெனக்கு ஸர்த்தோஷா
மத்தகெஜத்தின் துயரத்தை—து
டைத்தருள்செய்த ஸர்வேசா செம்

— ———

இ-ம் முகாரி சாபுதாளம்
பல்லவி.

நேராவந்தென்னை கராவிட்டால்
வேறேயார் கெதி அய்யனே

சரணங்கள்.

பேராயிரங்கொண்ட நாராயணப்ரபுவே
இன்னந்தயவில்லையோ
ஓராலம் இளந்தளிரில் துயில்கொண்ட
உந்தனுக்கென்னை ரக்ஷிப்பதுர் தொல்லையோ நேரா

சொண்டல் மேசவண்ண புண்டரீகாக்ஷனே
  அண்டசரீரகனே உண்மை
அண்டினோர் தயரத்தை விண்டிடச்செய்யும்
  அலர்மேல் மங்கைநாதனே நேரா
உற்பத்திகாரணமாகி விளங்கும்
  உலகுண்டமாயவனே
அற்புதமாக க்ஷீரப்தியில் சயனித்த
  அனந்தகல்யாண குணனே நேரா
வாரேருமங்கையை வக்ஷஸ்தலத்தில்வைத்த
  வைகுண்டவாஸனே
பாரிலுள்ளபக்தர் தாபந்தீர்க்கவந்த
  திரசாரங்கேசனே நேரா

---

வதாஸூஜகதாதாரம் மாவகப்ரஹ்லாதாய ஸுமிவெஸவிதம் |
காலமேகப்ரதீகாசம் வந்தே வாயுதக்ஷணம் ||

---

## கண்ணிகள்.

இ-ம் பந்துவராளி சாபுதாளம்

சரணம் சரணம் சக்ர ஹஸ்தனே — என்னையிந்த
தருணத்தில் வந்துசாரும் கர்த்தனே
அத்தியைக்காத்த நித்யானந்தனே — தேவபூதிக்கு
தத்துவத்துபதேசஞ் செய்தோனே
மச்சமாய்க் கடலி லவதரித்தோனே — ஹரி-ஹரி-ஹரி
துச்சமது கைடவரை வதைத்தோனே
செந்திரு மகிழ்ந்துறையும் மார்பனே — மாமுதுகிலே
மந்தரத்தைச் சுமந்த கூர்மனே
சாதலீலை யொளித்த சூரனே — ரஸாதலத்தில் நுழைந்து
பாதகனுயிர் வதைத்த வராகனே
ஆரம்பதக்கமணிந்த மார்பனே — ஹரி ஹரி-ஹரி
வரிஜபவரைப்பெற்ற நாபனே
மந்தாஹாஸ இந்து வதனனே — கையிலையில்வாழும்
சந்திரசேகரர்சாபம் தீர்த்தோனே
தேகவிஹாரமற்ற நாதனே — அஸுரரை மயக்க
மோகன அவதாரஞ் செய்தோனே
சத்ருதெயித்தருக்கு காலனே — அத்யந்தம்ப்ரிய

பக்தஜென பரி பாலனே
தாசாம்பு மலர்மேனி மாயனே--ஹரி-ஹரி-ஹரி
சாரங்கேசனே உலகுண்டவாயனே (உசதி)

---

இ-ம் தோடி ஆதிதாளம்

பல்லவி.

கமலாஸனிமன்ன காருங்கண்ணா ஓ
கமலாஸனிமன்ன

அனுபல்லவி.

மமஹிர்தய வஸிதா—மாரன்
மோஹிக்கும் பிதா
அமரர் பூஜிக்கும் பாதா
கரி வாதா கமலா

சரணம்.

பங்கஜாஸனரைப் பெற்றவரே—சிவ
சங்கரர்சாபந் துடைத்தவரே
திங்களாதித்யனுக்கும் மங்காதருள்செய்வோரே
இங்கிந்த தூணில்வாரும் கேசவரே கமலா

பரமபுருஷா பக்தவச்சலா—ச்வாமி
சரணாகதரக்ஷண விச்சலா
வரமுனிநாரதாதியர்க் கருள்குணசீலா
இரவொழிக்குந் தேஜா ஸுகபோலா கமலா

இரண்யன் கேட்ட தூணில் வரவேணும்—லோக
சரண்யனேஸேவை நீர் தரவேணும்
சாதிக்துவதனாந் தாபந்தீர்த்திடவேணும்
திரமையோடு சொன்னேன் வாக்குபலிக்கவேணும் கமலா

சாச்வதமாம் வைகுண்டவாஸனே—ச்வாமி
மாசற்ற மகிமைப்ர காசரே
தாஸஜெனர்கள்க்கதி நேசவிச்வாஸரே
வாஸுதேவரே சாரங்கேசர்நீரேக மலா (உசக்)

இப் தன்யாசி ஏகதாளம்

### பல்லவி.

வந்துஸேவை தந்திடவேணுமே
என்னையா மெய்யா
வந்துஸேவை தந்திடவேணுமே

### அனுபல்லவி.

இந்திரனயன்பணியும் பாதா
ஸுந்தரலீலா விநோதா—யெந்தா
இந்திரையணையும் ப்ரிய நாதா
என்னையா மெய்யா வந்து

### சரணம்.

கமலநயனவாஸா தேவா
கமனீயபூஷணதேவ தேவா
அமலனே இந்த தாணிலே நீவா
என்னையா மெய்யா வந்து

அரவின்மேல் படுத்த மன்னு
பரமபுருஷ முகப்ர ஸன்னு
இரணியன்செய்வ தரியாத தென்னு
என்னையா மெய்யா வந்து

கருணஸாகரனென்னும் பேர் போமே
இருணமென் றெல்லோருஞ்சொல்ல லாமே
ஒருநாயகமானவர் நீர் தாமே
என்னையா மெய்யா வந்து

தாஸஜெனர்கட்குச் சொந்தா.
சாரங்கேசதுரையே நித்யானந்தா
காசரக்ஷிதரான கோவிந்தா
யென்னையா மெய்யா வந்து

---

### ஸ்லோகம்.

ஸத்யம் விதாதும் நிஜப்ருத்ய பாஷிதம்வ்யாப்
திஞ்சபூதேஷ்வகி லேஷுசாத்மந:
அத்ருச்யதாமத் புதருபமுத்வஹன்
ஸ்தம்பேஸபாயாம் நம்ருகம் நமாநுஷம்.

---

## விருத்தம்.

அம்புஜவதனனைப் பிரக்லாத ரடிக்கடிபணிந்து ஸ்துதிக்க
ரொம்பகோபத்தோடு விம்மரூபியா யாவிர்ப்பவிக்க
தம்பியைக்கொன்றவன் இவன்தானென்று இரண்யன்பார்க்க
ஸ்தம்பத்தில் நின்றும் வெளியில் புறப்பட்டார் தேவரல்லாம்பயந்து ஓடக
தலைப்பட்டாரே

---

## விருத்தம்

சண்டகனாகிய இரண்யகசுபு அரைந்திடவேஹரி கோபமாகி
எண்டிசையுமதிரவே கெர்ஜனையிட்டவர் ஹாஸ்பமிகச் செய்யும்போது
அண்டமுகடுடைந்துதோ அரவந்தலைசாய்ந்தோ ஆழிபொங்கினதோவென்
தொண்டருடைய துயரமனைத்தீர்த்திடவென்றுநரஹரிரூபமாகினாரே(ன

## கண்ணிகள்.

இ-ம் சாம்போதி ரூபகதாளம்.

உக்ரருடன்வாளை ஓங்கிவெட்டவே அந்த ஸ்தம்பம் பிளந்திட
அக்ரமியை வதைக்கவேணுமென்று அதிகோபத்துடன் புறந்திட
தர்சமேருமந்தரகிரிபோ லக்கனமாவிர்ப்பவித்திட்டார்
இடிபோல் சடித்திடும்பற்களும் பிடியிலடங்கும் இடையுடன்
அடிவைத்த உடனண்டமதிர்ந்திள ஆதிசேஷன் முடிசலித்திட.
வடிவில்சிறந்த ஆளரியாக நெடியில்வந்தாவிர்ப்பவித்திட்டார்
எரிசிதருங் கண்களும் அறைந்து பிசைகின்றகைகளும்
பெரிய அலைபோலலையும் நாக்கும் பெருத்துநெறித்த புருவமும்
சூரியாச் இரணியனை நோக்கிக்கொண்டு வந்தாவிர்ப்பவித்திட்டார்
எட்டுதிக்கு மதிர்ந்திடக் கைகொட்டி செய்யட்டஹாஸமும்
மட்டியான இரண்யனுடைய மார்பைப் பிளந்திட்ட ரோஸமும்
மட்டுமிதமில்லா சிஷ்டதாஸர்மேல் இஷ்டமான விச்வாஸமும்
ஆழமான அசழியென்னும்படி பேழைபோல் திறந்த வாயுடன்
சூழக்கோடி திவாகரன் போலிலங்கும் கிரீடகுண்டலங்களும்
வாழபுவனங்கள்தாழ வஸாரர்கள் வைகுண்டநாதன் வந்திட்டார்
பாக்காக சவசகடககங்கணம் அதக்கங்களும்
ஒங்காரப் பொருளான வரதியுக்ர மானபார்வைகளும்
தாங்காத கோபத்துடனே ஆங்குவந்தா விர்ப்பவித்திட்டார்

---

## பாசுரம்.

எங்குமுளன் கண்ணனென்ற மகனைக்காய்ந்
திங்கில்லையா லென்றிரணியன் றூண்புடைப்ப
அங்கப்பொழுதேயவன் வீயத்தோன்றியவென்
சிங்கப்பிரான் பெருமை யாராயுஞ்சீர்மைத்தே (௨௫)

வாஸவாதிதேவர்கள்பயந்து மூலைக்குமூலை யோடவே
சேசவாரெக்ஷியுமென்று பங்கஜாஸனர் ஸ்துதித்து வாட்டவே
தாஸரான பிரக்லாதரானந்தித்தெதிர் நின்று கூத்தாடவே
ராசற்றப்றபுவென்றரியாமல் யிரண்யனுற்று ஞேக்கி நின்றான்
மோசஞ்செய்து முன்னேடிபேர்னுயிப்போ யென்னெதிரேவா வென்றான்
ஏரங்கசாயென் தம்பிக்கொருரூபம் யெந்தனுக்கொருரூபமோவென்றான்

---

## பிரக்லாதர் துதிப்பது.

இ-ம் காம்போதி-அடதாளம்.

### பல்லவி

நம்பினேன் நம்பினே னரஹரி
என்னைரெக்ஷியும் னரஹரி
நம்பினேன் நம்பினே னரஹரி

### அனுபல்லவி.

தம்பியைகினைந்தேந்தந்தைமனம் நொந்து
தீர்க்கும்போது வந்தித்தக்ருபா விந்து நம்பி

### சரணம்.

நானேயிந்த ஜெகத்துக்கு தெய்வமென்றும்
நடவடிக்கையினாலே ஹகங் கொண்டு
வானறரை ஹிம்ஸிப்பதறிந்து கொண்டு
வந்துவேகமாய் ஸேவைஸாதித்த விண்டுநம்பி நம்பி
ரொம்பபகைத்து கோபமிக மீறி
ரோஷம்வா வார்த்தைகளை உதறி
ஸ்தம்பத்தில் காட்டுவாயாவென்று கூறி
சப்திக்கும்போது ஆவிர்பவித்த ஹரி நம்பி
தனக்குத்வேஷியென்று யென் மேலே
தகாதக ரியங்கள் செய்கை யாலே

அனர்த்தகாலதிவாமரன் போலே
அழகியசிங்கமான நெடுமாலே நம்பி
பாசவினைவைஹரசற்றும் கமலக்கண்ணு
பரமபாகவதாளுக்கு ப்ரஸன்னு
வாஸவாதியர் பூஜிக்கும்மணி வண்ணு
வாஞ்சையுடனெனக்காகவந்தி ரண்ணு நம்பி
அரவிந்தமாவைசேரும் ப்ருணேசர
அயனைநாபியில்பெற்ற ப்ரசுரசா
ஸுரப்ரந்தங்கள் ஸதுதிக்கும் உல்லாஸா
ஸுகுணகரராகிப சாரங்கேசா நம்பி

விருத்தம்.

இதுவென்னரூபம் இதுயென்ன கோபம்
இதவென்ன சவுர்யம் இதுயென்னதஹிர்யம்
இதுவென்னவக்தரம் இதுயென்ன நேத்ரம்
இதுவென்னவிசித்திரம் இதுயென்னகாத்ரம் (உருஎ)

---

விருத்தம்.

வாடாகரசிங்கா நீ வம்புக்கள்பேசியிப்போ
ஒடிப்போகாதே நில்லு உன்னைநான்லிடுவதில்லை-யென்
கூடப்பிறந்தவனைக் கொன்றுயல்லவா நீ தன்னே
மோடியாய்ப்புறப்பட்டாயிப்போமுனிக்திந்தப்பயலுக்காக (ஏருஅ)

---

இ-ம் அடாணு சாபுதாளம்.

பல்லவி.

வெளியில்வாடா நரசிங்கா
வவளியில்வாடா

அநுபல்லவி.

வெளியில்வா யென்னை யெளியோனென்றெண்ணி
ஒளியாமலே நீ பளீரென்ன ஒடி வெளி

சரணம்.

இந்தவேஷத்தோடெந்தன்முன் வந்தால்
சிந்தைகலங்குவேனோ யந்தமதி காரு வெளி
வெள்ளைப்பன்றியாய் மெள்ளவே வந்து
கொள்ளைகொண்டாய் தம்பியை உள்ளம்பதருது வெளி

சிறுவனுக்காக வெருதத் தூணிலே
உறுதியாய்வந்தாய் வருமந் தீர்க்குறேன் வெளி
பிள்ளையென் சொல்லை தள்ளி நடந்தால்
சொல்லாமல்விடுவேனோ பொல்லாத - ஹரியே நீ வெளி
லேசாகஉன்னைநாசஞ் செய்கிறேன்
மோசக்கார சாரங்கேசனே ஓய் வெளி

## பாசுரம்.

பள்ளியிலோதி வந்ததன்சிறுவன் வாயிலோ ராயிரநாமம்
ஒள்ளியவாகிப் போதவாங்கதனுக் கொன்றுமோர் பொறுப்பிலனாகிப்
பிள்ளையைச்சீறி வெகுண்டுதூண்புடைப் பப்பிறையெயிற்றனல்வழிப்பேழ்
வாய்த்
தெள்ளியசிங்க மாகியதேவைத் திருவல்லிக்கேணிக்கண்டேனே (உசுய)

## ஸ்லோகம்.

ஸஸத்வமேவம் பரிதோவிடச்யம் ஸ்தம்ப
ஸ்யமத்யாதனு வீர்ஜிஹாநம் நாயம்நரோ
நாபிம்ருகோவி சித்ரமஹோகிமேதன்ரூம்
ருகேந்திரரூபம் மீமாம்ஸமானஸ்யஸமுத்தி
தோக்ரதோம்ரு விம்மரூபம் ததலம்பயாநகம்
ப்ரதப்தசாமீ கரசண்டலோசனம் ஸ்புரத்ஸடா
கேஸரஜ்ரூம் பிதர்னனம் கராளதம்ஷ்டம்
கரவாளசஞ்சல க்ஷுரராந்தஜிக்வம் ப்ருகுடீமு
கோல்பணம் ஸ்தப்தோற்த்வ கர்ணம்கிரிகந்தரா
த்புதம் வ்யாப்தாஸ்ய நாஸம்ஹனுபேதபீ
ஷணம்திவிஸ்ப்ர சத்காயம் தீற்கபீவர
க்ரீவோருவக்ஷஸ் தலமல்பமத்யமம் ரசந்த
ராம்சுகௌரேச்சரி தந்தனூருஹைரவிஷ்வக்
புஜாநீகசதம் நகாயுதம் துராஸதம்ஸர்வ
ஜேசராயுத ப்ரவேகவித்ரா விததைத்யதானவம்
ப்ராயேணமேயம் ஹரிணோருமாயிநாவதஸ்ம்
ருத்தோநேசமுத்யதேநகிம் யேவம்விம்ருச்
ப்யபததக தாயுதோநர்த்தன் ன்ரூவிம்மம்ப்ர
திதெயித்புகுஞ்சர: அலக்ஷிதோக்நௌபதிதப்
பதங்கமோயதாந் ருவிம்மௌஜஸிஸோஸர
ஸததா நதத்விசித்ரம் கலுஸத்வதாம்னிஸ்
வதேஜஸாயோநு புராபிபத்தமா: (உசுக)

—

## கண்ணிகள்.

இ-ம் காம்போதி ஏகதாளம்.

பிரக்லாதர் சொல்வது

வந்துவிட்டாரே ஸ்வாமி அடங்காத சிந்தையில்கோபத்துடன்
செந்தாமரைப்பாதத்தை அண்ணாநீரும் வந்தனஞ்செய்துய்குவீர்

ஹிரண்யன் சொல்வது.

மந்தபுத்தியுடைய பிரக்லாதா உந்தனைப்போலாகவே
சிந்தையிலெண்ணிக்கொண்டென்னையிப்போவந்தனஞ்செய்யச்சொன்னாய்

பிர

அண்டங்களும்வெடிக்க அதி கோபங்கொண்டு அனல்சொரிய
மிண்டுசெய்திடும் உம்மைக்கொல்ல வந்தாரென் றுஅறியுமையா

ஹிர

சித்தப்பனைக்கொன்றோனை லெஜ்ஜையன்னி பத்திபணிகிராயே-உன்
புத்தியிப்படிப்பேச்சே பிரச்லாதா புத்திரனென்றிருந்தேன்

பிர

பெத்தபிதாவேயென்று உமக்குநான் உத்தவசனஞ்சொன்னேன்
சித்தத்திலெண்ணமலே யென்மேலேநீர் மெத்தகோபம்கொள்ளுநீர்

ஹிர

சீச்சீ அவனெனக்குயெதிரோடா மாச்சரியமாய் வந்தான்
பூச்சிகாட்டுகிராயே ரெண்டுபேரை கூச்சமில்லாமல் கொல்வேன்

பிர

கொல்லுவீரோ அவரைஉமக்கிப்போ வல்லமைரொம்பஉண்டோ
பொல்லாதகாலம் வந்தாலிப்போதுநான் சொல்லுவதுயேறுமோ

ஹிர

நன்றாயவன்மகிமை யெடுத்துநீ சொன்னதுபோருமடா
கண்ணனிருக்குமிடம் பிரக்லாத முன்னமே நானறிவேன்

பிர

கெங்கையைப்பெற்றுகந்த மிருதுவான பங்கஜபுதமுடைய
ஸ்ரீங்காரசாரங்கேசனை மனதினில் தங்கும்படிஸேவியும்

இ-ம் மோஹனம் ஆதிதாளம்.

பல்லவி.

நரமிருகரூபர் வந்தாரே
ரௌத்ரா க்ருதியாய்
நரமிருகரூபர் வந்தாரே

### அனுபல்லவி.

நரமிருகரூபர்வந்தார் சரகமலத்தைதட்டி
இரண்யனெங்கேயென்று பறபறப்புடனுக நர

### சரணம்

அண்டரண்டங் கிடுகிடெங்க— அரனயனும்
கண்டுமிகவுய் நடுங்க
மண்டியெறியும் வாய்கண்ணும் நடை திடுதிடுங்க
கண்டகனுகிய இரண்யன் குடல்பிடுங்க நர
அட்டகாஸப்பண்ணி பிராணி-களைஹிம்சிக்கும்
துஷ்டனைக்கொல்ல தோணி
மட்டத்தமகிமையுள்ள பாகவத சிகாமணி
சிஷ்டபிரகலாதர்மேல் கிருபையாய்சாரங்க பாணி நர

இ-ம் சல்யாணி ஏகதாளம்.

### பல்லவி.

பையரவணையில் துகில்கொண்ட நாதன்வந்தார்— தன்னை
மெய்யாகவே பஜித்தவரைசாக்க வினைத்தார்

### அனுபல்லவி.

வெய்யவனைப்போலே கண்ணும்சிவந்த வாயும்
அதரம்கரம்நகம் வைரம்போல்
கையில்கெதை சங்கம்சக்கரந்தரித்தவர்
அன்புடனே கிருபையாக பிரக்லாதன்பால் பைய

### சரணம்.

வெள்ளைநிறமானகேசம் சந்திரகாந்தி போலும்— கழுத்து
குள்ளமாகவேயிருக்க்கை பரிகம் போலும்
கள்ளமிகுந்தஸுரரை தேய்த்துக்கொல்லுங் காலும்இரண்யன்மேல்
எள்ளளவும்தயவில்லை கோபம்வர மென்மேலும்
புள்ளின்வாகனத்தின்மேல்வரும் ஒய்யாரர்
தெள்ளமுதம்தேவர்க்கீயந்த தயாபரர்
உள்ளத்திருளைவிலக்கும் மகாதீரர்
கொள்ளக்குறைவத்திலங்கும் சாரங்கதரர் பைய

### விருத்தம்,

அந்தநரஹரியைக்கண்டு அச்சமில்லாமலிரண்யன்
யெந்தன் தம்பியைக்கொன்றநீ யெங்கிருந்தாயின்றுவரைக்குமென்றும்
உந்தனையென்கையிற்காட்டிதந்தானிவன்போல்ஸுகிர்தனில்லையென்றும்
சிந்தையில்மகிழ்ந்து கொண்டாடுவான் ஸுதனைஉறவாடுவானே. (உசுரு)

இ ம் காம்போதி-யேகதாளம்.

## பல்லவி.

மைந்தாயென் — சையிலரிணயக்
காட்டி — யிந்தாய்
எந்தனுடைய அருமை — மைந்தா

## அனுபல்லவி.

உந்தனைப்போல்பொருப்பா — ரொருவரில்லை
என்சொல்லைக்கேழ்க் — கில்லை
என்றுநான்செய்தோ — பத்ரவத்துகன்சவில்லை

## சரணம்.

எங்கே ஒளித்திருந்து — வந்தான்
உனக்காக குறிப்பாக — இவன்சாக
என்கரத்தாயுதத்தாலடிப்பேன் — மகிழ்வாக
உத்தமகுண ரூப — ஸ்ரீமானே
சீலனே — பாலனே
பக்திசெய்பவன்போலே எத்தாகசாரங்கேசனே (உசுசு)

## பத்யம்.

பளிபளிபுத்ரகாயி புடுபோகுகாநேவின்னு மெச்சுகொண்டிரா
இலமிவிநீஸாடி — தரணிலெவ்வருலேரு
இககாதுதம்முனின் யிலவதயின்சின — மூடிமுத
லெக்கடஜூஷினை காவிவிதனின் — தெலிமிக
பக்திஜேசியிடு தெச்சினனு — குமாரரெத்னமா (உசுஎ)

---

## கண்ணி.

இ-ம் காம்போதி-ஆதிதாளம்.

சாயத்தை நம்பாம — விரும்
மாயவினை உற்றுப் — பாரும்
மாயவினை உற்றுப் — பாரும்
மாயவினை உற்றுப் — பாரும்
மாயஸம்ஸாரத்தில் — சிக்கி
மாளாதபேர்களே — ஸோகி
மாளாதபேர்களே — ஸோகி
மாளாதபேர்களே — ஸோகி

பக்திசெய்தாலதி ஸாதகம்
பக்தியில்லாதோர்கள் மிருகம்
பக்தியில்லாதோர்கள் மிருகம்
பக்தியில்லாதோர்கள் மிருகம்

நரகரியை உற்றுப் பாரும்
சரணஸேவைசெய்தால் போரும்
சரணஸேவைசெய்தால் போரும்
சரணஸேவைசெய்தால் போரும்

நாராயணனென்று சொல்லும்
நாமரஸத்தை உட்கொள்ளும்
நாமரஸத்தை உட்கொள்ளும்
நாமரஸத்தை உட்கொள்ளும்

கேசவசாரங்கேசன் பாதம்
பூஜித்தால் வைகுண்ட போதம்
பூஜித்தால் வைகுண்ட போதம்
பூஜித்தால் வைகுண்ட போதம் (உகூஅ)

## விருத்தம்.

கொழுப்புடனிருக்குமஸுராளாகிய சந்தனவனத்தில்
செழிப்புடனிருக்கும் குடக்கருவேலமரம்போல் பிறந்தாய்
வழிபடும் விஷ்ணுவாம்கோடாலி உனக்காம்பாகக்கொண்டு யெங்களை
அழித்திடுமுன்னே உன்னை அறுத்திடுவேன்பாரீர் த்ரோகி (உகூகூ)

## விருத்தம்.

பித்துபிடித்தவன்போலிரண்யனவன் பிதற்றும்போது நரஹரியும்
உத்தமகெருடன் ஸர்ப்பத்தைபத்துவதுபோல் கிரஹித்துக்கொண்டாரே

இ-ம் ஸௌராஷ்டகம்-ஏகதாளம்.

## பல்லவி.

லீலையாயுத்தஞ் செய்தாரே—ஹரி
லீலையாயுத்தஞ் செய்தாரே

## அனுபல்லவி.

பாலன்மீதில் பிரீதியினால்
பிர்க்லாதன்மீதில் பிரீதியினால்—ஹரி லீலை

## சரணம்.

சத்திகேடயத்தினாலே ஹிரண்யன்
நித்யானந்தன்மார்பில் குத்தவே

பத்தியிழுத்து முஷ்டியா லிடித்து
பூமியில்தள்ளி காலா லெத்தவே-ஹரி லீலை
வெட்பியெரிபரக்க சிங்கமாக
வந்தால்பயங்கொள்ள மாட்டேனடா
தப்பியைக்கொன்றஉனைக்கொன்றென்ரெத்தத்தில்
தர்ப்பணஞ்செய்ய போரேனடா வென்ன-ஹரி லீலை
மசகமாகவே யெண்ணியவனை
பிடித்திழுத்துமடியில் போட்டுக்கொண்டு
திசையெட்டும்நடுங்க வாசப்படியி
லிருந்தார்சாரங்க தாரியாம் விண்டு-ஹரி லீலை

{ இரண்யன் வரம்வாங்கினதை
இங்கே நிரூபிக்கவேண்டியது }

இ-ம் ஆனந்தபைரவி.

பத்யம்.

காச்யபதனயா பகலில்லை ராத்ரி இல்லையடா
இதுநல்லஹீனஸந்தி யாசத்துவிளங்குமாஷ்டா
திக்கன்று உள்ளுமன்று வெளியுமன்று
உன்வாசல்ப்படியிது கண்டாய்
தேசரும் மாகாசமில்லை பூமியில்லை
பிரகாசமாகவிளங்கும்யென்மடியிது
யோசஞ்செய்யவில்லைமனிதனன்று மிருகமன்று
ரிஷிகேசனுகிய நான் நரகேஸரி திகு
ஆயுதமில்லை ஹஸ்திரமில்லை யென்கைநகம்
நேயமாய்வாணீசன்தந்த வரம்பொய்யில்லை
தூயமுனிசாபத்தால் ஜனித்திருந்த
தீயனுனைக்கொல்ல இனிமேலெனக்குத்
தடையில்லை கேளென்சொல்லை உஎஉ

கண்ணி.

ஏஜெகதீசாயெந்த னபராதத்தை
எண்ணுமலிரங்கியருள் செய்யும்காதா
த்வேஷித்து ஸுதனை ஹிம்ஸித்ததைக்கண்டு
என்னேரேவந்துதித்தீர் மஹாபிரக்யாதா
மோசம்போனேனையா ஸத்துருவென்றிதுவரைக்கும்
மூதமுதல்ப்பொருளே வைகுண்ட பேர்தா
தாஸஜனர்களை தயவுடன் ரெக்ஷிக்கும்
தாமரைக்கண்ணனே செம்பொற்பாதா

வாஸுதேவர் கருணையாகப் பாரும் கி
லேசவினைகளனைத்தையுந் தீரும் சாரங்
கேசா புவியில்பிறந்து மிறந்ததும் போரும்
சாச்வதமாம் பதவிதன்னில்ச் சேரும்

---

### விருத்தம்.

இரண்யகசிபோ உன்னை ரெக்ஷிக்கவந்தேனப்பா
மரணமாம்போது யென்னை மனதினில் த்யானஞ்செய்தால்
சரணபங்கஜத்தையடைந்து சந்தோஷமாயிருப்பார்
தருணத்தில்வந்து முனக்கு தாழ்வுண்டே கண்டுகொள்வாய் உஎச)

### விருத்தம்.

இத்தனை உரைத்துமாரை இருபிளப்பாய்க் கிழித்து
ரொத்தபிந்துகீழ்விழாம லத்தனையும் பானஞ்செய்து
உத்தமபிரக்லாதன் ஜனித்த குடலைமாலையாகத்தரித்து
மெத்தவீராவேசத்தா லோடுவோரசுரர்களைத் தேடுவாரே (உஎரு)

---

### பாசுரம்.

அங்கண்ஞால மஞ்சவஙகோ ராளரியாயவுணன்
பொங்கவாகம்வள் ளுகிருர்போழ்ந்த புனிதனிடம்
பைங்கணனை கொம்புகொண்டு பத்திமையாலடிக்கீழ்
செங்கணளி யிட்டிறைஞ்சுஞ் சிங்கவேழ்குன்றமே. (உஎசு)

### பிர்ம்மாசோல்வது
### விருத்தம்.

ஆலிலையில் படுத்து ஆபாரசக்திபடைத்து
பாலகனுகவென்னைப் பரிவுடனே படைத்து
மேலாம் பதத்தில்வைத்த மேகவண்ணு போற்றியென்று
நாலுமுகர் கரங்குவித்து நடுங்கியே ஸ்துதித்தாரே (உஎஎ)

### சங்கரன் சோல்வது.
### விருத்தம்.

சங்குக்கரந்தரித்த சரண்யனே போற்றி போற்றி
பங்கமில்லாமல் பிரக் லாத்ரைக் கார்த்தாய் பேற்றி
வெங்கணிரண்யனைவதைத்த விமலனே போற்றியென்று
சங்கரன் கரங்குவித்து ஜடுதியில் ஸ்துதிசெய்தாரே (உஎஅ)

### இந்திரன் சொல்வது.

#### விருத்தம்.

அந்தமு மாதியில்லா அரவிந்த பதனேபோற்றி
எந்தாய் செந்திருமகிழும் இணையில்லா புகழோய்போற்றி
ஸொந்தரூபாபோற்றி சுடரொளிவண்ணுபோற்றி
எந்தனைக் காத்தாய்போற்றி யென்றிந்திரன்ஸ்துதிட்டாரே. (உஎகூ)

---

### முனிவர்கள் சொல்வது.

#### விருத்தம்.

தனியொரு முதலாய்நின்ற தடமணிமார்பாபோற்றி
இனியசொல்லுரைத்துக்கார்க்கு மெம்பெருமானேபோற்றி
கனிவில்ல இரண்யனைக்கொன்ற கண்ணனேபோற்றியென்று
முனிவர்கள் கரக்குவித்து முச்யமாய் ஸ்துதிசெய்தாரே

### எக்ஷகாள் சொல்வது.

#### விருத்தம்.

அக்ஷயமாம் ஜெகத்துக்கதிபதியே போற்றி போற்றி
குக்ஷிக்குள்வைஎதுகார்க்கும் கோதிலாக்கனியே போற்றி
வக்ஷவிலலக்ஷ்மியை வைஎதிருக்குமன்ன போற்றியென்று
எக்ஷரர்கள் கரங்குவித்து உன்பமாய் ஸ்துதிசெய்தாரே (உஅக)

---

### கின்னரர்கள் சொல்வது.

#### விருத்தம்.

மன்னுதை இரண்யனை மார்பிளந்து மணிக்குடலை
நன்னுக மாலையாகத் தரித்தநவி நாக்ஷரபோற்றி
பொன்னுநந் திகிரிக்கையா புண்ணியா போற்றியென்று
கின்னரர் கரங்குவித்து சேவளா ஸ்திசெய்தாரே. (உஅஉ)

### கெருடர்கள் சொல்வது.

#### விருத்தம்.

இருட்குமாஞாலத்திலிடுக்கந்தீர்த்து இரண்யனைவதைத்து
அருடரவேணுமென் றவதரித்து நரகரியாய்
பொருடருகின்றஸத்வ மூர்த்தியே புனிதாவென்று
கெருடர்கள் கரங்குவித்து கெம்பீரமாய் ஸ்துதித்தாரே. (உஅ௩)

## கெந்திருவர் சொல்வது.

### விருத்தம்.

மந்தரகிரிமத்தாக வாசுகிதாம்பாய்ச் சுற்றி
அந்தமாம் க்ஷீராப்தியை கடைந்து ஆனந்தமாக
ஸங்கிரியாயுதத்து ஸுரர்க்கமுதளித்தீரென்று
கந்திருவர் கரங்குவித்து கடிகியே ஸ்துதிசெய்தாரே (உஅச)

---

## பன்னகர் சொல்வது.

### விருத்தம்.

உன்னிதநாபிகமலத்தில் சதுர்முகனைப்பெற்று
நன்ஞ்நாலுவேதத்தை உபதேசஞ்செய்தாய் போற்றி
குன்றுபோலிரண்யனைக் கொல்லவந்தாய் போற்றியென்று
பன்னகர்கரக்குவித்து பணிந்தவாள் ஸ்துதிசெய்தாரே (உஅரு)

---

## கிம்புருடர் சொல்வது.

### விருத்தம்.

அன்புருமடியாரைக் காக்கும் ஆரணைபோற்றிபோற்றி
செம்பெருந் தடங்கண்மாலே ஜெகதீசாபோற்றுபோற்றி
கெம்பீர ஸிம்மாய்வந்த கேசவாபோற்றிபோற்றி
கிம்புருடர்காரங்குவித்து கெட்டிமாய் ஸ்துதிசெய்தாரே (உஅசு)

---

## ஸித்தர்கள் சொல்வது.

### விருத்தம்.

நித்தியவஸ்துவான நிர்ம்மலா போற்றிபோற்றி
உத்தமபதவிதரும் உயர்பரம்பொருளேபோற்றி
ஸத்திய ஸங்கல்பனே சரண்பனே போற்றியென்று
ஸித்தர்கள் கரங்குவித்து ஸேவித்து ஸ்துதிசெய்தாரே (உஅஎ)

---

## வித்தியாதரர்கள் சொல்வது.

### விருத்தம்.

பக்தியாய்ப்பணிந்தபேர்கள் பவவினை துடைத்தாய்போற்றி
முக்தியை அளித்துகார்க்கும் முகுந்தனே போற்றிபோற்றி
யுக்தமாய் இரண்யனுடல் பிளந்திட்டாய் போற்றிஸர்வ
சக்தனேயென்று வித்தியா தரர்ஸ்துதிசெய்தாரே (உஅஅ)

---

## விருத்தம்.

அந்தரவீதியில் நிறைந்திநிக் தேவரெல்லாம்
துந்துபிவாத்யமுழக்கி புஷ்பமாரிப்பொழிந்து ஸ்துதிக்க
அந்தரஹரியைப் பார்க்கபயந்து க்ஷீராப்தியில்சென்று
இந்திரையென்னுந்தாயே சரணமென்றார் உன்நாதன் கோபத்தைத்
தணிக்க வாருமிது தருணமென்றாரே

## கண்ணிகள்.

இ-ம் எதுகுலகாம்போதி ஆதிதாளம்.

வாஸவனயனுரைத்ததைக்கேட்டு பூமாது
கேசவன் கோபத்தடக்க வாராளப் போது
சுட்டிமுகப்பட்டம் ப்ரபைதிலகம் ஙிகஙிகென்ன
மட்டத்தாபரணம் வங்கிபதக்கம் பளபளென்ன
அந்தமான இடையிலொட்யாணம் ஜ்வலிக்க
செந்தாமரைபாதத்திவ்சிலம்பு கலிக்க
ஸௌந்தரமுகத்தாள் சாரங்கேசனைக் கண்டாள்
இந்தகோலம் ஒருநாளும் கண்டதில்லை யென்றாள்
இவரெந்தனுட பர்த்தாயில்லையென்றொதுங்கி நின்றாள் (உஅகூ)

## விருத்தம்.

இந்தவிதம்பூமாது பயந்தவளா நிற்கும்போது
வந்துஸத்யலோகநாதன் அஸுரகுலோத்தமனிடத்தில்
உந்தனுக்காய்வந்த நரசிங்கன்கோபந் தணிப்பாயென்ன
வந்தனஞ் செய்துகொண்டு பிரக்லாதர் வந்திட்டார்ஸ்வாமி ஆனந்த
மாயெடுத்துக் கொண்டிட்டாரே

---

## கண்ணிகள்.

இ-ம் நாதநாமகிரியை ஏகதாளம்.

பாலன்பயங்கொள்ளுவா னென்று
மேலிருந்த ரெத்தந்துடைத் துண்டு—வி
சாலமான வாய்மூடிக் கொண்டு—குடில்
மாலையைமறைத்தார் விண்டு
ஆசையுடன் கையா லணைந்து—சாரங்
கேசன் முத்தங்கொடுத்து மகிழ்ந்து—கி
லேசந்தீர்ந்ததென்று நினைந்து—வீரு
வேசமடங்கினார் கிருபா வளிந்து (உகூய)

## விருத்தம்.

இந்திராபயந்தெளிந்து வந்தவளருகில்சிற்க
அந்தரங்கத்துடனவளை அணைத்து மடிதன்னில் வைத்து
மந்தஹாஸத்துடனே ஹரியவரிருக்கும்போது
சிந்தையில்மகிழ்ந்து பிரக்லாதர் ஸ்துதிசெய்குவரோ (௨௬௧)

## ஸ்லோகம்.

ப்ரம்மாதயஸ்ஸுரகணமுநயோதஸித்தா
ஸத்வேகதாநமதயோவச்ஸாம்ப்ரவாஹை:
நாராதனம் புருகுணைரது நாபிபேபு:
கிந்தோஷ்டு மர்ஹதி ஸமேஹரி ருக்ரஜாதே: (௨௬௨)

இம் புன்னாகவராளி ஆதிதாளம்

## பல்லவி

நாராயணப்ரபு நீரோசரணமையா
காரணவஸ்து வானோரோ

## சரணம்,

நீரஜநேத்திரரோ நீர்வி சாரரோ
வாரிதிசயனரோ வைகுண்ட வாஸரோ
மாரஜெனகரோ மகானு பாவரோ
கனசவஸனரோ கம்பு கண்டரோ
சாமளவர்ணரோ சங்கு சக்கரதாரரோ
கோமளசரணரோ குதஹலப் ப்ரியரோ
ஏங்கும்நிறைந்தோரோ மங்களாகாரரோ
திங்கள்வதனரோ கெங்காஜெனகரோ
மூனுகுணமத்தோரோ தூணிலுதித்தவரோ
தீனசரண்யரோ வானோர்க்கமு தீந்தாரோ
ஆலில்துயின்றவரோ லீலாமனுஷர் நீரோ
சதுர்முகனைப்பெற்றோரோ மதுஸூதனவித்யரோ
அப்ரமேயரோ ஆபத் பாந்தவரோ
சோப்ரகாசரோ சோமஸூர்யாக்னி நீரோ
[illegible]கத்தருநீரோ ககவாசனரோ
கௌஸ்துவாபரணரோ ஸஹஸ்திர நாமரும்நீரோ
உந்தனுட்மகிமை உரைக்கயென்றால் தரமா
செந்திருநாதாயிங்கே வந்தீரோ பரந்தாமா
எந்தெந்த அபராதம் செய்திருந்தாலும் பெத்த
மைந்தனைக்பாவித்து மகிழ்ந்துகிருபையாய்ப்பார்த்து

அந்தரங்கபக்தி வைராக்யத்தைக் கொடுத்து
சொந்தபக்தகோடியில் சேர்த்து ரெக்ஷிக்கவேணும்
நித்யலெக்ஷ்மிப்ராணேசா ஸத்வகுணநிர்த்தோஷா
பக்தர்மீதில் விச்வாஸா உத்தமசாரங்கேசா (உகங)

## பத்யம்.

நீச்ரஹாங்கணபூமி நிடலம்பும்ரோவங்க
மோதிஞ்சி நித்யம்பும்ரொக்கடேவி
நீமங்களஸ்தவ நிகிலவர்ணம் புலுபலுமா
ருநாலுகம்பலு கடேவி நீயதின்முலுகவிரவிகில
நிர்த்தியம்புலுபுரிய பாவமுனஸமர்ப்பிப்ப
டேவி-நீபதாம்புஜமுல நிர்ம்மலஹிரதயுடை
சித்திஞ்சிமக்குவஜிக் கடேவி நீகு
நின்னுசெவுலா ரவினடேவி நீகுஸேவ
ஜேயராடேவி பிர்ம்மம்பு ஜெந்தகலடே
யோகியைனந்தபோவ்ரத யோகிய்யின
வேதியையனமஹாத்ம வேதியைனு (உகச)

## விருத்தம்

பங்கஜலோசனு பரமபுருஷாபதிதபாவனு பவநாசகா
செங்காஜனகா கெருடத்வஜாகெஜேந்திர வரதா அதிஸுகுணு
மங்கைமணவாளா மணிவளைத்தோளா மகரக்குழைக்காதா திங்கள்வதனு
சிங்கவடிவாகவே இங்கவதரித்த உம்மைஸ்துதிசெய்ய யென்னால்தரமா

## ஸ்லோகம்.

ஓம்நமோபகவதேதுப்யம்புருஷாயமஹாத்மனே
ஹரயேத்புதஸிம்ஹாயப்ரும்மணேபரமாத்மநே
நைகாந்திநோமேமயிஜாத்விஹாஸிஷோஹ்யா
சாஸதேமுத்ரஸவைபவத்விதா:
த்தாபிமன்வந்தரமேததத்ரதெசித்யேச்
வராணமனுபும்க்ஷவபோகான்.

## ஸ்லோகம்

தத்தேரஹஸ்ததம்நமஸ்துதிகர்மபூஜா:
கர்மஸ்ம்ருதிசசரணயோச்ரவணம் கதாயாம்
ஸம்ஸேவயாத்வயி விநேதிஷ்டங்கயாகிம்பக்திம்
ஜெனை; பரமஹம்ஸகதௌலபேகா (உகரு)

——(:o:)——

3-ம் பிபாஸ-சாபுதாளம்.

### கண்ணி.

தேவதேவ ஜெகத்பிதேஹரே தேவதேவ ஸ்ரீயப்பதே
தேவதேவ மருணுவிதேத்ராகி தேவதேவதயாநிதே தேவ
கமலலோசனு கபுஸ்துவாபரனு அமரவந்திதசரணு
நிமிஷத்தில்நரஹரி ரூபமானதமரஜோ குணரஹிதருன தேவ
ஆலில்சிறுபாலருய் சயனித்தீர்னுலுமுகனை நாபியினில்பெற்றீர்
மேலாம்வேதத்தவர்க்குபதேசித்தீர் ஸதூலஸூக்ஷமமெங்கும் வியாபித்தீர்
தாஸபோஷனு தரணியுத்தாணுகிலே சபவவிமோசநா-பிர
காசமாம்விளங்கும் ஜெகன்மோகனுசாரங்கேசாமிர்தமிர்துபாஷனு தேவ

### விருத்தம்.

நாரர்யணனே நரமிருகாகிருதியைக்கண்டு பயப்படவில்லைமகன் நான்
கோரமர்கிய ஸம்ஸாரஸாகரத்தைக்கண்டு மிகவும்பயப்படுகிறேன்
வேருகவே நினைக்காமலென் சிரவில்கரம்வைத்தருள் செய்தபடியால்
தீராதபிரவிபிணி தீர்ந்துதையா ஸ்ருஷ்டிஸ்திதிலய காரணபிரபுவே

### கண்ணிகள்.

இ-ம் தோடி சாபுதாளம்.

அம்ஸவாசனரைப்பெற்ற ஜெகத்காரணு
ஸம்பாரம்யினைத் துடராமல்காரும் நாரணு
பக்தியில்லாதவன் ப்ராமணனுனுலும் நிகிருஷ்டன்
பக்தியொடொத்த நீசனவனே உத் கிருஷ்டன்
அன்னை கெற்பத்தில்தானே நாரதரென்னே
நன்னுபதேசஞ் செய்து பக்தனுக்கினுரன்னே
இந்தஜெகத்துவாழ்வைமெய்யென்றெண்ணிடுவேனே
உந்தனுடை பக்தா ளுடஸேவைவிடுவேனே
கோரஸம்ஸாரநதிக்கக் கரையில்ருப்போரே
நீரேதயைசெய்து கரையேற்றும் மாதவரே
ஆசாபாசமத்துந்தனைப் பணிந்தேன் லெக்ஷ்மீசா
மாசற்றவைகுண்ட வாஸனே சாரங்கேசா (உக

இ-ம் கரகரப்பிரியை ஆதிதாளம்.

### பல்லவி.

என்கவலையைத் தீர்த்தருள் நாதனே
என்கவலையைத் தீர்த்தருள் நாதனே

### அனுபல்லவி.

சங்கசக்கரதரா ஸ்ரீங்கார ஸ்ரீதரா
மங்களவனமா லலங்காரா

சரணம்.

தந்திராஜவரதா செந்தாமரைப் பாதா
சந்திரபிரகாச வதனசோபிதா என்
சாச்வததர்ம்மமே மாசத்த பிர்ம்மமே-இ
லேசத்தைதீர்த்த நாவிம்மமே என்
இந்திரன்பிர்ம்மா சிவனந்தமான தேவர்கள்
வந்தனம்செய்யும் தேவதேவா என்
காசம்புமலர்மேனி வாஸுதேவனே தூணில்
நேசமாயுதித்த சாரங்கபாணி என் (உகஅ)

இ-ம் புன்னாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

பதிதபாவனா பக்தவத்சலா
பாப-வ மோசனா

அனுபல்லவி.

கெதிவேறில்லை யெனைக்காத்தருளும் *செம்பீரவசனா பதி

சரணம்.

பாணியிலமூர்தமெடுத்து தேவர்களுக் கீந்த பரந்தாமா
தூணிலுதித்தடியேன் தன்பந்தீர்த்ததுவும் ப்ரயாஸமாமா பதி
பக்ஷிவாகனா பரமகல்யாணா பங்கஜலோசனா
குக்ஷியிலகிலாண்டகோடி ஜெந்துவைவைத்துரக்ஷித்தீர் ஜகன்மோகனாபதி
தேவதேவனே லெக்ஷிமிநரஸிம்மா ஸ்ரீமந்நாராயணா
கேவலனானெயெனைக் காத்தருளவந்தீர் கமலசரணா பதி
விதிசிவனிந்திராதி தேவர்பணிந்து ஸ்துதி செய்யுமேகச்யாமா
மதிஹீனனாகிய யென்னாலும்முடைய மகிமை யறியத்தரமா பதி
..வர்கள்க்கதிநேசா மாசத்தமகாராஜா சாரங்கேசா
..வலைக்குளகப்படாமலென்னைக் காரும்ஸர்வேசா பதி (உகக)

இ-ம் கல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

கண்டுகொண்டேன் ஹரியே
உந்தனைநேரே கண்டே னரஹரியே

சரணம்.

அண்டர்முனிவர்கள் கண்டானந்தத்துடன்
நின்றுஸ்துதிக்கின்ற புண்டரீகபாதம்
தண்டைசிலம்புடன் ரெண்டுமிலங்கிட
கொண்டல்மேகவண்ணரான அண்டஜவாகனாஉம்மை கண்டு

தந்தைதாய்குருதெய்வம் மென்றிருந்த
எந்தன்மேல்சிந்தை யிரங்கியே
அந்தரங்கமாயிந்த ஸமயத்தில்
பந்தவினையைத்துடைக்கவந்தஇந்திரேசாஉம்மை கண்டு
வாரிதிசயனு நீரஜநயனு
ஸாரமாம்வசனு அபாரகுணகனு
கோரபவத்திலே சேராமல் காத்திடும்
தீராஸுகுமாராயிரம்பேராசாரக்கதரொய்யாரே கண்டு (௱)

## விருத்தம்.

இந்தப்ரகாரம் பக்தனிரஞ்சியே ஸ்துதிக்கும்போது
ஸந்துஷ்டராய் கோபமடங்கியொரு வசனஞ்சொல்வர்
அந்தரங்கமுள்ள ஸுரோத்தமனே உனக்குமகளாமுண்டாகக் கடவது
எந்தவரமவேணுலுங் கேளென்றார் ஒருமங்வந்தரம் பூமியைநீ ஆளென்றாரே

## ஸ்லோகம்.

போகேநபுண்யம்குசலேனபாபம்களேபரம்
காலஜேவேனஹித்வா கீர்த்திம்விசுத்தாம்
ஸுரலோகதோம்விஸ்தார்யமாமேஷ்யவிமுக்தபெந்த:
யயேதத்கீர்த்தயேன்மஹ்யம்த்வபாகேதமிதம்நா:
த்வாஞ்சமாஞுசஸ்மரன்காலேகர்மபெந்தாத்விமுச்யதே
ப்ரக்லாதபத்ரபத்ரங் தேய்ரீதோஹங்தேஸுரோத்தமா
வரம்வ்ருணீஷ்வபிமதம் காமபூரோஸ் மஹமந்ருணும்
மாம்ப்ரணீத ஆயுஷ்மன்தர்சனம் துர்லபமஹிமே
திருஷ்டவாமாம் நபுநற்ஜந்துராத்மாநந்தப்துமர்ஹதீ (௱௧)

## விருத்தம்.

பக்தியைத்தவிரமற்ற விஷயத்தைக்கோருமலே
புத்தியுள்ள ப்ரக்லாதனிரண்யனுக்கு நல்லகெதியை கேழ்க்க
உத்தமனே உனைப்பெற்றிருந்த இவன்பதமடைவதுமெத்தஅரிதோஇதனை
உத்துப்பாரென்பார் ஸிம்மாஸனத்தின் மேலேறென்றாரே (௱௨)

## ஸ்லோகம்.

மமாப்ர [illegible] யோத்பக்தியா ஸக்தம் காமேஷுதைர்வணா:
தத் [illegible] கபீதோ விற்விண்ணோ விமுமுருக்ஷுரு-ாச்ருத:
பருத்யலக்ஷணஜிச்ஞாஸு: பிருத்யம் காமேஷுசோதயன்
பவான்ஸம்ஸார பீஜேஷுஹ்ருதய க்ரந்திதப்ரபோ (௱௩)

## விருத்தம்.

உந்தன்தந்தை வயத்திலுகந்துநீ யுதித்தபடியால் அவன்
ஸந்ததி இருவத்தொன்றும் ஜடுதியில் கரையேறிற்று
இந்த இரண்யனுக்கு நீ இயல்புடன் க்ரயைசெய்யென்ன
ஸந்தோஷமாகியந்த சாதுவும் ஸம்ஸ்கரித்தார் (கூஅ)

இ-ம் ஸாரங்கா ரூபகதாளம்,

## பல்லவி.

இரண்யனுக்கு க்ருத்யஞ் செய்தார்—ப்ராக்லாதஸ்வாமி
இரண்யனுக்கு க்ருத்யஞ் செய்தார்

## அனுபல்லவி.

சரண்யனுடைய திவ்ய சரணாரவிந்தத்தை
ஸ்ரணயமாய்த்யானித்து நேசமாய்த் தன்னைப்பெற்ற (இரண்)

## சரணங்கள்.

கெங்காதிபுண்யா தீர்த்தத்தால் ஸ்தானஞ் செய்துவைத்து
தங்சப் பல்லாக்கி லெடுத்து
அங்கிதலைப்பாகா பரணமலங்கரித்து
சங்கமிருதங்க துந்துபி வாத்யங்கள் கோஷித்து (இரண்)
வேதியரானவர்கூடி வேதத்திற்சொன்ன
நீதிவசனப் படி
கோதற்ற மந்த்ரத் துரைத்து மிகக்கொண்டாடி
தாதையுடலைச் சிதை தன்னில்வைத்து மூடி (இரண்)
அக்கினியைச் சொரிந்து ஸ்நானன்செய்து
மிக்கமன துகந்து
தக்கபடிக்கிதில தர்ப்பணமும்புரிந்து
சக்கரம்சங்கு சாரங்கந் தரித்தோன் பாதம்பணிந்து இரண் (கூகு)

## விருத்தம்.

வாராய்சதுர்முகனே வரங்களை யஸுராளுககு
தீரமாய்க் கொடுத்துவிட்டு திரும்பிநீ முழிக்குகின்றாய்
கோரினவரனைம் இனிமேற் கொடாதேநீயென்று அந்த
காரணனுரைக்கக்கேட்டு நான்முகன் ஸ்துதிசெய்வாரே (கூசு)

இ-ம் பியாகு ரூபசதாளம்.

## பல்லவி.

தந்தையே உந்தன்மகிமை யெந்தனாலுரைக்க தரமா

## சரணம்,

இந்திரன் யெமன் குபேரன் வருணன சந்திரசேகரன் தேவரும்
உந்திமலரிலுதித்த நானும் வந்தனஞ் செய்கிரோம் பாரும் (தந்)

அண்டரண்டகோடி ப்ரும்மாண்டங்களை உண்டுமிழந்த ஸ்ரீநாதனே
கண்டகனிவனுயிரை வதைக்கவென்று வந்தஞானபோதனே (தந்)
விந்தை தன உன் சரித்திரத்ததை விளம்பிமுடியுமோ நாரா
கந்தர்ப்பனைப்பெற்ற மன்னு கண்பாரும் ஜெகத் காரணா தந்)
ஆசபாசமற்றுந்தனைப் பூஜித்த தாஸர்கள்க்கதிநேசா
கேசவானுன்செய்தஸ்திக் குகந்தருளும் சாரங்கேசா (தந்)

இ-ம் நாதநாமக்கிரியை ஆதிதாளம்.

## கண்ணிகள்.

பங்கஜன் நேத்திரரை—திவ்ய
சங்கு சக்ரங் கேதாஹஸ்தரை
மங்கையை மாரில் தரித்தோரை—ஸேவித்
தங்கம் குளிர்ந்த ப்ரக்லாதரே
ஆவிக்குள்ளாவியாய் விருரை—உந்தி
புவியிலயனைப் படைத்சோரை
பாவி இரனியனைக் கொன்றோரை—கண்டு
ஸேவித்திருந்த ப்ரக்லாதரே
ஆரகிரீட குண்டலதரரை—கே
யூரபீதாம்பர சோபிதரை
பூரணப்ரம்ம மானவரை—கண்டு
நேரேபணிந்த ப்ரக்லாதரே
சந்திரபிம்ப முகத்தோரை—க்ருபா
விந்து ஸ்ரீமந் நாராயணரை
அந்தரங்கமா யுதித்தோரை—கண்டு
வந்தனஞ் செய்த பிரக்லாதரே நாஅ

---

# பட்டாபிஷேகம்.

## கண்ணிகள்.

இ-ம் பந்துவராளி ஏகதாளம்

மாசற்றமனமுடைய காச்யபௌத்திரனை—ஸிம்
மாஸனத்தில்வைத்துமிக ஸந்தோஷித்தார் ஸ்வாமி
ஈசன்வாஸவனும் பங்க ஜாஸனளகேசனும்
தேஜஸுடைய ப்ரக்லாதருக்கு பூஷணஞ்சாத்தினர்
ஆதிமூலராலயத்தை ப்ரதியாய் பரதக்ஷணஞ்செய்த
[illegible]தில் சிலம்பு கொலுசு நீதியாய்சாற்றினர்
உத்தமபீதாம்பரத்தை மெத்த சோபிதமாயிடையில்
அத்தியந்தம் ப்ரியத்துட னுடுத்தினர்

ஆணிமுத்தாரம் பதக்கம் நானாவிதரெத்னபனிகள்
மேனிஸப்பந்தத்தில் துலங்க வாணீசன்சாத்தினார்

பன் ஜநாடன்க்கு ஸதா கைங்கர்யஞ்செய்யுர்கைகளுக்கு
கங்கணங்தே டாபாஜிபந்து சிருங்காரஞ்செய்தார்

ஆதரவுடனசஸ்ரீநாதன் திவ்ய சரித்திரத்தைகேழ்க்கும்
காதுக்கு ரெத்னகுண்டலங் தோதாய்சாத்தினார்

பூம்படுக்கையான நல்ல பாம்பின்மேல்படுத்த நாதனே
காம்பீர்யத்தோடு ஸ்துதிக்கும் வாய்க்குதாம்பூலம்கொடுத்தார்

கொஞ்சஸுகமான இந்தப்ரபஞ்சம் மித்தையென்றறிந்த
கஞ்சவிசாலநேத்ரத்துக் கஞ்சனமிட்டார்

மல்லிகைமுல்லை சம்பங்கிநல்ல கஸ்தூரியரளிஜாஜி
யெல்லாவகை புஷ்பஞ்சாத்தி உள்ளம்பூரித்தார்

சங்கதந்துபிவேணு மிருதங்கவாத்யங்கள்கோஷிக்க
ஸங்கீதத்துடனே தேவபெண்கள்நடிக்க

தும்புருநாரதர்பாடினார்உம்பர்முனிவர்கொண்டாடினார்
செயபீரமாய்ப்ரக்லாதர் செமபொன்மௌலி சூடினார்

கெங்காதிபுண்யதீர்த்தங்களை வரவழைத்து
மங்களமாய்தேவரபிஷேகங்கள் செய்திட்டார்

பொங்கிமகிழ்ந்து அனேக ஸ்ரீங்கார ஸுமங்கிலிகள்
செங்கையாலெடுத்து மங்களாரத்தி செய்தார்

உன்னிதநரஸிம்மர்க்கும் சின்னப்ரக்லாதர்க்குமங்களம்
ரன்றாய்தைச் சொன்னோர் கேட்டோருக்கு மங்களம்

பொங்குங்குடந்தைவாஸர்க்கு ஸ்ரீங்காரசாரங்கேசர்க்கு
மங்கை கோமளவல்லிக்கு மங்களம் ஸதா மங்களம்

## விருத்தம்

இஷ்டமாய்விளங்கும்பக்த ப்ரக்லாதருக்குகந்து
பட்டாபிஷேகஞ்செய்து பகவானந்தர்த்தானமானார்-பர
மேஷ்டியாம் சதுர்முகனும் வாணியோடு ஸத்தியலோகஞ்சேர்ந்தார்
மட்டற்றசேனைசூழ பகவான் தன்னகலா யடைந்தார் (ந...)

இ-ம் நாதநாமக்கிரியை ஆதிதாளம்.

## பல்லவி.

பூமியாண்டாரே ப்ரக்லாதர்— தர்ம்மநீதியாய்
பூமியாண்டாரே ப்ரக்லாதர்

## அநுபல்லவி.

ஸ்வாமியையஸதா ஸ்மரித்து
ஸர்வேசன் ஸமமாய்ப் பார்த்து
பாமரஸங்கத் தோஷித்து
பக்திவைராக்யத்தோ டொத்து பூமி

## சரணம்.

திங்கள்மும்மாரி வருஷிக்க
எங்கும்போகஞ் செழிக்க
மங்களவாத்யங் கோஷிக்க
புங்கவர்கள் சந் தோஷிக்க
ஸ்ரீங்காரமாய் மகி லாட—கிரிஸ்ர்ப்பமும்
சங்கையன்றி சஞ்சரித்திட—புலியும்பசுவும்
தங்கியொருதுறையில் நீர் பருகிட—நதிகளெல்லாம்
செங்கரும்புச்சாருபோ லோட—பாபங்களோட
மங்கைரம்பை யூர்வசிமேனகைகளாட—தம்புருநாரதர்
அங்கம்புளத்துடனரி நாமகீர்த்தனம்பாட—அஷ்டலக்ஷ்மியும்
பொங்கிமகிழ்ந்தவர் ப்ரபாவத்தைமிகபுகழ்ந்திட அந்தணரெல்லாய்
தங்கள்தங்களுடையவிதி தப்பாமல் செய்திட—தேவர் கொண்டாட
மங்களமாம்கவரி போட
வெண்குடைநிழல் செய்திட
துங்கக்கியாதியுடன் கூட
செங்கோல்பிடித்து செலுத்திட பூமி
ஈச்வரன் மாயைக் குறித்து
தேசஜெனங்களைப் பார்த்து
மோசம்போகநீரென் றுரைத்துக்
லேசவினைகளைத் தீர்த்து
நேசவாக்யங்க ளாலே—உரைத்து அரைக்
காசுக்கு உதவாதிந் துடலே—இதின்மேலே
ஆசைவையாதிருக்கவென் போலே—இருந்தீராகில்
சாச்வதபதந் தனிலே—வாழ்ந்திடுவீர்மன்
மாசற் [illegible] சதுர்ப்புஜம் சங்கசக்கரமுண்டு—கிரீடகுண்டலம்
[illegible]ள்ள பீதாம்பரத்தை தரித்துகொண்டு கைங்கர்யஞ்செய்து
வா[illegible]தேவமூர்த்தி யெதிராகவே [illegible]ன்று—ஸாமவேதத்தால்
ஆசைபோ[illegible] துதித்தானந்தமுதைசெவியாலுண்டு ஸுகிப்பீரென்று
மா[illegible]முக உல்லாஸர்
[illegible]ணையற்ற ப்ரகாசர்
பூஸாரர்மீதில் விஸ்வாஸர்
கேசவசாரங்கேசர் தாஸர் பூமி

## விருத்தம்.

தன்னுடைய மனதுச்சேர்க்கத் தகுந்தகுணசீலவதியாம்
கன்னிகையை விவாகஞ்செய்து கருத்தை ஹரியிடத்தில்வைத்து
பன்னுகலைப்பயன் தெரிந்த விரோசனனை ஸுதனாய்ப்பெற்று
இன்னிலத்தோரீடேற இனியவழி காட்டினாரோ (கா௨ய)

இ-ம் பைரவி அடதாளம்.

### பல்லவி.

பக்தியாக புவியில் வஸித்தார்—ப்ரக்லாதர்
பகவானையே த்யா னித்தார்

### அனுபல்லவி.

முக்திக்கிஸ்ராத ர்களுடனேகூடி
மூலமுதல்ப்பொருளை மிக்ககொண்டாடி பக்தி

### சரணம்.

உள்ளங்கரைந்துருகிப் பாடுவரவரோம்
நமோநாராயணா வென்னுவர்
வள்ளலாகியமாதவன் கேசவன்கதை
யமுதைச் செவியாலுண்ணவர் பக்தி

தேம்பித்தேம்பியே வாய்விட்டழுவரவர்
தேகம்பரவசமா யாடுவர்
பாம்பின்மேல் பள்ளிகொண்ட மாயவனை
ப்ரதக்ஷணமாய்வந்து கொண்டாடுவர் பக்தி

இத்தரையில்ஸூக மித்தையென்றுசொல்லி
தத்துவத்தை யெல்லோர்க்கும் போதிப்பர்
பெத்தமாதாபிதாபந்து குருதெய்வம்
புத்திரன் ஸ்வாமியென்று ஸாதிப்பர் பக்தி

நேசமாக சாரங்கேசருக்கு தாஸனுங்கோ
ளெல்லோருமென்றுரைப்பார்
பாசவலையைத் தறிக்க உபாயமிதுவே
வேறேயில்லையென்றுரைப்பார் பக்தி

### கண்ணிகள்.

### பலஸ்ருதி

இ-ம் ப்யாகு-ஏகதாளம்.

உத்தமப்ரக்லாத சரித்திரம் உரைத்தோர் கேட்டோர்
மெத்தமகிழ்ந்து பரமபத மடைவார்
ஸத்துக்களைச்சேருவார் பக்திதன்னைக்கோருவார்

இத்தரையில்ஸுகபோகத்தை மாறுவார்
இத்தனைநாள்பட்ட துன்பங்கள் திருவார்
ஸத்தியமாகவே மதி தேருவார்
எங்குமுளன் கண்ணனென்று மகிழ்ந்துரைத்தார்
அங்கந்த தூணில்வர ஸ்துதித்தார்
சிங்கரூபமானோனைக்கண்டு நேரேஸேவித்தார்
சங்கையில்லாமலிருந்து ஸுகித்தார்
தோஷதுர்க்குணம் நீங்கும் சாச்வதமான
சாரங்கராஜன் க்ருபை மிகத்தேங்கும்
பிரகாசமாகவே நல்லறிவுவிளங்கும்
கிலேசமில்[illegible]லானந்தம் பொங்கும் நாயக

---

## மங்களம்.

இ-ம் நாதநாமக்கிரியை ஆதிதாளம்

### பல்லவி

மங்கைமணவாளருக்கு ஜெயமங்களம்—பக்தர்க்காய்
சிங்கரூப மானவர்க்கு சுபமங்களம்

### அனுபல்லவி

சங்குசக்கர ஹஸ்தருக்கு யெங்கும் நிறைந்தசுத்தருக்கு
மங்கள குணாஸ்திக்கு -மங்களம்

### சரணம்

மீன்மாயுதித்தவர்க்குத் தானேகுன்றைத்தாங்கினோர்க்கு
வானோர்க்கமுதளித்தோர்கரு மங்களம்
போனபூமியை கிரஹிகித்து ஈனனைவதைத்தவர்க்கு
தூணிலவதரித் தோர்க்கு -மங்களம்
வாமனவதாரருக்கு க்ஷேமராம் பார்க்கவராமர்க்கு
பூமதெசரதஸுதர்க்கு மங்களம்
பீமபராகரமமுள்ள முஸலஹலாயுதருக்கு
சாமளவர்ண கண்ணனுக்கு -மங்களம்
மாசற்றகலிக்கருக்கு ப்ர காமாம் பவுத்தருக்கு
தாசாகளைக் கார்த்தவர்க்கு மங்களம்
ஆசையோடனந்தன்மேலுல் லாஸமா படுத்தவர்க்கு
[illegible]ரங்கேசதுரை யானவர்க்கு -மங்களம்

---

பிரக்லாதசரித்திரம்
முற்றிற்று.

# விளம்பரம்.

அடியிற்கண்ட சரித்திரங்கள் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிக்கொள்ளவும்.

| | |
|---|---|
| சீதா கல்லியாணம் | நம்மாள்வார் சரித்திரம் |
| குசலவ சரித்திரம் | வத்ஸலா கல்லியாணம் |
| துர்வாஸ சரித்திரம் | காளிங்க சரித்திரம் |
| ஆண்டாள் சரித்திரம் | ருக்மணி கல்லியாணம் |

நரகாஸுர விஜயம்.

☞ வேம்பு அம்மாள்;

சாரங்கபாணி சன்னதிதெரு,

கும்பகோணம்